
சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட்



வருடாந்த அறிக்கை

2017

வளர்ச்சியை வழங்கல்

பொருளடக்கம்

01
கூட்டிணைந்த மேலோட்டம்

தொலைநோக்கு மற்றும் செயற்பணி 01
எங்களைப் பற்றி 02
முன்னிலைப்படுத்தப்பட்ட செயலாற்றுகை 05
வருடம் ஒரே பார்வையில் 06
விருதுகளும் பாராட்டுகளும் 08

10
எங்கள் தலைமைத்துவம்

தலைவரின் செய்தி 10
முகாமைத்துவப் பணிப்பாளரின் செய்தி 12
பணிப்பாளர் சபை 14
முகாமைத்துவ குழு 18

21
முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

தொழிற்பாட்டுச் சூழல் 22
நிதியியல் முதலீடு 24
தயாரிக்கப்பட்ட மூலதனம் 30
மனிதவள மூலதனம் 33
சமூக மற்றும் உறவுகள் மூலதனம் 40
இயற்கை மூலதனம் 46

48
ஆளுகை மற்றும் இணக்கம்

கூட்டிணைந்த ஆளுகை 49
இடர் முகாமைத்துவம் 54
பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை 61
கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 64

67
நிதியியல் தகவல்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 68
வருமானக் கூற்று 71
அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று 72
உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று 73
காசுப்பாய்ச்சல் கூற்று 74
நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் 75
ஐந்து வருடகால நிதியியல் சுருக்கம் 104

கூட்டிணைந்த தகவல்கள் - அட்டையின் உள்புறத்தில்

தொலைநோக்கு

தெற்காசியாவில் மிகவும் வினைத்திறன்மிக்க பெற்றோலிய முனையத் தொழிற்படுத்துனராக திகழ்தல்

பணி

அக்கறைதாரர்களின் எதிர்பார்க்கைகளை நிறைவு செய்கின்ற மற்றும் வாடிக்கையாளர் திருப்தி மட்டத்தினை உணர்ந்துகொள்ளத்தக்க அத்துடன் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கு அர்ப்பணித்துள்ள அதேவேளை முனைய வசதி பயன்பாட்டாளர்களுக்கு - வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திகளின் தரத்தினை பாதுகாத்தல், மிகச்சரியான தரத்தினை உறுதிசெய்தல், நுகர்வோரினதும் பொதுமக்களினதும் பின்னூட்டல் மூலம் வழிநடாத்தப்படும் விசுவாசமிக்க, பாடுபடுகின்ற சிறப்பாக பயிற்றப்பட்ட தொழிற்படையின் அர்ப்பணிப்புமிக்க பங்கேற்பின் ஊடாக ஆரோக்கியம், சுற்றாடல் மற்றும் பாதுகாப்புக்கான செயற்பாட்டிலுள்ள நியமங்களுக்கு கௌரவமளித்து நாட்டில் மிகவும் வினைத்திறன் மிக்க முனையத் தொழிற்படுத்துனராக திகழ்தல்.



எம்மைப் பற்றி

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனமானது 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வியாபாரத்தினை பொதுக் கம்பனியாக மாற்றும் சட்டத்தின் பிரிவு 2(1) ஆம் நியதிகளுக்கு அமைவாக 1982 இன் 17ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டு 2003 ஒக்டோபர் 13ஆம் திகதி 1310/08 ஆம் இலக்கத்தினை உடைய அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்ட எரிபொருள் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய் இணைப்பு மற்றும் பௌசர் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

இலங்கையில் மூன்றாம் நிலை பெற்றோலிய உற்பத்திகளின் கையாளுகையினை நாம் முகாமைத்துவம் செய்வதற்கான அதி நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பெற்றோலிய மொத்தக் களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனியாவோம். ஆரோக்கியமான மற்றும் போட்டி எரிபொருள் சேமிப்பு மற்றும் விநியோகத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் வளர்ச்சிப் பயணத்தை ஆதரிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நிரூபிக்கும் வகையில் எங்கள் பங்குதாரர் மதிப்பு முன்மொழிவுகளை தொடர்ந்து மேம்படுத்துகின்றோம்.

இந்தக் கம்பனி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாக அதன் 2/3 பங்கு மூலதனத்தையும் மிகுதி உரிமைப் பங்கை இலங்கை இந்திய ஒயில் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் பெற்றுக் கொண்டு இயங்குகின்றது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் தாய் நிறுவனத்திடமிருந்து நன்மைகளை ஆறு தசாப்தங்களாகப் பெற்றுவருவதுடன் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல், புத்தாக்க உந்தல் மற்றும் வலுசக்தித் துறையில் சுற்றாடல் நிலைத்திருப்பினை உறுதிப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளுகின்றது.

நாட்டின் சில்லறை நுகர்வோரினதும் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு கைத்தொழிற்துறைகளிலும் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையிலான மொத்த நுகர்வோரினதும் சக்திக்கான கேள்வியினை நிறைவு செய்வதற்கு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை இந்திய ஒயில் கம்பனிக்கும் உரித்தான நாடுமுழுவதிலுமுள்ள சுமார் ஆயிரம் சில்லறை விநியோக நிலையங்களுக்கு சேவையளிக்கின்றோம் கம்பனியின் பல்வேறு நடவடிக்கைகள் சுமார் 3000 ஊழியர்களின் ஊக்கமிக்க பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுவதுடன் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வலையமைப்பு என்பவற்றில் ஈடுபட்டுள்ள 11 மொத்தக் கிடங்குகளுக்கு துணையளிக்கப்படும் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன.

பிரதான முனையங்கள்

- கொலொன்னாவை நிலையம் மற்றும் முத்துராஜவெல முனையம்

மொத்த கிடங்குகள்

- அனுராதபுரம்
- மட்டக்களப்பு
- ஹப்புத்தளை
- பதுளை
- காலி
- காங்கேசன்துறை
- கொட்டகல
- மாத்தறை
- சரசவி உயன
- குருநாகல்
- பேராதெனிய



கொலன்னாவை நிலையமானது 12 பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளுகின்ற அதேவேளை முத்துராஜவெல முனையம் 5 பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளுகின்றது.


சீலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விநியோகத் தொழிற்பாடானாது இரண்டு சந்தைப்படுத்தும் கம்பனிகளான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய ஒயில் கம்பனி ஆகியன சார்பிலும் உற்பத்திகளை விநியோகிப்பதைப் பொறுப்பேற்கின்றது. கொலொன்னாவை மற்றும் முத்துராஜவெல ஆகிய இடங்களில் பிரதான முனையங்கள் காணப்படுகின்றன. இவை நாடுமுழுவதும் பெற்றோலிய உற்பத்தி விநியோகத்தினை வலுப்படுத்தும் பொருட்டு சீலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் 11 வெளிப்பிரதேச மொத்தக் கிடங்குகளையும் ஒரு உள்ளூர் புகையிரதப்பகுதி கிடங்கினையும் தொழிற்படுத்துகின்றது. இவ்வமைவிடங்களுக்கும் உள்நாட்டு புகையிரதப்பகுதி கிடங்கிற்கும் உற்பத்திகளின் நிறைவாக்கம் கொலொன்னாவை விநியோக நிலையத்தில் ஏற்றப்படும் புகையிரதக் கொள்கலன்கள் சீலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பாதைகள் மற்றும் பிரதான முனையங்களில் இருந்து தாங்கிகளுக்காக வாடகைக்குப் பெறப்பட்ட பாதைகள் மூலம் அனுப்பப்படும். விமான எரிபொருட்கள் கொலொன்னாவை நிலைத்தில் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டு புகையிரதம் மூலம் நாளாந்த அடிப்படையில் கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது. இரத்மலானை மற்றும் இலங்கை விமானப் படையினால் தொழிற்படுத்தப்படும் ஏனைய விமானக் களங்களுக்கு வீதி மூலம் எரிபொருள் வசதி அளிக்கப்படுகின்றது. முத்துராஜவெல முனையத்தில் மாத்திரம் குறைந்த கந்தக உலை எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதுடன் கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்திற்கு ஒரேயொரு வாடிக்கையாளருக்காக ஒதுக்கப்பட்ட குழாய் இணைப்பு ஊடாக அனுப்பப்படுகின்றது.





கொலொன்னாவை நிலையம் சுத்திகரிப்புச் சாலைகளில் இருந்தும் கொழும்பு டொல்பின் இறங்குதுறையில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட தாங்கிகளில் இறக்கப்படுகின்ற உற்பத்திகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளுகின்றது. முத்துராஜவெல முனையமானது கெரவலப்பிட்டிய கரைக்கு சுமார் ஆறு கிலோமீற்றர் தொலைவில் அமையப்பெற்றுள்ள தனிநிலை நங்கூர மிதவையூடாக இறக்கப்படும் இறக்குமதி செய்யப்பட்ட கப்பல் சரக்கில் இருந்து மாத்திரம் உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளுகின்றது.

வியாபார வகை	நிலைப்பு
எரிபொருட்களின் சேமிப்பு	நாங்கள் சுமார் 450,000 மெற்றிக்தொன் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் சுத்திகரிப்பு செய்யப்பட்ட பல்வேறுபட்ட பெற்றோலியப் பொருட்களை கொலொன்னாவை, முத்துராஜவெல மற்றும் நாடு முழுவதிலுமுள்ள கிடங்குகளில் சேமிக்கின்றோம்.
எரிபொருட்களின் விநியோகம்	தற்போது நாங்கள் நாடு முழுவதிற்கும் 85% வீதமான வாகனங்களுக்கான பெற்றோலியப் பொருட்களை விநியோகிக்கின்றோம்.
வீதி தாங்கிகள்	நாடு முழுவதிற்கும் அவசியமான பெற்றோலியப் பொருட்களின் போக்குவரத்தின் 66% வீதத்திற்கு பங்களிப்பு செய்யும் பிரதான வீதி தாங்கி ஊடகத்தின் ஊடாக விநியோகத்தை மேற்கொள்ளுகின்றோம்..
புகையிரத வெகன்	இரண்டாவது விநியோக ஊடகமாக புகையிரத வெகன்கள் இருப்பதுடன், இது நாடுமுழுவதிலும் பெற்றோலியப் பொருட்களை போக்குவரத்து செய்வதில் 7% வீதமான பங்களிப்பினை வழங்குகின்றது.
குழாய் இணைப்பு	அடுத்த விநியோக ஊடகமாக குழாய் இணைப்பு பரிமாற்றம் இருப்பதுடன் இது களனிதிஸ்ஸ மற்றும் கெரவலப்பிட்டிய மின்னிலையங்களுக்கும் சப்புகஸ்கந்தவில் அமைந்தள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு போக்குவரத்து செய்வதற்கும் உதவுகின்றது.


தொகைசாலை கே.கே.எஸ்
தொகைசாலை அனுராதபுரம்
தொகைசாலை மட்டக்களப்பு
தொகைசாலை
குருணாகலை
தொகைசாலை பேராதெனிய
தொகைசாலை சரசவி உயன
பிரதான களஞ்சிய
முனையம் முத்துராஜவெல
பிரதான களஞ்சிய
முனையம் கொலன்னாவ
தொகைசாலை
கொட்டகலை
தொகைசாலை பதுளை
தொகைசாலை ஹப்புத்தளை
தொகைசாலை
காலி
தொகைசாலை மாத்தறை

முன்னிலைப்படுத்தப்பட்ட செயலாற்றுகை

			2017	2016	2015
நிதி மூலதனம்	**உபாயமார்க்க முன்னுரிமை: நிதியில் வளர்ச்சி**				
	வருமானம்	இ.ரூ.மில்	14,176	12,663	11,687
	தொழிற்பாட்டு இலாபம்	இ.ரூ.மில்	3,208	2,406	1,917
	இலாபம்/(நட்டம்) வரிக்கு முன்னர்	இ.ரூ.மில்	3,273	2,330	1,716
	இலாபம்/(நட்டம்) வரிக்கு பின்னர்	இ.ரூ.மில்	2,717	1,949	1,407
	உரிமைப்பங்கு மீதான வருவாய்	%	11%	9%	7%
	நிதித் திடத்தன்மை				
	நிதித் திடத்தன்மை	இ.ரூ.மில்	29,991	28,059	27,270
	மொத்த சொத்துகள்	இ.ரூ.மில்	4,828	5,208	5,881
	மொத்த பொறுப்புகள	இ.ரூ.மில்	25,163	22,851	21,389
	காசு மற்றும் காசுக்கு சமனானவை	இ.ரூ.மில்	1,474	2,455	748
	பங்குதாரரின் தகவல்				
	பங்குதாரரின் தகவல்	இ.ரூ	3.73	2.32	1.83
	ஒரு பங்குக்கான வருவாய்	இ.ரூ	0.54	0.65	-
	ஒரு பங்குக்கான பங்கலாபம் (கொடுப்பனவு செய்யப்பட்டது)	இ.ரூ	33	30	29
	பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி	இ.ரூ.மில்	1,394	799	507
தயாரிக்கப்பட்ட மூலதனம்	**உபாயமார்க்க முன்னுரிமை: தொழிற்பாட்டு சிறப்பு**				
	ஆதனம், பொறி மற்றும் உபகரணம்				
	முனையங்கள் மற்றும் கிடங்குகள்	எண்ணிக்கை	14	14	14
	மூலதனச் செலவு	இ.ரூ.மில்	833	913	224
மனித மூலதனம்	**உபாயமார்க்க முன்னுரிமை: மக்களில் முதலீடு**				
	மொத்த ஊழியர்கள் எண்ணிக்கை	எண்ணிக்கை	3,045	3,118	2,964
	பெண்கள் பங்களிப்பு எண்ணிக்கை	எண்ணிக்கை	343	351	338
	ஊழியருக்கான கொடுப்பனவுகள்	இ.ரூ.மில்	5,570	5,782	5,307
	ஊழியர் ஊதிய விகிதம்	%	1%	1%	1%
	பயிற்சியில் முதலீடு	இ.ரூ.மில்	32	30	27
	மொத்த பயிற்சி மணித்தியாலங்கள்	மணித்தியாலம்	21,832	26,088	17,928
	சராசரி பயிற்சி மனித்தியாலங்கள்/ஊழியர்	மணித்தியாலம்	9	11	9
	ஊழியருக்கான வருமானம்	இ.ரூ.மில்	4.67	4.06	3.93
	ஊழியருக்கான தேறிய இலாபம் (நட்டம்)	இ.ரூ.மில்	0.90	0.63	0.47
சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்	மறைமுக ஊழியர் (அண்ணளவாக)	எண்ணிக்கை	105	114	121
	வாடிக்கையாளர் தொடுகைப் புள்ளிகள்	எண்ணிக்கை	40	40	40
	கூட்டிணைந்த சமூக பொறுப்புகளில் முதலீடு	இ.ரூ.மில்	6.10	5.70	16.80
	பயன்பெறுனர்களின் எண்ணிக்கை (அண்ணளவாக)	எண்ணிக்கை	8,500	7,000	12,000
	அரசாங்கத்திற்கான பங்களிப்பு	இ.ரூ.மில்	2,175	1,895	1,303
இயற்கை மூலதனம்	**உபாயமார்க்க முன்னுரிமை: நிலைத்திருப்பு**				
	வலுச்சக்தி நுகர்வு	கிவோம	2,904,300	2,914,112	2,942,078
	தண்ணீர் நுகர்வு	கிலீ	275,720	268 ,120	249,150

வருடம் ஒரே பார்வையில்

விற்பனை அளவு

5,447,413 கிலோ

சொத்தடிப்படை


30 பில் கிலோ


சொத்தடிப்படை


14 பில்.கிலோ

உயர் வருமானம்


2.8 பில்.கிலோ









மொத்த சொத்துக்கள்
(இல.ரூ.மில்)




சொத்துப் புரள்வு (%)




தற்போதைய விகிதம்
(எண்ணிக்கை)




பங்குதாரர் நிதிகள் (இல.ரூ.மில்)




உரிமைப்பங்கிலிருந்தான
வருமானம் (%)



அதிகரிக்கும் விகிதம் (தடவைகள்)



ஆர்முடுகல் விகிதம் (எண்ணிக்கைகள்)
ஒரு பங்கிற்கான நிகர சொத்துப் பெறுமதி (இ.ரூ)



விருதுகளும் பாராட்டுகளும்

எமது அர்ப்பணிப்பினை மீள்உறுதிப்படுத்தி, நிதியாண்டு முழுவதிலும் பல எண்ணிக்கையான கௌரவமிக்க விருதுகள் வழங்கப்பட்டு நாம் அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்.

சிஎன்ஜி கைத்தொழில் உன்னத விருது வழங்கும் வைபவத்தில் வழங்கப்பட்ட தேசிய வெண்கல விருது மற்றும் மிகச்சிறந்த வெற்றியாளர் விருது

இரண்டாவது வருடமாகவும், சிலோன் நஷனல் சேம்பர்ஸ் ஒப் இன்டஸ்ரீஸ் அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட கைத்தொழில் உன்னத செயற்பாட்டாளர்களுக்கான "சிஎன்சிஜ வெற்றியாளர் விருதுகள் 2017" விருது வழங்கும் வைபவத்தில் கம்பனி தேசிய மட்ட அரச துறையில் வெண்கல விருதினையும் சிறந்த வெற்றியாளர் விருதினையும் கம்பனி பெற்றுக்கொண்டது.

சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு விருதுகள் - 2017 இன் வெண்கல விருது

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் தொழில் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்திப் பிரிவின் சமூக கலந்துரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரியளவு சேவைத்துறை 2017 இன் கீழ் சமூக கலந்துரையாடல் மற்றும் பணி ஒத்துழைப்பின் கீழ் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் வெண்கல விருதை வென்றது.




CNCI AC
WARDS








THE CEYLON
OF INDUSTRIES
2017
HIEVER AWARDS
2017
FOR
SPONSOR

தலைவரின் செய்தி



" மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க மேம்படுத்தலுடன் முழுமையான ஆரோக்கியமான செயலாற்றுகையை தொடர்ந்துள்ளது. இந்த ஆண்டின் மொத்த விற்பனை வருமானமான இ.ரூ.14 பில்லியன் கடந்த ஆண்டான 2016 உடன் ஒப்பிடுகையில் 12% வீத வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. இந்த ஆண்டின் மொத்த இலாபமான இ.ரூ. 2,717 மில்லியன் கடந்த ஆண்டான 2016 உடன் ஒப்பிடுகையில் 39% வீத வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. எங்கள் கம்பனி முன்னெப்போதும் இல்லாத வகையில் 2016ம் ஆண்டுக்கான பங்குலாபமாக இ.ரூபா 0.54 வை 2017ம் ஆண்டு கொடுப்பனவு செய்துள்ளது. "

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம், 2017ம் ஆண்டும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் இன்னுமொரு சிறப்பான ஆண்டு என்பதை பணிப்பாளர் சபையின் சார்பாக அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

2017ம் ஆண்டு செயலாற்றுகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுக்கொண்டு 2018 எனும் புதிய நிதி ஆண்டுக்குள் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் காலடியெடுத்து வைக்கின்றது. நாம் இந்த வருடத்தினுள் மிகச்சிறந்த இலாபத்தையும் பொது மக்கள் சேவையையும் வழங்குவதற்கு எண்ணியுள்ளோம்.

நாட்டின் பெரும்பான்மையான பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளும் நிறுவனம் என்ற வகையில், நாங்கள் நாட்டின் 21 மில்லியன் குடிமக்களின் நாளாந்த வாழ்க்கையை நேரடியாகவும் மறைமுகமாகவும் எங்கள் உற்பத்திகளின் ஊடாகத் தொடுகின்றோம். எங்களின் முக்கிய பொறுப்பாக எங்கள் இறுதிப் பயன்பாட்டாளரான நுகர்வோருக்கும், அதேவேளை எங்கள் விநியோகத்தர்களுக்கும் மற்றும் முனைய வசதி பயன்பாட்டாளர்களுக்கும் பெற்றோலிய உற்பத்திகளை சீராகவும் தடையின்றியும் வழங்குதல் அமைந்துள்ளது. எங்களின் பயிற்றப்பட்ட அர்ப்பணிப்புள்ள தொழிற்படையின்றி எங்களால் இலக்குளை அடைய முடியாது. எங்கள் வியாபாரத்தை கட்டியெழுப்புல் மற்றும் நடாத்துவதற்குரிய மூன்று தூண்களாக எங்கள் நுகர்வோரையும் ஊழியர்களையும் பாதுகாத்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்தல் என்பன அமைந்துள்ளன.

எங்கள் செயலாற்றுகை

நிதியியல் ஸ்தீரத்தன்மை சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தினை வலுவூட்டுகின்றதுடன், எங்கள் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் சக்தியூட்டுகின்றது. இது கம்பனியின் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்திற்கான உபாயமார்க்க இலக்குகளுக்கு அமைவான செயற்பாட்டுத்திட்டத்துடனான பூஜ்ஜிய வரவுசெலவுத்திட்டத்தின் அறிமுகத்தினால் ஏற்பட்டதாகும். இது வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் அனைத்து ஆக்கக்கூறுகளும் வினைத்திறனானது, பொருத்தமானது, மேம்படுத்தப்பட்ட சேமிப்புக்கு முன்னெடுத்துச் செல்கின்றது மற்றும் நிதியியல் ஒழுக்கத்தின் வினைத்திறனை கட்டியெழுப்புகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவுகின்றது.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க மேம்படுத்தலுடன் முழுமையான ஆரோக்கியமான செயலாற்றுகையை தொடர்ந்துள்ளது. இந்த ஆண்டின் மொத்த விற்பனை வருமானமான இ.ரூ. 14 பில்லியன் கடந்த ஆண்டான 2016 உடன் ஒப்பிடுகையில் 12% வீத வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. இந்த ஆண்டின் மொத்த இலாபமான இ.ரூ. 2,717 மில்லியன் கடந்த ஆண்டான 2016 உடன் ஒப்பிடுகையில் 39% வீத வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. எங்கள் கம்பனி முன்னெப்போதும் இல்லாத வகையில் 2016ம் ஆண்டுக்கான பங்குலாபமாக இ.ரூபா 0.54 வை 2017ம் ஆண்டு கொடுப்பனவு செய்துள்ளது.

2017ம் ஆண்டு, சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவல்ல பல்வேறுபட்ட உபாயமார்க்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த ஆண்டில் தேசத்திற்கான எங்கள் சேவையை மேம்படுத்தவதற்காக மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்களில் கொலொன்னாவை 15,000 எம்3 தாங்கியின் நிறுவல், முத்துராஜவெலவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ரயில்வே கடவைகள் வழியாக எச்டிடி (கிடைமட்ட நேரடி துளையிடல்) முறையை அறிமுகப்படுத்துகின்ற கொழும்பு துறைமுகத்தில் உள்ள டொல்பின் பியரை கொலொன்னாவை நிறுவலுடன் இணைக்கும் 12" குழாய் இணைப்பு பணிகள் 97.5 சதவீதம் நிறைவுற்றது. அத்துடன் கொலொன்னாவை நிறுவலின் கொள்ளவு சக்தியை 40 சதவீதத்தினால் அதிகரிக்கும் தாங்கி நிர்மாணிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, முத்துராஜவெல உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள், கொலொன்னாவை நிறுவலில் பல்வேறு தாங்கிகளுக்கு உள்ள மிதக்கும் கூரைகளை நிறுவுதல். 2004ம் ஆண்டிலிருந்து இணைந்த கண்காணிப்பு குழுமத்தின் வேண்டுகோளுக்க அமைவாக கடந்த ஆறு மாதகாலத்தில் 03ம் வலயலத்தில் விமான நிரப்பல் வசதிகளுக்கு எரிபொருள் வடிகட்டல் முறைமை என்பவை முக்கியமானவையாகும்.

எங்கள் கடந்த கால செயலாற்றுகையின் வெற்றியின் மீதேறி எதிர்வரும் வருடத்தை நாம் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளுகின்றோம். எங்கள் 2018ம் ஆண்டுக்கான இலக்கான இலட்சியம் மற்றும் கூட்டிணைந்த ஒருமைப்பாடு என்பவற்றை நெறிமுறை மற்றும் வெளிப்படை தொழிற்பாட்டு வழிகாட்டல் பிரதிபலிக்கின்றது. எங்கள் எதிர்கால வெற்றிக்கு சரியானவற்றை வெளிப்படையாகவும் திறந்த முறையிலும் திட்டமிடுவதற்கு விரும்புகின்றோம்.

அத்துடன், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு செயற்பாடுகளை நிலையாக மீளாய்வு செய்வதன் மூலம் பொறுப்புத்தன்மையை உரிய முறையில் வெளிப்படுத்துவதுடன் சிறந்த ஆளுகைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது.

நாம் எங்கள் கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு செயற்பாடுகளை எங்கள் சமூக ஒருங்கிணைப்புக்கும் சமூகத்திற்கான எங்கள் பொறுப்பினை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தினோம். சீஎன்சீஜயின் கைத்தொழில் சிறப்பு விருதுகள் வழங்கும் வைபவத்தில் வழங்கப்பட்ட தேசிய வெள்ளி விருது மற்றும் சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பிற்கான வெண்கல விருது என்பவற்றை பெற்றுக்கொண்டதன் ஊடாக கடந்த நிதியாண்டில் நாம் அங்கீகரிக்கப்பட்டோம்.


நன்றி நவிலல்

கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளுக்கேற்ப வினைத்திறனுடன் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் பயணிப்பதை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை முயற்சியினை மேற்கொண்டமைக்கு நான் பணிப்பாளர் சபைக்கு நன்றியைத் தொரிவிக்கின்றேன்.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொடர்ச்சியான செயலாற்றுகை மற்றும் இலாப அதிகரிப்பினை உறுதிப்படுத்துவதற்கு அதன் மிகப் பெறுமதியானதும் மதிப்புக்குரியதுமான சொத்தான அதன் ஊழியர்கள் என்பதை பெருமையுடன் ஒப்புக்கொள்கின்றது. நான் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் அவர்களுடைய மிகச்சிறந்த செயலாற்றுகைக்காக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் தெரிவிக்க விரும்புகின்றேன். கம்பனியின் கைத்தொழில் உறவுமுறை சூழல் தொடர்ச்சியாகவும் ஆரோக்கியமானதாகவும் சுமூகமாகவும் இருப்பதுடன் நலன் விரும்பிகளின் பெறுமதியை மேம்படுத்தவதற்கு உயர் செயலாற்றுகையை வெளிப்படுத்தவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளெதென்பதையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் எனது நன்றியை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர் திரு அர்ஜுன ரணதுங்க மற்றும் கௌரவ பிரதி அமைச்சர் டாக்டர் அனோமா கமகே அவர்களுக்கும் அத்துடன் அமைச்சின் செயலாளர் திரு. உபாலி மாரசிங்க அவர்களுக்கு அவர்கள் தொடர்ச்சியாக வழங்கிய ஒத்துழைப்பிற்கும் உதவிக்கும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அத்துடன் வியாபார பங்குதாரர்களாக உங்கள் விசுவாசம் மற்றும் ஆதரவிற்காக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர்கள், முகாமைத்துவம் மற்றும் அதன் ஊழியர்களுக்கு நன்றியைத் தெரிவித்தக்கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். எங்கள் மக்களின் திறமை மற்றும் அர்ப்பிணப்பு இல்லாமல் இந்த அடைவுகள் எதுவும் சாத்தியமில்லை. எங்கள் வணிகப் பங்காளிகளின் விசுவாசம் மற்றும் ஆதரவுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒற்றுமை மற்றும் அர்ப்பணிப்புடன் புத்தாண்டு கொண்டுவரும் புதிய சவால்களை எதிர்கொள்வோம்.



தம்மிக்க ரனதுங்க
தலைவர்

முகாமைத்துவப் பணிப்பாளரின் செய்தி



"தொழிற்பாட்டு செயலாற்றுகையின் பலமான வளர்ச்சி, சிறப்பான திட்டமிடல் மற்றும் மூலதன கட்டமைப்புகளின் வினைத்திறனான ஈடுபடுத்தல் என்பன ரூபா 2,717 மில்லியன் தேறிய வரிக்கு பின்னரான இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 39.4% வீத வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவியது. எங்கள் நிதி நிலமைக்கூற்றில் பிரதிபலிக்கும் மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் அமுல்படுத்தப்பட்ட உபாயமார்க்கங்கள் இலாபத்தில் இந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தன என அறிவிப்பதில் மகிழ்சியடைகின்றேன்."

தொழிற்பாட்டு செயலாற்றுகையின் பலமான வளர்ச்சி, சிறப்பான திட்டமிடல் மற்றும் மூலதன கட்டமைப்புகளின் வினைத்திறனான ஈடுபடுத்தல் என்பன ரூபா 2,717 மில்லியன் தேறிய வரிக்கு பின்னரான இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 39.4% வீத வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவியது. எங்கள் நிதி நிலைமைக்கூற்றில் பிரதிபலிக்கும் மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் அமுல்படுத்தப்பட்ட உபாயமார்க்கங்கள் இலாபத்தில் இந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தன என அறிவிப்பதில் மகிழ்சியடைகின்றேன்.

பெற்றோலிய பொருட்கள் முனையத் தொழிலில் தொடர்ந்து நிலவும் சவாலான சந்தை நிலமைகள் இருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் உறுதியான நிதி மற்றும் செயல்பாட்டு முடிவுகளை உருவாக்கிய சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் மற்றொரு விதிவிலக்கான செயல்திறனை நான் உங்களுக்கு தெரிவிக்கின்றேன்.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் செயலாற்றுகையில் இலங்கை பொருளாதாரத்தில் கலப்பு அதிஸ்டமாக, 2017ம் ஆண்டு முழுவதிலும் பெற்றோலிய உற்பத்திகள் சந்தைக்காக நிட்சயமற்ற மற்றும் மாறும் மாற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவுக்கு, சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் 31 டிசம்பர் 2017ம் திகதி முடிவடையும் 12 மாத காலத்தில் மிகச்சிறந்த நிதி செயலாற்றுகையை, பலமான இலாபத்துடன் அளவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வழங்கியது.

இந்த வருடம், எங்கள் இரு நிறுவனங்களும் அதிக கவனத்தை செலுத்தியதைப் பார்த்தோம். நாங்கள் பல சிக்கலான தீர்மானங்களை கட்டமைப்பு, பரப்பெல்லை, அளவு மற்றும் ஆகுசெலவு தொடர்பாக மேற்கொண்டோம். நாங்கள் சிக்கலான வெற்றிக் காரணிகளான எங்கள் நிபுணத்துவத்தை பலப்படுத்தல், இடர்களை எடுத்தல் மற்றும் சேவைச் சிறப்பு தொடர்பாக எங்கள் அர்ப்பணிப்பு மீள்மதிப்பிடுதல் மற்றும் எங்கள் தொழிற்பாடுகளை வினைத்திறனை நோக்கிச் செலுத்துதல் போன்றவற்றில் கவனத்தை செலுத்தியுள்ளோம்.

நாங்கள் எங்கள் முறைமை மற்றும் செயன்முறை கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கம் மற்றும் மிக முக்கியமாக சந்தையில் வினைத்திறன் மற்றும் செயற்திறனுடன் நிலைத்திருப்பதற்கான எங்கள் முயற்சிக்கான ஆதரவை வழங்கும் எங்கள் திறமையான குழுவினால் வழங்க முடியும் என நம்பியிருந்தோம்.

செயலாற்றுகை மேலோட்டம்

2017 நிதியாண்டில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியமையை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளுதலின் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக அளவுகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் ஊடாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% வீத வளர்ச்சியை அடைந்து ரூபா 12 பில்லியன் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

செயற்பாட்டு மேம்படுத்தலில் தொடர்ச்சியான கவனம் செலுத்தப்பட்டதன் காரணமாக வருமானம் வளர்ச்சியடைந்ததுடன், பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 3,273 மில்லியனாக இருந்ததுடன் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 40% வீத வளர்ச்சியை வெளிப்படுத்தியது.

தொழிற்பாட்டு செயலாற்றுகையின் பலமான வளர்ச்சி, சிறப்பான திட்டமிடல் மற்றும் மூலதன கட்டமைப்புகளின் வினைத்திறனான ஈடுபடுத்தல் என்பன ரூபா 2,717 மில்லியன் தேறிய வரிக்கு பின்னரான இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 39.4% வீத வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவியது. எங்கள் நிதி நிலைமைக்கூற்றில் பிரதிபலிக்கும் மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் அமுல்படுத்தப்பட்ட உபாயமார்க்கங்கள் இலாபத்தில் இந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தன என அறிவிப்பதில் மகிழ்சியடைகின்றேன்.

பங்குதாரர்களுக்கான பங்குலாபங்கள்

2017 நிதியாண்டில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியதுடன், பணிப்பாளர் சபை ரூபா 405 மில்லியனை பங்குலாபமாக விதப்புரை செய்ததுடன், அதன் ஊடாக ஒரு பங்குக்கு ஐம்பத்திநான்கு சதத்தை பங்குலாபமாக அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பங்குலாபமானது, 2016ம் ஆண்டு வழங்கிய 17% வீதத்துடன் ஒப்பிடுகையில் 15% வீதமாக குறைந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கான பங்களிப்பு

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் நிதி செயல்திறனின் வளர்ச்சியும் முடுக்கமும் இலங்கை அரசாங்கத்திற்கும் பொருளாதாரத்திற்கும் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது எனக் குறிப்பிடுவது எனக்கு பெருமையளிக்கின்றது. 2017ம் ஆண்டு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் அரசாங்கத்திற்கு ரூபா 451 மில்லியனை நேரடி வரியாகவும், ரூபா 1,724 மில்லியனை நுகர்வோர் வரியாகவும் மொத்தமாக ரூபா 2,175 மில்லியனை செலுத்தியுள்ளதுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15% வீதமாக அதிகரித்துள்ளது.

எதிர்காலக் கண்ணோட்டம்

உலகளாவிய பொருளாதாரத்தில் அதிக உற்சாகமான போக்குகள் காணப்படுவதனால், நமது நாடு பொருளாதார செழிப்பை அடைவதோடு, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் வருமானத்தின் அளவு அதிகரித்துள்ளது, நடுத்தர காலத்தில் அதிக நம்பிக்கையான வணிகச் சூழலை எதிர்பார்க்கின்றோம். நிச்சயமாக, இன்று நமது தற்போதைய இயக்க சூழலில் நிலவும் சமூக அரசியல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளை சமநிலைப்படுத்துவது கட்டாயமாகும்.

இந்த வளர்ந்து வரும் பொருளாதார பின்னணியில், தீவின் முன்னணி பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளும் நிறுவனமாக நாம், வாய்ப்புகளைப் பெறுவதற்கும், வளர்வதற்கும் அதிக உயரங்களை அடைவதற்கும் மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளோம். அடுத்த ஆண்டுகளில், எங்கள் வெற்றிக் காரணிகளை மேலும் முதலீடு செய்வோம், மேலும் எங்கள் செயல்பாடுகள் மற்றும் வியாபாரங்கள் முழுவதிலும் கவனத்தை செலுத்தும் உபாயமார்க்கத்தை இயக்குவோம்.

பாராட்டுதல்கள்


நிறுவனத்தின் சார்பாக, சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் ஏனைய அலுவலர்கள் எமக்களித்த ஆதரவுக்காக நன்றியைத் தெரிவித்துப் பாராட்டுகின்றேன்.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும், எனக்கும் நிறுவனத்திற்கும் வழங்கிய பெறுமதிக்க மதிப்பிட முடியாத வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு இல்லாது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வெற்றியை நாம் அடைய முடியாது என்பதுடன் சவாலான 2017ம் ஆண்டு முழுவதிலும் நான் நிலைத்து நிற்பதற்கு அவர்களுடைய ஆதரவு மற்றும் பெறுமதியான பங்களிப்பினை வழங்கிய ஒவ்வொரு நபருக்கும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நான் இந்த சந்தர்ப்பத்தை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதற்கு எடுத்துக்கொள்கின்றேன்.

எங்கள் தலைவரான திரு. தம்மிக்க ரணதுங்க மற்றும் சிரேஸ்ட நிர்வாகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்களின் கடின உழைப்பு மற்றும் நிறுவனத்தின் வெற்றிக்காக உறுதியான அர்ப்பணிப்பிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரோஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஊழியர்கள் தங்கள் சமரசமற்ற பணி நெறிமுறைகள் மற்றும் வேலைக்கான அர்ப்பணிப்பு மூலம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பங்களித்தனர். அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அதேவேளை அவர்களின் அர்ப்பணிப்பு குறித்த எனது பாராட்டுகளையும் பதிவுசெய்ய விரும்புகின்றேன். கடைசியாக எங்கள் இரு பங்குதாரர்களுக்கும், வியாபார பங்காளர்களுக்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு எங்கள் திறன்களின் மீதான நம்பிக்கைக்கு நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். கூட்டிணைந்த ஆளுகை தரங்களை நிலைநிறுத்துவதன் மூலம் ஒரு கூட்டிணைந்த நிறுவனமாக எங்கள் ஒருமைப்பாட்டை மாற்றியமைக்கும் அதே வேளையில் எங்கள் மேல்நோக்கிய வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவதன் மூலம் உங்கள் நம்பிக்கையை நாங்கள் மதிக்கின்றோம்.

அனைத்து நலன் விரும்பிகளுக்கும் நன்றிகள்.



சஞ்சீவ வீஜேரத்ன
முகாமைத்துவப் பணிப்பாளர்

பணிப்பாளர் சபை



திரு. தம்மிக்க ரனதுங்க
தலைவர்



திரு. சஞ்சீவ விஜேரத்ன
முகாமைத்துவப் பணிப்பாளர்



திருமதி. கே.டி.ஆர். ஒல்கா
பணிப்பாளர்



திரு. ஷியாம் போரா
பணிப்பாளர்



திரு.அர்ஜுன் ஜெயின்
பணிப்பாளர்



திரு. ரன்தீர் சிங்
பணிப்பாளர்



திரு. நிமல் ஜயசுந்தர
பணிப்பாளர்



திரு. உதித்த குணவர்தன
பணிப்பாளர்

திரு தம்மிக்க ரனதுங்க

தலைவர்

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடட் என்பவற்றின் தலைவராக திரு தம்மிக்க ரனதுங்க பணியாற்றுகின்றார். இவர் தகவல் தொழில்நுட்பம், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல், கிரிக்கெட் நிர்வாகம், இணையம்/ஈ-கொமர்ஸ் போன்ற துறைகளிலும் மற்றும் துறைமுக அமைச்சு மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு போன்ற அரச நிறுவனங்களில் பிரதான முகாமைத்துவத்துறையிலும் 37 வருடகால சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

திரு. தம்மிக்க ரனதுங்க அவரது தொழிலை 1981ம் ஆண்டு தகவல் தொழில்நுட்பத்தில் ஆரம்பித்ததுடன், அதனூடாக நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் முறைமைப் பகுப்பாய்வு மற்றும் வாடிக்கையாளர் உறவுமுறை முகாமைத்துவம் என்பவற்றில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். சிங்கர் ஸ்ரீலங்காவில் நடுநிலை முகாமைத்துவத்திற்கு தரம் உயர்த்தப்பட்டதன் ஊடாக முகாமைத்துவத்திற்குள் நுழைந்தார். அவருடைய பரந்த அனுபவத்தின் காரணமாக 1996 - 2001 ஆண்டு வரை இலங்கை கிரிக்கெட்டின் கட்டுப்பாட்டுச்சபையின் முதலாவது பிரதம நிறைவேற்று அதிகாரியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தக் காலப்பகுதியில், அவர் கூட்டிணைந்த உபாயமார்க்கத் திட்டத்தைத் தயாரித்ததுடன், இதனை பெறுபேறு சார் நிறுவனமாக மாற்றியமைத்தார். இவர் 1996 இருந்து 1997 வரை சர்வதேச கிரிக்கெட் சபையின் அங்கத்தவராக இருந்ததுடன் 1997 – 2001 வரை ஆசிய கிரிக்கெட் சபையின் விசேட குழுவின் அங்கத்தவராகவும் செயலாற்றினார். 2001 இருந்து 2013 வரை அவர் ஜக்கிய அமெரிக்காவில் இருக்கையில் பல்வேறு கம்பனிகளின் இணைய விற்பனை ஆலோசகர், இணைய விற்பனைப் பணிப்பாளர் மற்றும் ஈ-கொமர்ஸ் பணிப்பாளர் மற்றும் விற்பனை மற்றும் ஈ-கொமர்ஸ் பணிப்பாளர் என தனது அறிவினையும் அனுபவத்தையும் பகிர்ந்துகொண்டார். திரு. ரனதுங்க அனைத்துறை விளையாட்டு வீரராவதுடன், இவர் கிரிக்கட் மற்றும் தடகள விளையாட்டுகளில் சிறந்து விளங்கினார். இவர் இலங்கை தேசிய குழுவில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார்.

இவர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளராக இருந்த அதேவேளையில் இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் லிமிடட் நிறுவனம், ஜெயா கென்டெயினர் டேர்மினல்ஸ் லிமிடட் மற்றும் மகம்புற போர்ட் மனேஜ்மன்ட் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனங்களின் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். இவர் துறைமுக அதிகாரசபையின் தலைவராக இருந்த வேளையில், இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் அனைத்து வர்த்தக ரீதியான துறைமுகம் சார் அபிவிருத்திக் கருத்திட்டங்கள், அதன் முன்னேற்ற இலக்குகளை அடைதல், அதன் குடையின் கீழ் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு உபாயமார்க்க ஆகுசெலவு முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளலை சேர்த்துக்கொள்வதற்கு கட்டுப்பாடான நிதியியல் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இலக்குகளை நோக்கி வினைத்திறனான மனித வள முகாமைத்துவ உபாயமார்க்கங்களை சேர்த்துக்கொள்ளல் என்பவற்றை மேற்பார்வை செய்தார். 2017ம் ஆண்டு உலகின் 30 தலைசிறந்த துறைமுகங்களில் 23வது இடத்தை கொழும்பு துறைமுகம் பெற்றுக்கொண்டது.

திரு. சஞ்சீவ விஜேரத்ன

முகாமைத்துவப் பணிப்பாளர்

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக திரு. சஞ்சீவ விஜேரத்ன பணியாற்றுகின்றார். இவர் இலங்கை, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆசியாவில் விமானத்துறை, விமானப் போக்குவரத்து, விமான நிலையங்கள் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் என் பலதுறைகளில் 20 மேற்பட்ட முகாமைத்துவ அனுபவத்தைக் கொண்டுள்ளார். அத்துடன் இவர் இலங்கை விமான நிலைய மற்றும் விமானத்துறையின் துணைத் தலைவராவார்.

சஞ்சீவ விஜேரத்ன இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிறைவேற்று பணிப்பாளராக இருப்பதுடன், லங்கா கோல் கம்பனி, ஜெயா கென்டெயினர் டேர்மினல்ஸ் லிமிடட் மற்றும் மகம்புற போர்ட் மனேஜ்மன்ட் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனங்களின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் இருக்கின்றார். இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகழகத்தின் முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் இருந்து வியாபார முகாமைத்துவத்திற்கான முதுமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

திருமதி. கே.டி.ஆர். ஒல்கா

பணிப்பாளர்

திருமதி. கே.டி.ஆர். ஒல்கா அரசாங்கத்துறை மற்றும் அரசியல் நிதியியல் முகாமைத்துவத்தில் அதிகளவு அனுபவத்தைக் கொண்டவர். 1990 இல் இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்தார். அப்போதிருந்து இவர் பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றி வருகின்றார். தற்போது இவர் அரசாங்க நிதித் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரியின் பணிப்பாளர் பதவியினை வகிக்கின்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து முதல் வகுப்பு கௌரவ பட்டத்துடன் விஞ்ஞானமானி (வியாபார நிர்வாகம்) விசேட பட்டத்தினைப் பெற்றுள்ளார். இவர் 1987ம் ஆண்டு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டய உரிம பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இவர் 2015ம் ஆண்டு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இதற்கு மேலதிகமாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளருமாக இருக்கின்றார். மேற்கூறப்பட்ட மூன்று நிறுவனங்களினதும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைவராகவும் இருக்கின்றார்.

திரு. ஷியாம் போரா

பணிப்பாளர்

பெற்றோலியத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான நிபுணத்துவத்துடன் திரு. ஷியாம் போரா சில்லறை, நிறுவனசார் விற்பனைகள் தொழிற்படுத்தல், அத்துடன் ஏற்பாட்டுச் சேவைகள் போன்ற பல்வேறு திணைக்களங்களில் இந்திய ஒயில் கூட்டுத்தாபன லிமிட்டட்டில் இந்தியாவின் முன்னணி கம்பனி மற்றும் போர்சூன் 500 உலக கம்பனி போன்றவற்றில் பல்வேறு அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவர் கணிசமான துறைசார் அனுபவத்தைப் பெற்றுள்ளதுடன் லங்கா ஒயில் கம்பனி பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக பதவியேற்பதற்கு முன்னர் மஹாராஷ்ரா மற்றும் கோவா மாநிலங்களில் இந்திய ஒயில் சில்லறை திணைக்களத்தின் தலைமை பதவியை வகித்தார்.

பெங்களூர் பல்கலைகழகத்திலிருந்து சிவில் பொறியியல் குர்காஒன் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தின் கௌரவமிக்க தேசிய முகாமைத்தவ நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் ராஜஸ்தான் பல்கலைகழகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் பட்டப்பின்படிப்பு ஆகியவற்றுடன் திரு போரா இந்தியன் ஒயில் கம்பனியில் பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார். கள மட்டத்தில் நீண்டகால மற்றும் வெற்றிகரமான மற்றும் எளிமையுடனும் மூன்று வேறுபட்ட விற்பனைப் பிரிவுகளுக்கு தலைவராகவும் இவர் இருந்து வருவதுடன், ஏற்பாட்டு சேவைகளைக் கவனித்து தொழில்படுத்தல் திணைக்களத்திலும் பணியாற்றுகின்றார்.

திரு அனுஜ் ஜெயின்

பணிப்பாளர்

தற்போது அனுஜ் ஜெயின் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி பிஎல்சி நிறுவனத்தின் நிதிப் பிரதானியாக பணியாற்றுவதுடன், கம்பனியின் நிதியியல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் அனைத்து விடயங்களையும் கவனிக்கின்றார். 2002ம் ஆண்டு இந்தியன் ஒயில் கம்பனி இலங்கை பெற்றோலியத்துறைக்குள் வந்ததில் இருந்து, இலங்கை பெற்றோலியத்துறையில் மூன்றாம் நிலை பெற்றொலியத்துறையின் அபிவிருத்தியில் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி குறித்துரைக்கக்கூடிய வகிபாகத்தை வகிக்கின்றது. லங்கா இந்தியன் ஒயில் கம்பனி தற்போது பெற்றொல், டீசல், லுப்ரிகன்ஸ், பிட்டுமின் மற்றும் பங்கர் வியாபாரத் துறைகளில் தொழிற்படுகின்றது.

தொழில் ரீதியாக திரு ஜெய்ன் இந்தியாவின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பட்டயக் கணக்காளராவார். 1992ம் ஆண்டு அவரது வர்த்தமானி (கௌரவ) பட்டத்தினையும் நிறைவு செய்து கொண்டதன் பின்னர் 1995 இல் பட்டயக் கணக்காளரானதுடன் உடனடியாக இந்திய ஒயில் நிறுவனத்தில் இணைந்தார். அவர் சான்றுபடுத்தப்பட்ட விலை மதிப்பீட்டாளராகவும் இருப்பதுடன், இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் முதுமானிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

திரு ஜெய்ன் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடட் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவராகவும் இருக்கின்றார். கடந்த 20 ஆண்டுகளில் இந்திய ஒயில் கம்பனியில் பல்வேறு அலுவலகங்களில் அவரது பதவிக்காலத்தின் போது அவர் கூட்டு நிறுவன அலுவலகம் உள்ளடங்களாக இந்தியன் ஒயில் கம்பனியின் பல்வேறு அலுவலகங்களில் முக்கிய பதவிகளுக்கு பொறுப்பு வகித்ததுடன். நிறுவன நிதி, திறைசேரி மற்றும் வங்கித் தொழில், கேள்வி மற்றும் வழங்கல் சங்கிலி உச்சபயன்பாடு, கப்பல் போக்குவரத்து, ஐஎப்ஆர்எஸ், எல்ஏபி, இடர் முகாமைத்துவம், இணைப்புகள், வரவுசெலவுத் திட்டமிடல், படுகடன் முகாமைத்துவம், காப்புறுதி, கூட்டியைந்த மற்றும் மறைமுக வரி நிர்வாகம், மூலதன மற்றும் வருமான முன்மொழிவுகளின் நிதியில் ஒத்திசைவு, உபாயமார்க்க கூட்ட சபையின் எடுத்துரைப்பு, கணக்காய்வுக் குழு மற்றும் சபைக் கூட்டங்கள். இலாபத்தை உச்சப்படுத்தும் விசேட கற்கைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய முக்கிய ஒப்படைகளைக் கையாளுகின்றார்.

இவர் ஆர்வமிக்க விளையாட்டு வீரரும் இசைப் பிரியருமாவார்.

திரு ரன்தீர் சிங்

பணிப்பாளர்

ரன்தீர் சிங் குருகெஸ்ரா தேசிய தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து இயந்திரவியல் பொறியியல் தொழில்நுட்பமானி பட்டத்தினையும் புது டெல்லி புகையிரதப் போக்குவரத்து நிறுவத்திலிருந்து பல்துறை வழிமுறை ஏற்பாட்டு சேவையில் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

தற்போது இந்திய ஒயில் கம்பனியில் தொழிற்பாடுகள் மற்றும் கப்பல் எரிபொருள் தொழிற்பாட்டுக்கு தலைமை வகித்து சில்லறை விற்பனைக்காக மசகு எண்ணெய் மற்றும் பெற்றோல் இறக்குமதிக்கும் கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் கப்பல் எரிபொருளுக்கான கடல்சார் பெற்றோல் மற்றும் எரிபொருள் எண்ணெய் இறக்குமதிக்கும் பொறுப்பாக இருக்கின்றார்.

இவர் 22 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தை பெற்றோலியத்துறையில் கொண்டிருப்பதுடன், எல்பிஜி மற்றும் லுபஸ் சேல்ஸ் திணைக்களங்கள் உள்ளடங்களாக பல்வேறு கிடங்குகள் மற்றும் முனையங்களில் களஞ்சிய, கையாளுகை மற்றும் விநியோக மற்றும் தொழிற்பாடுகளில் விசேட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளார். இவர் இந்திய ஒயில் கம்பனியில் இந்தியாவில் உள்ள மூன்று களஞ்சிய இடங்களுக்கு பொறுப்பாக இருப்பதுடன் பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தலின் எஸ்ஓபியை பராமரித்தல் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பளித்தல் என்பவற்றை உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாக உள்ளார்.

அத்துடன் இவர் இந்தியா முழுவதிலும் மொத்த பெற்றோலியப் பொருட்களின் இரயில் ஊடான போக்குவரத்து ஒருங்கிணைப்பிற்கு இந்திய ரயில்வேயுடன் ஒருங்கிணைப்பிற்கான நாளாந்த கண்காணிப்பிற்கு பொறுப்பாக இருக்கின்றார்.

திரு நாமல் ஜயசுந்தர

பணிப்பாளர்

நிதி நிபுணர், திரு நாமல் ஜயசுந்தர இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நடவடிக்கைகளில் 38 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன், அவர் பல்வேறுபட்ட அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் பெற்றுள்ளார். வேறுபட்ட நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு இயலளவில் காணப்படும் இவரின் பலமான அனுபவம் எங்கள் சபையை மேலும் பலப்படுத்துகின்றது.

திரு ஜயசுந்தர இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் உரிமத்தைப் பெற்றுள்ளதுடன் இவர் ஏஏடி நிறுவனத்தின் அங்கத்தவராகவும் நிதி, கணக்காய்வு மற்றும் கணக்கியல் அபிவிருத்தி (ஐக்கிய நாடுகள்) நிறுவனத்தின் அங்கத்தவராகவும் இருக்கின்றார்.

இவர் 2017ம் ஆண்டிலிருந்து சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளராக சேவையாற்றுவதுடன், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் இருக்கின்றார். மேலும், இவர் இலங்கை சைனா சமூகத்தின் பொருளாளராகவும், இலங்கை பெல்ஜியம் சமூகத்தின் பொருளாளராகவும் இருக்கின்றார்.

திரு உதித்த குணவர்தன

பணிப்பாளர்

திரு உதித்த குணவர்தன கொழும்பு பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு அரசியல் விஞ்ஞான பட்டதாரியாவார். இவர் 24 வருடகால அனுபவத்தை பல்வேறு முக்கிய பதவிகளிலிருந்து பெற்றுக்கொண்டிருப்பதுடன், நாட்டின் பல்வேறு நிறுவனங்களிலும் அமைப்புகளினதும் வெற்றிக்கு பங்களிப்பை வழங்கியுள்ளார். இவர் மாகம்புற போர்ட் மனேஜ்மன் கன்சல்டென்சி சேர்விஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக 2016 இருந்து 2017 வரை இருந்ததுடன் 2011 இருந்து 2017 வரை சிலோன் பேப்பர் கோப்பரேசன் நிறுவனத்திலும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக இருந்தார். மேலும் 1995 - 2001 வரை கௌரவ பிரதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் பொது உறவுகள் அலுவலராக இருந்ததுடன், பல்வேறுபட்ட முக்கியமான அமைப்புகளிலும் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவராகவும் பொது உறவுகள் செயலாளராக அமைச்சரின் ஊழியர், பாராளுமன்ற செயலாளர் மற்றும் பொது உறவுகள் அலுவலர் என பாரிய அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

முகாமைத்துவ குழு



பிரதீப் கக்கொட ஆராய்ச்சி
பிரதி பொது முகாமையாளர் (நிதி)



பி. அத்துக்கோரள
பிரதி பொது முகாமையாளர்
(பொறியியல் மற்றும் உதவிச் சேவை)



பி.டி.பி. தர்மவங்ச
பிரதி பொது முகாமையாளர்
(மனிதவளம் மற்றும் நிர்வாகம்)



ஏ. மார்டின்
பிரதி பொது முகாமையாளர்
(தொழிற்பாடுகள்)



ஆர். பெரேரா
பிரதான தகவல் அலுவலர்



ஜே. ஜீ. ஜே. டபிள்யூ தர்மபிரேம
முகாமையாளர்
தகவல் முறைமைகள்



எஸ். விக்ரமாராச்சி
முகாமையாளர் - களஞ்சியம்



உதித ஜயலத்
முகாமையாளர் - நிதி



டி.எம்.எச்.பி. தசநாயக்க
முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு



டி.ஏ.ஜே.எஸ். தர்மபிரிய
தொழிற்பாட்டு முகாமையாளர் - வாகனம்



எம்.எஸ்.எம். நியாஸ்
முனைய முகாமையாளர் -
முத்துராஜவெல



அஜித் விஜேசூரிய
முகாமையாளர் - வளாகங்கள் மற்றும்
பொறியியல் சேவைகள்



டீ.வி. சரத்சந்திர - முகாமையாளர்
மொத்தப் போக்குவரத்து மற்றும்
மொத்த உற்பத்தி



என். ஜயவர்தன
முகாமையாளர் - பாதுகாப்பு



எஸ்.என். கமகே
முகாமையாளர்
கூட்டிணைந்த விவகாரங்கள்



கே.எம்.என்.ஏ.சி. பெரேரா
முகாமையாளர்
மனித வளங்கள்



ஆர்.எஸ்.எஸ். பீரேமகுமார
முகாமையாளர்
பெறுகை



டபில்யு.எம்.டீ.டபில்யு.ஏ. பண்டார
முகாமையாளர்
விநியோகம்



ஆர்.ஏ.பி.ஏ. ரனசிங்க
தொழிற்பாட்டு முகாமையாளர்
கரைகடந்த



ஈ.ஏ.ஆர்.டி. பண்டார
முகாமையாளர் -
பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி



ஜி.எம்.ஏ. பண்டார
பதில் முகாமையாளர்
பொறியியல்



கே.என்.ரத்நாயக்க
முகாமையாளர்
ஆய்வுகூடம்



எல்.டபில்யூ. குணசேகர
பிரதான சட்ட அலுவலர்



ஆர். சுசீரிவர்தன
மருத்துவ அலுவலர்



ஆர்.எம்.என். ஜயதிலக
பதில் முகாமையாளர்
விசாரணை



பி.எம்.சி.பி. டயஸ்
பதில் முகாமையாளர்
தீ மற்றும் பாதுகாப்பு

முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு



தொழிற்பாட்டுச் சூழல்

இலங்கையில் பெற்றோலிச் சந்தை


போக்குவரத்து மற்றும் வலுச்சக்தி உற்பத்தி எனும் இரண்டும் தொடர்ந்தும் பெற்றோலிய நுகர்வின் இரு பிரதான இயக்கிகளாக இருக்கின்றன. 2016ம் ஆண்டு 87% வீதமாக இருந்த வெப்ப அடிப்படையிலான வலுச்சக்தி பயன்பாடு அதிகரித்ததன் விளைவாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ம் ஆண்டு வலுச்சக்தி உற்பத்திக்கான பெற்றோலிய விற்பனையானது 48% வீதமாக அதிகரித்துள்ளது. போக்குவரத்துக்கான பெற்றோலிய விற்பனையை (இது மொத்த விற்பனையில் 70% வீதத்திற்கும் அதிகமாகும்) எடுத்துக்கொண்டால், 2016ம் ஆண்டு 42.2% வீதமாக இருந்த விற்பனை 25.5% வீதத்தினால் அதிகரித்துள்ளது.


சில்லறை விற்பனை விலைகள்

இலங்கையில் சில்லறை விற்பனையின் விலைகளை கவனத்தில் கொண்டால் பிராந்தியத்தில் உள்ள ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் விலைக்கொள்கை மற்றும் சந்தை அடிப்படையலான விலையிடல் சூத்திரத்தின் பற்றாக்குறை காரணமாக மிகக் குறைந்த விலையினையே பிரதிபலிக்கின்றது. எண்ணெய் கம்பனிகள் அவர்களின் கொள்வனவு விலைக்கெதிராக தேறிய வரித் தொகையினைப் பெற்றுக்கொள்கின்றனர். கீழ்வரும் வரைபு இலங்கையின் விலைகள், தேறிய வரிகள் என்பன ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக உள்ளமையை தெளிவாக எடுத்துக்காட்டும். உலக மசகு எண்ணெய் விலைகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்ட போதிலும், இலங்கையின் பெற்றோலிய சில்லறை விற்பனை விலைகள் அரசியல் ஊக்குவிப்பை பிரதிபலிக்கும் வகையில் தொடர்ந்தும் 2015ம் ஆண்டிலிருந்து மாற்றமின்றியே உள்ளது. அதேவேளை, உள்நாட்டு சந்தையில் அரசாங்க நிறுவனத்தின் ஆதிக்கம் காரணமாக தனியார் நிறுவனங்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கு அதிகரிக்கும் ஆகுசெலவினைக் கடத்துவதற்கு கடினமாக உள்ளது. இதன் விளைவாக வாகன எரிபொருள் சில்லறை விற்பனையாளர்களின் இலாபமானது, உலக எண்ணெய் விலைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுடன் குறிப்பிடத்தக்க எல்லை அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளது.

2017இல் ஒரு லீற்றரிலிருந்து யார் எவ்வளவைப் பெற்றுக்கொண்டனர்

(டொலர் - லீற்றர்)





புதிய வாகனப் பதிவுகளில் சரிவு ஏற்பட்டாலும், பொருளாதார வளர்ச்சியால் உந்தப்பட்ட வாகன எரிபொருட்களுக்கான கேள்வி 2017ம் ஆண்டு 5% வீதத்தினால் அதிகரித்துள்ளது. உயரும் வட்டி வீதங்கள், இலங்கை ரூபாவின் மதிப்பு மற்றும் மதிப்பு வீதிதங்களுக்கான கடனில் ஏற்பட்ட மாற்றங்கள் புதிய வாகனப் பதிவுகளில் 8% வீத சரிவுக்கு வழிவகுத்தன, இருப்பினும் பெற்றோல் மற்றும் டீசல் நுகர்வு தொடர்ந்து அதிகரித்தது, 2017 இல் முறையே 10% மற்றும் 2% வீதமாக விரிவடைந்தது. அதிகளவு தேவை இருந்தபோதிலும், உலக எண்ணெய் விலைகளில் ஏற்றபடும் ஏற்றத்தாழ்வின் போதும் விலைச் சூத்திரம் இல்லாததன் காரணமாக சில்லறை விலைகள் சுயாதீனமாக இருந்ததனால், கைத்தொழிற்துறை தொடர்ந்தும் தனது போராட்டத்தை தொழிற்படும் சூழலில் தொடரவேண்டியிருந்தது. இவ்வருடத்தில் மசகு எண்ணெய் விலைகள் 27 வீதத்தினால் அதிகரித்ததனால், கடந்த இரு ஆண்டுகளின் போக்கை இது மாற்றியமைத்தது. மசகு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட கூர்மையான அதிகரிப்பின் மத்தியில் சில்லறை விலைகளை பராமரித்தலின் விளைவாக தொழிற்பாட்டு நட்டங்களுடன் குறித்துரைக்கப்பட்ட எல்லைவிலை அழுத்தங்கள் ஏற்பட்டது. இதனை அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் வீழ்ச்சியானது மேலும் விரிவாக்கியது. அத்துடன், அரசாங்கம் சில்லறை விலைகளின் மீதான வரையறைகளை அமுல்படுத்தாததனால், இரட்டையர் சந்தையில் நிலையான விலை நிலமையானது, நுகர்வோருக்கு ஆகுசெலவு அதிகரிப்பை கடத்துவதற்கான சிரமங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு ஏற்படுத்தியது.

2017ம் ஆண்டு நிலவிய வரட்சிக் காலநிலை, நுரைச்சோலை அணு மின்னிலையத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான தடங்கல்கள் என்பன எரிபொருள் அடிப்படையிலான வலுச்சக்தி பிறப்பிப்பினை அதிகரித்தன. அதன் விளைவாக, அதன் மொத்த பெற்றோலிய விற்பனையில் 20 சத வீதத்தைக் கொண்டிருக்கும் வலுச்சக்தி பிறப்பிப்பதற்கான பெற்றோலிய விற்பனை, 2017ம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகப்படி 20.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.


அதேவேளை, உள்நாட்டு சந்தையில் 61.4 சதவீதமான மொத்த பெற்றோலிய விற்பனைக்கு பங்களிப்பு செய்யும் போக்குவரத்துதுறைக்கான பெற்றோலிய விற்பனை, மீளாய்வுக்குரிய ஆண்டில் 4.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

மேலும், விமானப் போக்குவரத்துத்துறைக்கான பெற்றோலிய விற்பனை, இவருடம் மொத்த பெற்றோலிய விற்பனையில் 8.8 சதவீதமாக இருந்ததுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.4 சதவீதத்தினால் அதிகரித்தள்ளது. 2017ம் ஆண்டுக்கான டீசல் மற்றும் உலை எண்ணெய் விற்பனை வலுச்சக்தித் துறையினரினால் பிரதானமாக முன்னெடுக்கப்பட்டதுடன், பெற்றோல் விற்பனையின் அதிகரிப்புக்கு போக்குவரத்துத்துத் துறையின் கேள்வி பிரதானமாக பங்குவகித்தது. மண்ணெண்ணெய் விற்பனையின் அதிகரிப்பானது பிரதானமாக வீட்டுப்பாவனைத்துறையினால் தூண்டப்பட்டது.

அதிகரித்த வட்டி வீதங்கள் மற்றும் கடன்களுக்கான பெறுமதி வீதிதங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் போன்ற கொள்கைகள் வாகனத் தொகையின் வீழ்ச்சிக்கு காரணமானதுடன், இது வாகன குத்தகை செயற்பாட்டில் எதிர்மறையான தாக்கத்தை உருவாக்கியது.

பொருளாதார வளர்ச்சி காரணமாக 2017ம் ஆண்டு மோட்டார் வாகன எரிபொருளுக்கான நுகர்வு 5% வீதத்தினால் அதிகரித்தது.

சுற்றாடல் நிலைத்திருப்பின் மீதான கவனக்குவிப்பை அதிகரித்ததன் ஊடாக வலுச்சக்தி வினைத்திறனுக்கான உயர் தர எரிபொருளுக்கான கேள்விக்கு வழிவகுத்தது.





உலகளாவிய விலைகளின் அதிகரிப்பு போக்கின் மத்தியில், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் உள்நாட்டு பெற்றோல் மற்றும் டீசல் விகைள் மாற்றமின்றி காணப்பட்டதனால், பொருளாதாரத்தில் பெற்றோலியத்துறையில் குறைந்த வருவாய் பெறுபேற்றுக்கு இட்டுச் சென்றது. அத்துடன் இது உள்நாட்டு சந்தையில் பெற்றோலியப் பொருட்களுக்கு சந்தை அடிப்படையிலான விலையிடல் சூத்திரத்தை அமுல்படுத்தவதற்கான தேவையை உத்தரவாதம் செய்கின்றது. இந்த சூத்திரமானது நுகர்வோரின் மீது நேரடியான தாக்கத்தை உருவாக்குவதுடன் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வியாபாரத்தையும் பாதிக்கும்.

2017ம் ஆண்டு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பயனத்தில் கூட்டிணைந்த இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றிய இன்னுமோர் ஆண்டாகும். சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் அதன் விநியோகித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொழிற்பாடுகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை பதிவுசெய்கின்றது. 2017ம் ஆண்டை எடுத்துக்கொண்டால் 2016ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த பெற்றோலிய உற்பத்தி விநியோகமானது 10% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

விநியோக கொள்ளவு		
	கொள்ளளவு (கீலீ)	
	2017	2016
கொலொன்னாவை	2,729,667	2,612,624
முத்துராஜவெல	1,391,029	1,130,640
கிடங்குகள்	1,326,718	1,200,032
	5,447,414	**4,943,295**

பிரதானமாக வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து துறைகளில் ஏற்பட்ட அதிகரித்த கேள்வியின் காரணமாக 2017ம் ஆண்டு நிலையான வீதத்தில் பெற்றோலிய உற்பத்திக்கான கேள்வி அதிகரித்தது. உள்நாட்டு சந்தையில் எரிபொருளுக்கு காணப்பட்ட போக்கானது 2016ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ம் ஆண்டு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வருவாய் மற்றும் இலாபத்தின் வளர்சிக்கு இட்டுச்சென்றது.





நிதியியல் முதலீடு

பங்குதாரரின் நிதி
இ.ரூ. 25.16 பில்லியன்

காசு மற்றும் காசுக்கு சமனாவை இ.ரூ. 1.5 பில்லியன்

இவ்வாண்டு தேறிய சொத்துக்கள் 10% வீதத்தினால் அதிகரித்தது


நேர்மறை எதிர்கால கண்ணோட்டத்திற்கு நடைமுறையில் உள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஆகுசெலவு வினைத்திறனால் ஆதரவளிக்கப்பட்டது.

நிதியியல் செயலாற்றுகை

வருமானம்


சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வருமானம் செயன்முறைப்படுத்தல் வருவாய், போக்குவரத்து சேவைகள் மற்றும் கப்பல் போக்குவரத்து எரிபொருள் வழங்கல் நடவடிக்கைகளின் தொழிற்பாடுகள் என்பவற்றில் இருந்து பெறப்படுவதுடன், 2017ம் ஆண்டு மொத்த வருமானத்தில் 80% வீதம் செயல்முறைப்படுத்தல் வருமானத்தினால் பெறப்பட்டதாகும்.


வருமான அமைவு (இ.ரூ.மில்)



சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வருமானம் இவ்வருடம், மின்வலு உற்பத்தித்துறையினதும் வாகன எரிபொருளினதும் கொள்ளளவில் ஏற்பட்ட குறித்துரைக்கப்பட்ட அதிகரிப்பின் காரணமாக ரூ.14.18 பில்லியனாக இருந்ததுடன், இது 12% வீதத்தினால் அதிகரித்துள்ளது. நாடு முழுவதிலும் காணப்பட்ட பரந்த வறட்சி சுற்றுச்சூழல் சூழ்நிலை மற்றும் இலங்கையில் உள்ள நீரியல் மின்சாரத்தின் குறைந்த பாவனை மற்றும் வெப்ப மின்சாரத்தின் அதிகரித்த பாவனை காரணமான வலுவான தேவையால் உந்தப்பட்டு 10% வீத கொள்வளவு அதிகரிப்பின் காரணமாக கம்பனியின் மின் வலுத்தேவை ரூ.1.422 பில்லியனினால் அதிகரித்தது.

வருமானம் மற்றும் மொத்த இலாப எல்லை போக்கு (இ.ரூ.மில்)






மொத்த இலாபம்

இவ்வருடம் கம்பனியின் மொத்த இலாபம் 13% வீதத்தினால் அதிகரித்ததுடன், இது பெற்றோலிய உற்பத்திகளின் கொள்வனவில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் கப்பல் போக்குவரத்து எரிபொருள் வழங்கல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மொத்த இலாப எல்லையானது ரூபா 781 மில்லியனால் அதிகரித்துள்ளது.

தொழிற்பாட்டு செயலாற்றுகை

இவ்வருடம் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் அகற்றலில் இருந்தான ஈட்டுகையின் வீழ்ச்சியின் காரணமாக ரூபா 25 மில்லியன் குறைவடைந்ததுடன் இது ஏனைய வருமானங்களில் 5% வீத சிறிதளவான வீழ்ச்சியை வெளிப்படுத்தியது. இவ்வருடம் மாறும் சந்தை நிலைமையின் மத்தியிலும் தொழிற்பாட்டு வினைத்திறன்கள் மற்றும் ஆகுசெலவுகளைக் குறைத்தல் என்பவற்றின் மீது கவனத்தை செலுத்தியமையினால் கம்பனியின் மேந்தகைச் செலவுகள் ரூபா 4.03 பில்லியனினாலும் 1.1% வீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. தொழிற்பாட்டு மட்டத்தில், தொழிற்பாட்டு இலாபமானது ரூபா 3.21 பில்லியனாக இருந்ததுடன், இது கடந்த ஆண்டில் பெற்றுக்கொண்ட ரூபா 2.41 பிலிலயனுடன் ஒப்பிடுகையில் 33% வீத தொழிற்பாட்டு வளர்ச்சியைக் கம்பனி கொண்டிருந்தது

தொழிற்பாட்டு செயலாற்றுகை %




வரிக்கு முன்னரான இலாபம்

குறுகிய கால முதலீட்டு முயற்சிகளின் புலனுணர்வு முகாமைத்துவம் காரணமாக இவ்வருடம் நிதியியில் வருமானம் ரூபா 189.4 மில்லியனாகவும் வளர்ச்சியானது 110% வீதமாகவும் அதிகரித்தது. அதேவேளை நிதிச் செலவுகள், கடன்கள் தீர்க்கப்பட்டமையினால் ரூபா 124.07 மில்லியனினால் அதாவது 26% வீதத்தினால் குறைவடைந்தது. வரிக்கு முன்னரான இலாபம் கடந்த வருடம் பெற்றுக்கொண்ட ரூபா 2,330 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் ரூபா 3,273 மில்லியனைப் பெற்றுக்கொண்டதுடன், இது 40% வீதத்தினால் அதிகரித்ததுள்ளது.

வரிக்கு பின்னரான இலாபம் மற்றும் ஏனைய விரிவான வருமானம்

இவ்வருடம் பிற்போடப்பட்ட வரி இவ்வருடம் குறைவடைந்ததனால் இவ்வருடத்திற்கான வரி ரூபா 473.74 மில்லியனாக இருந்ததுடன், இது 20% வீதத்தினால் குறைவடைந்தது. கம்பனியின் ஏனைய விரிவான வருமானம் பிரதானமாக வரையறுக்கப்பட்ட நன்மைத் தேவைகளின் மீது ஒத்திசைவான ஈட்டுகையினை பிரதானமாக உள்ளடக்கியிருந்தது.


முன் மற்றும் பின் வரி இலாபம் (இ.ரூ.மில்)



நிதி நிலமை

மொத்த சொத்துக்கள்


சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஐந்தொகை தொடர்ச்சியான சொத்து வளர்ச்சியைப் பலமாக பிரதிபலித்ததுடன், பிரதானமாக வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகள் அதிகரித்தமை காரணமாக, இது 7% வீதத்தினால் ரூபா 29.99 பில்லியனாக மொத்த சொத்து அதிகரித்தது.




ஐந்தொகையின் அமைவானது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு மொத்த சொத்துக்களில் 57 வீதமாக இருந்த நடைமுறையல்லாச் சொத்துக்கள் இவ்வருடம் 61 வீதமாக அதிகரித்து நடைமுறையல்லாச் சொத்துக்களை நோக்கியிருந்தது. காசு நிலமையானது தொடர்ந்தும் காசு மீதியுடன் பலமாக காணப்பட்டதுடன், குறுகிய கால முதலீடுகள் ரூபா 1.47 பில்லியனை பதிவுசெய்தது (அல்லது மொத்த சொத்துக்களில் 5% வீதம்). வருமான வளர்ச்சி ஏற்பட்ட போதிலும், வர்த்தக பெறுவனவுகளின் மீதி அதிகரிப்புடன் தொழிற்பாட்டு செயற்பாடுகளில் பிறப்பாக்கப்பட்ட காசின் வீழ்ச்சியினால் முன்னைய வருடத்தினை விட காசு மீதியானது நேர்மறையாக வீழ்ச்சியடைந்தது. அத்துடன், இந்த காசு வீழ்ச்சியானது காசுப்பாச்சலில் ஏற்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவு நிதி நடவடிக்கைகள் காரணமாக மேலும் அதிகரித்தது.

நடைமுறை விகிதம் மற்றும் உடனடி சொத்து விகிதம் என்பன முறையே 5.5 மடங்காகவும் 5 30 மடங்காகவும் 31 டிசம்பர் 2017ம் திகதியில் காணப்பட்டது.

மொத்த சொத்துக்களின் வளர்ச்சி (இ.ரூ.மில்)




நடைமுறை/உடனடி சொத்து விகிதங்கள்



சொத்து புரள்வு விகிதம்

சொத்து புரள்வு விகிதமானது கம்பனியின் விற்பனையை உருவாக்குவதற்கு அதன் சொத்தினைப் பயன்படுத்தும் வினைத்திறனை அளவிடுகின்றது. இது அவ்வருடத்தின் தேறிய விற்பனையை சராசரி மொத்த சொத்துக்களினால் வகுக்கும் சூத்திரத்தின் மூலம் பெறப்படுகின்றது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மொத்த சொத்துக்கள் 7% வீதத்தினாலும் வருடாந்த வருமானம் 12% வீதத்தினாலும் அதிகரித்துள்ளது. இவ்வருடம் கம்பனி தனது சொத்துக்களைப் பயன்படுத்தும் வினைத்திறனை மேம்படுத்தியுள்ளதை வெளிப்படுத்தும் சொத்துப் புரள்வு விகிதமானது கடந்த ஆண்டு காணப்பட்ட 46% வீதத்திலிருந்து 49% வீதமாக மாறியுள்ளதுடன், இது 3.07% வீத வளர்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது.


சொத்துப் புரள்வு (%)



உரிமைப் பங்கு மீதான வருவாய்

கம்பனி 2016ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ம் ஆண்டு 11% வீதத்தினால் தனது உரிமைப் பங்கு மீதான வருவாயை அதிகரித்துள்ளது. இந்த 2017ம் ஆண்டு முன்னேற்றமானது 2017ம் ஆண்டு பெறப்பட்ட இலாபத்தினால் உருவாக்கப்பட்டதாகும். இந்த விகிதமானது பங்குதாரர்களுக்கு அவர்களின் உரிமைப் பங்கு மூலதனம் மீது வழங்கப்பட்ட இலாபத்தினை அளவிடுகின்றது.


உரிமைப் பங்கு மீதான வருவாய் (%)



மொத்த பொறுப்புகள்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் உரிமைப் பங்கு அடித்தளமானது ரூபா 25.06 பில்லியனுடன் பலமாக இருந்ததுடன் கம்பனியின் மொத்த சொத்துக்களில் 84% வீதத்திற்கு நிதியினை வழங்கியது. இந்த வருடம் வரிக்குப் பின்னரான இலாபம் அதிகரித்தமையினால் மொத்த உரிமைப் பங்கானது 10% வீதத்தினால் அதிகரித்தது. வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ரூபா 1.845 பில்லியனினால் அதிகரித்தது (கடந்த ஆண்டு காணப்பட்ட ரூபா 1.311 பில்லியனில் இருந்து. கம்பனியின் மொத்தப் பொறுப்புகள் மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனை மொத்தமாக செலுத்தியமை காரணமாக, ரூபா 5.2 பில்லியனில் இருந்து ரூபா 4.8 பில்லியனாக குறைவடைந்தமையினால், இது 7% வீதமாக குறைவடைந்தது.

மொத்த பொறுப்பு அமைவு




பங்குதாரர் பெறுமதி உருவாக்கல்

கம்பனி அதன் பங்குதாரர்களுக்கு நிலையான வருமானத்தை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன், கடந்த ஆண்டு பெறப்பட்ட பங்கிலிருந்து பெறப்பட்ட உழைப்பான ரூபா 2.32 உடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் அது நேர்மறையாக ரூபா 3.73 வினால் அதிகரித்துள்ளதுடன் இது கடந்த ஆண்டு ரூ. 0.30 உடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் ரூ 0.34 இனால் அதிகரித்துள்ளது.


	2017	2016
பங்கிற்கான பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் (ரூ.)	3.73	2.32
பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ)	34	30
பங்கிற்கான பங்குலாபம் (ரூ)	0.54	0.65

கம்பனியின் பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி மற்றும் பங்கிற்கான உழைக்கப்பட்ட வருமான விகிதம் என்பனவற்றின் போக்கினை கீழ்வரும் வரைபுகள் காட்டுகின்றன. பங்கிற்கான தேறிய சொத்து 30 இருந்து 40 மடங்காக அதிகரித்துள்ளது. பங்கிலிருந்தான வருமானம் 3.73 இருந்து 2.32 ஆக அதிகரித்துள்ளது.

பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (இ.ரூ)




பங்கிற்கான உழைப்பு வருமானம்



திரவநிலை நிலை

கடந்த ஐந்து வருடங்களில் கம்பனியின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் உடனடி சொத்து விகிதங்கள் முறையே 5.47 மடங்காகவும் 5.30 மடங்காகவும் அதிகரித்தன. இந்த திரவநிலை விகிதங்கள் அதன் நிதித்தேவைகளை ஈடுசெய்வதற்கான கம்பனியின் நிலையை எடுத்துக்காட்டும்.


நடைமுறை / உடனடி சொத்து விகிதங்கள்




உந்தல் மற்றும் மூலதன கட்டமைப்பு

கம்பனியின் நிதி 84% வீதமான சொத்துக்கள் உரிமைப் பங்கு மூலதனத்திலிருந்து பெறப்படுவதுடன் மீதி 16% வீதம் நீண்ட கால மற்றும் குறுகிய காலக் கடன்களில் இருந்து பெறப்படுகின்றது. கடந்த சில வருடங்களில் உரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு காரணமாக வளர்ச்சியடைந்துள்ளமையை கீழ்வரும் வரைபு எடுத்துக்காட்டுகின்றது. இந்த விடயம் கியரிங் விகிதம் குறைவடைவதனால் மேலும் பலப்படுத்தப்படுகின்றது.


நிதியிடல் கட்டமைப்பு



நிதியிடல் மூலங்கள் (இ.ரூ.மில்)



அதிகரிக்கும் விகிதம்



தயாரிக்கப்பட்ட மூலதனம்



புதிதாக 25 பவுசர்-களையும் புதிய தாங்கி லொறி ட்ரெயிலர்களையும் சேர்த்துக் கொள்ளல்



தயாரிக்கப்பட்ட மூலதனத்தில் மேலும் ரூபா 833 மில்லியனை முதலிடுதல்



கொலொன்னாவை மற்றும் முத்துராஜவெலயில் செயன்முறை மறு கட்டமைப்பு மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல்.



நாடு முழுவதிலும் பெற்றோலியப் பண்டங்களை விநியோகிப்பதற்கு களஞ்சிய வசதியின் உற்பத்தித்திறனின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மூலதனத்தின் தற்போதைய விரிவாக்கம்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தயாரிக்கப்பட்ட மூலதனம், நாளாந்த தொழிற்பாடுகளின் வினைத்திறனான முகாமைத்துவத்தை இயலுமாக்கும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் பெற்றோலியப் பொருட்களை விநியோகித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலுக்குப் பயன்படும் அதன் பௌதீக உட்கட்டமைப்பை உள்ளடக்கியுள்ளது. நிறுவனத்தின் பௌதீக உட்கட்டமைப்பின் பிரதான உட்கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

களஞ்சியத் தாங்கிகள்: சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் கொலொன்னாவை மற்றும் முத்துராஜவெலவில் உள்ள இரண்டு முனையங்களுடன் 12 எண்ணெய் களஞ்சியங்களையும் விநியோகித்தல் வசதிகளையும் நாடு முழுவதிலும் கொண்டுள்ளது. இந்த உட்கட்டமைப்பு வசதிகள் இடையூறின்றிய தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உதவுகின்றது.

எண்ணெய் முனையங்கள் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள கிடங்குகள்: எங்கள் வசதிகள் 100 களஞ்சிய தாங்கிகள், பைப் லைன்கள், எஸ்பீபிஎம், குழாய்கள் மற்றும் கன்றி அலகுகள், பவுசர்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளன. கொலொன்னாவையில் அமைந்துள்ள முனையம் பெற்றோலியப் பொருட்களுக்கான பரிசோதனைகளை நடாத்தும் நவீன ஆய்வுகூடத்தைத் தொழிற்படுத்துகின்றது.

2017ம் ஆண்டு பெறுமதி சேர்ப்பாக, கம்பனி கீழ்வருவனவற்றின் ஊடாக அதன் தயாரிக்கப்பட்ட மூலதனத்தை மேலும் பலப்படுத்தவதற்கு ரூபா 833 மில்லியனை முதலீடு செய்துள்ளது

- புதிதாக 25 பவுசர்களையும் புதிய தாங்கி லொறி ட்ரெயிலர்களையும் சேர்த்துக்கொள்ளல்.
- பெற்றோலியப் பொருட்களுக்கான மேலதிக களஞ்சிய தாங்கிகளுக்கான வசதிகளை அதிகரித்தல்.
- கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலொன்னாவை முனையத்திற்கு செல்லும் அரித்தலுக்குள்ளாகியிருக்கும் பழைய குழாயினை மீள நிறுவுதல்.
- கொலொன்னாவை ஆய்வுகூடத்தில் புதிய உபரணங்களில் முதலீடு
- இரு புதிய கலி பவுசர்களையும் பூம் மற்றும் பசஞ்சர் பிளட்போம் ட்ரக்குகளைப் பெறுகை செய்தல்.

2017ம் ஆண்டின் பிரதான கருத்திட்டங்கள்

கொலொன்னாவை நிறுவலில் உள்ளக மிதக்கும் கூரையுடனான 15000 கனவளவுடைய களஞ்சிய தாங்கியினை பெறுகைசெய்தல், நிர்மாணித்தல் மற்றும் ஆரம்பித்தல்.

இலங்கையின் வருடாந்த சராசரி எரிபொருள் கேள்வியானது 4 – 5% வீதத்தினால் அண்ணளவாக அதிகரிப்பதனால், இந்த அதிகரிக்கும் வீதத்துடன் ஒவ்வொரு பெற்றோலியப் பொருட்களையும் போதியளவு கையிருப்புடன் பேணுவதற்கான வசதிகளை இலங்கை கொண்டிருத்தல் வேண்டும். கொலான்னாவை மற்றும் முத்துராஜவெலவில் அமைந்துள்ள இரு பிரதான நிறுவல்களில் இருந்து எந்த நேரத்திலும் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கான கையிருப்பைக் கொண்டிருத்தல் நிர்ணயிக்கப்பட்ட அளவாகும். 2009ம் ஆண்டின் பின்னர், இலங்கையின் கடந்த கால சிவில் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியினால் இலங்கையின் பெற்றோலுக்கான கேள்வி 90% வீதத்தினால் உயர்ந்துள்ளது. 1999ம் ஆண்டின் பின்னர் எந்தவொரு தாங்கியும் கொலொன்னாவையில் நிறுவப்படவில்லை. இந்த அனைத்து விடங்களையும் கவனத்தில் கொண்ட அமைச்சரவை, எந்தவொரு நேரத்திலும் 30 நாளுக்குரிய பெற்றோலியத் தேவையை வழங்கக்கூடிய களஞ்சிய வசதியைப் பேணுவதை உறுதிப்படுதுதவற்கு, சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் இரு பிரதான நிறுவல்களிலும் 100,000 மெற்றிக்தொன் களஞ்சிய வசதியுடைய மேலதிக தாங்கிகளை நிறுவுதற்கான தீர்மானத்தை 2012ம் ஆண்டு மேற்கொண்டது.

இந்த பாரிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முதற் கட்டமாக, ஒன்றரையாண்டு காலப்பகுதிக்குள் ரூபா 412 மில்லியன் செலவில் கொலொன்னாவை நிறுவலில் 15,000 கனவளவு (11,000 மெற்றிக்தொன்) களஞ்சிய வசதியுடைய தாங்கியை நிறுவுவதற்கு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் தீர்மானித்தது. இந்த தாங்கியின் வகையானது உள்ளக மிதக்கும் கூரையுடன் கூடிய நிலத்திற்கு மேல் செங்குத்தாக இரும்பு களஞ்சிய தாங்கியாகும். வெல்டிங் செய்யப்பட்ட களஞ்சிய தாங்கியானது குறைந்தபட்ச கசிவினைக் கொண்டிருப்பதுடன் உள்ளக மிதக்கும் கூரையானது ஆவியாதல் இழப்பினை மட்டுப்படுத்தும். இந்த முன்மொழியப்பட்ட தாங்கியில் காஸொலைன் 92 (பெற்றோல் 92) வகை களஞ்சியப்படுத்தப்படும்.

இந்தக் கருத்திட்டமானது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியுடன் இணைந்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஓயில் கம்பனியின் விநியோகித்தல் நடவடிக்கைகளுக்கும் பெற்றோலியப் பொருட்களின் களஞ்சியப்படுத்தலுக்கும் இலங்கையில் பொது பயன்பாட்டாளர் வசதிக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும்.

தாங்கியானது கொலொன்னாவை நிறுவலில் பெற்றோலியப் பொருள்கள் களஞ்சியப்படுத்தல் பகுதியின் உட்பகுதியில் நிறுவுதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், இதற்கான நிதி சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் உள்ளக மூலத்திலிருந்து வழங்கப்படுகின்றது. இதற்கான முன் பொறியியல் வடிவம் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டதுடன், இந்தக் கருத்திட்டானது பொறியியில், பெறுகை மற்றும் நிர்மாணிப்பு ஒப்பந்தமாகும். இதற்கான ஒப்பந்ததாரர் என்டோ ஈஸ்ட் (தனியார்) லிமிடட் நிறுவனமாகும்.

நிர்மாணிப்பு பணிகள் 22 டிசம்பர் 2017 அன்று பெற்றோலிய வளங்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ரனதுங்க அவர்களினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



முத்துராஜவெலவில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள்

மேலதிக கொள்ளவை அறிமுகப்படுத்தும் கருத்திட்டத்திற்கு சமாந்தரமாக, சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் 2016 இருந்து 2030ற்கு அதிகரிக்கும் கேள்விக்கு அவசியமான எரிபொருள் நிரப்பும் வசதிகளை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளது. முத்துராஜவெல முனையத்தில் தற்போதுள்ள நிரப்பும் வசதிகளின் உச்சளவு பயன்பாட்டினைக் கவனத்தில் கொண்டு உபாயமார்க்கமானது உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக தற்போதுள்ள கன்ரே கட்டமைப்பை மேலதிக எட்டு லோட் செய்யும் பயன்கலன்களுடன் வசதியளித்து, புதிய பம்ப் ஹவுசையும் அவசியமான வசதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்திக்கு முன்மொழியப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 550 மில்லியன் ஆகும்.

முத்துராஜவெல முனையம் ஒரு அரை தன்னியக்க முனையாமாவதுடன் அது கொலொன்னாவை நிறுவல் மற்றும் ஏனைய சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் கிடங்குகளுடன் ஒப்பிடுகையில் பல்வேறுபட்ட சிறப்புகளை வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனில் கொண்டுள்ளது. நிரப்பல் கன்டரியில் உள்ள அனைத்து பயன்கலன்களும் 10 பெட்டி வீதித் தாங்கிகளை ஏற்றுவதற்கான வசதிகளைக் கொண்டுள்ளதுடன், ஏனைய நிறுவனல்களுடன் ஒப்பிடுகையில் ஒரு வீதித்தாங்கியின் திரும்பல் நேரமானது மிகக்குறைவாக உள்ளது. அத்துடன், துறைமுகக் கட்டணங்கள் ஏதுமின்றி முத்துராஜவெல முனையத்திற்கு எஸ்பீபிஎம் - 2 ஐ மாற்றம் செய்ய முடியும். மற்றைய குறிப்பிடக்கூடிய சிறப்பு என்னவெனில், இந்த முனையமானது, 2019ம் ஆண்டிலிருந்த பாவனைக்கு வரும் அவுட்ர் சேர்குலர் எக்ஸ்பிரஸ்வேயின் வாயிலில் அமைந்துள்ளது. இந்த அவுட்ர் சேர்குலர் எக்ஸ்பிரஸ்வே கொழும்பில் இருந்து வரும் அனைத்து எக்ஸ்பிரஸ்வேயுடன் தொடர்புபடுவதனால், முத்துராஜவெலவிற்கு நாட்டின் எந்தவொரு பகுதியிலிருந்தும் குறைந்தளவு தொழிற்பாட்டு செலவுடன் வந்துசேர முடியும். முத்துராஜவெல முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக இந்த பூகோளவியல் இடவமைவு உபாயமார்க்க சிறப்பினை உச்சப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கருத்திட்டமானது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொலைநோக்கான "தெற்காசியாவின் மிகவும் வினைத்திறனுள்ள பெற்றோலிய முனையச் செயற்பாட்டாளராக உருவாதல்" என்பதற்கு மிகப் பொருத்தமாக அமைகின்றது. சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை இந்தக் கருத்திட்டத்திற்கான அனுமதியை வழங்கியுள்ளதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கேள்வி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் அமுல்படுத்தலுடன் குறைந்த நேரத்தில் நாடு முழுவதிலும் உள்ள பகுதிகளுக்கு செல்வதற்கான சிறப்பு போட்டித்தன்மையை சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் பெற்றுக்கொள்ளும்.



முத்துராஜவெல முனையத்தில் உள்ள இலக்கம் 6,7 மற்றும் 8ம் தாங்கிகளுக்கான உள்ளக மிதக்கும் கூரையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவல்.

நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியினை நிறைவேற்றும் நோக்குடன், சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் தொடர்ச்சியாக முனையத் தொழிற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுகின்றது. பெற்றோலியப் பொருட்களைக் கையாளுகை தொழிற்பாடுகளின் போது ஆவியாதல் காரணமாக ஏற்படும் இழப்பானது குறிப்பிடத்தக்க பிரச்சினையாக சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆவியாதல் என்பது பொருளாதார இழப்பு மட்டுமல்லாமல் சூழல் மாசடைவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. பொறுப்பான கூட்டிணைந்த குடிமகன் என்ற வகையில் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முகாமைத்துவம் இந்த ஆவியாதல் இழப்பினை குறிப்பிட்டளவில் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தன் கவனத்தை செலுத்தியுள்ளது

அமெரிக்க பெற்றோலிய நிறுவனத்தினால், நிலையாக நிறுவப்பட்ட கூரைத் தாங்கிகளினால் ஏற்படும் ஆவியாதலைக் குறைப்பதற்கு உள்ளக மிதக்கும் கூரை நிறுவல் முறையானது விதப்புரை செய்யப்பட்டுள்ளது. உள்ளக மிதக்கும் கூரை நிறுவல் முறையானது ஆவியாதலை ஒழுங்குபடுத்துவதுடன், வெடிக்கக்கூடிய வாயுக்கள் பாதுகாப்பான வகையில் வெளியேறுவதற்கு

வழிவகுக்கும். தாங்களினுள் உள்ளக மிதக்கும் கூரை நிறுவல் பொருளாதார ரீதியாகவும் இலாபத்தை வெளிப்படுத்தும். உள்ளக மிதக்கும் கூரை நிறுவல் திரவ மேற்பரப்பின் பிரதான பகுதிகளை மூடுவதுடன், அதனூடாக 98% வீதம் வரையிலான புகைவெளியேறலை குறைப்பதற்கு வினைத்திறனான மூடியினை இடமுடியும்.


ஆவியாதல் இழப்பினைக் குறைப்பதற்காக, உள்ளக மிதக்கும் கூரையை நிறுவுவதற்கு மூன்று (03) நிலையான டோம் கூரைகள், வெல்டிங் ஸ்டீல், நிலையான பெற்றோல் களஞ்சிய தாங்கிகள் முத்துராஜவெல முனையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த முதலீடு ரூபா 54.4 மில்லியன் ஆவதுடன், 2017ம் நிதியாண்டினுள் 50% வீத பணிகள் பூர்த்தியடைந்துள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் ஊடாக, பெற்றோலிய தயாரிப்புகளின் கழிவுகளை மட்டுப்படுத்ததல் மட்டுமல்லாமல், இந்த அழகான தீவின் பெறுமதியான சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்யும் என சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் நம்புகின்றது.







தயாரிக்கப்பட்ட மூலதனம் (இ.ரூ.மில்)



மனிதவள மூலதனம்



திறமையானவர்களைக் கவர்தல்: இவ்வருடம் 41 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 26 ஊழியர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டனர்.



ஊழியர்களைக் கவர்தல் வீதமானது 3.83% வீதத்திலிருந்து 3.85% வீதமாக சிறிதளவில் அதிகரித்துள்ளது.



இந்த வருடம் பணியிட காயங்கள் ஏதும் ஏற்படவில்லை.




2018/2019ற்கான கண்ணோட்டம் : திறன் அபிவிருத்தி மீது கவனம் கொள்ளப்பட்டது.

ஒரு கம்பனியாக, நாடு முழுவதிலும் தடையின்றிய செவைகளை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றதுடன் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு மனிதவளமானது முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது என்பதை கம்பனி விளங்கிக்கொண்டுள்ளது. சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பிரதான சொத்தாகவும் உத்தேச உழைப்பு, உற்பத்தித்திறன் மற்றும் நீண்டகால நிலைத்திருப்பின் முக்கிய காரணியாகவும் மனிதவளம் அமைந்துள்ளதுடன், பணியிடத்தில் எந்தவொரு பாரபட்ச நடவடிக்கைகளும் ஏற்பாடாதிருப்பதுடன் அனைத்து ஊழியர்களுக்கும் சமமான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

கம்பனி முழு நாட்டிற்கும் எரிபொருளை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதன் ஊடாக சேவையாற்றுவது மட்டுமல்லாமல், வயது, பால் மற்றும் மத வேறுபாடுகளின்றி நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் சமமான சந்தர்ப்பத்தை வழங்குவதன் ஊடாகவும் அனைத்து இனத்தவருக்கும் தொழில்படையில் இணைவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் ஊடாகவும் சேவையினை வழங்குகின்றது. கம்பனி சிறந்த மனிதவள மூலதன முகாமைத்துவதற்திற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தரம் மற்றும் பால் (எண்ணிக்கை) அடிப்படையில் ஊழியர்கள்




எங்கள் உபாயமார்க்கத்திட்டம், வாழும் எங்கள் கூட்டிணைந்த பெறுமதிகளின் பின்னால் உந்துசக்தியாக சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் 3045 ஊழியர்களைக் கொண்ட மக்கள் முகாமைத்துவம் எங்கள் அணுகுமுறை ஆகும். நாங்கள் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தினராக, ஊழியர்களை எங்கள் உள்ளக வாடிக்கையாளர்களாகவும் அவர்களுடன் நீண்டகால உறவுமுறையைப் பேணுவதற்கான முறைமையை அபிவிருத்தி செய்தல் வேண்டும் எனவும் நம்புகின்றோம். எங்கள் ஊழியர்களின் தெரிவு கவர்ச்சியான ஊதியத் திட்டங்கள், பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் மற்றும் தொழில் அபிவிருத்தி மற்றும் அனைத்து ஊழியர்களுக்கான மாறும், காயங்களற்ற சூழல் என்பவற்றை உறுதிசெய்கின்றது.


சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் மனிதவள ஆளுகை: இந்தக் கம்பனியின் மனிதவளக் கொள்கையானது இதன் தாய் கம்பனியான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொள்கைக்கு இசைவாக இருப்பதுடன், தேவைக்கு அமைவாக ஊழியர் சட்டத்திற்கு அமைவாக திருத்தியமைக்கப்படுகின்றது. ஆளுகை சட்டகம் கடமைகளை தெளிவாகப் பிரித்தல், நியாயமான அதிகாரம் மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புகளை ஊக்குவிக்கின்றது. இவ்வருடம், திறமையானவர்களை வலுவூட்டும் நோக்கத்துடன், எங்கள் ஊக்குவிப்பு கொள்கையினை நாங்கள் மீளாய்வு செய்து திருத்தியடைந்தோம்.

எங்கள் திறமையான குழாம்: எங்கள் குழாம், திறன்கள் மற்றும் கைத்தொழில் அனுபவ நியதிகளின் அடிப்படையில் அமைந்த 3,045 ஊழியர்களைக் கொண்டமைந்துள்ளது. எங்கள் விநியோக வலையமைப்பின் விரிவான பூகோளவியல் விநியோக அமைப்புக்கு அமைவாக, நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றார்கள்.

பிரதேச ரீதியாக ஊழியாகளின் விநியோகம்



வகை மற்றும் பால் ரீதியாக ஊழியர்கள் (எண்ணிக்கை)



2017ம் ஆண்டின் உபாயமார்க்க கவனக்குவிப்பு

தொழிற்படும் பரப்பின் சவால்களை எதிர்நோக்கும் வகையில் இந்த வருடத்தின் மனிதவள உபாயமார்க்கம் உருவாக்கப்பட்டது. இந்த சவால்கள் கீழ்வருமாறு பட்டியலிடப்பட்டன.

- திறமை ஈர்ப்பு
- நன்மை கட்டமைப்பு மேம்படுத்தல்
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி

திறமை ஈர்ப்பு : இலங்கையின் பிரதான பெற்றோலிய சேவை வழங்குனரின் துணை நிறுவனமாக, சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஊழியர்களின் திறமையைக் கூர்மைப்படுத்துவதற்கும் உகந்த பணிச் சூழலில் அணுகுமுறையை வளர்ப்பதற்கும் ஒரு தனித்தவமான வாய்ப்பை வழங்குகின்றது. இது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் தன்னையொரு தொழில் வழங்குனராக தன்னை நிலைநிறுத்த உதவுகின்றது. இது தொழில்துறையின் சிறந்த தன்மைகளை ஈர்க்கின்றது. நாங்கள் ஒரு சமவாய்ப்பு தொழில் வழங்குனராக பால், வயது அல்லது இன பாகுபாடுகளை பராமல் ஆட்சேர்ப்பு, பதவியுளர்வு மற்றும் ஏனைய நன்மைகளை வழங்கும்போது செயற்படுகின்றோம். கம்பனியின் தொடர்ச்சியான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு, சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் செயலாற்றுகையின் அடிப்படையில் புதிய ஆட்சேர்ப்புகளையும் பதவியுயர்வுகளையும் மேற்கொள்ளுகின்றது. இவ்வருடம் நாங்கள் 26 புதிய ஊழியர்களை சேர்த்துக்கொண்டோம்.

அனைத்து ஆட்சேர்ப்புகளும் பதவியுயர்வுகளும் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு பிரமாணங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுவதுடன், இவ்வருடத்தினுள் 118 உள்ளக பதவியுயர்வுகளை கம்பனி மேற்கொண்டது.

கம்பனியின் திறமையை மேம்படுத்துவதற்கான அணுகுமுறை, கீழ்வரும் நோக்கங்களை நோக்கி தொடர்ச்சியாக பணிபுரிவதற்கு முகாமைத்துவத்தி-ற்கும் ஊழியர்களுக்கும் உள்ள பரஸ்பரப் பொறுப்பை குறிக்கின்றது.

- ஒரு தகுதிவாய்ந்த, உற்சாகமான மற்றும் பொருத்தமான தொழிற்படையை உறுதிசெய்வது
- அனைத்து ஊழியர்களுக்கும் தரமான பணிச் சூழல் மற்றும் வளங்களை உறுதிப்படுத்துவது
- இலட்சிய நிபுணர்களுக்கு பணி செய்வதற்கான இடமாகவும் மேலும் நிபுணத்துவத்திற்கு வசதியளிக்கும் இடாகவும் கருதப்படும் இடமாக சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் உத்தரவாதப்படுத்தல்.
- ஊழியர்களுக்கிடையில் பரஸ்பர நமபிக்கை மற்றும் கூட்டிணைவை ஊக்குவித்தல்.
- அவர்களுடைய தகைமைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கும் அவர்களுடைய பரப்பெல்லையை விரிவாக்குவதற்கும் நிபுணத்துவ அபிவிருத்திக்காக ஊழியர்களுக்கு சந்தர்ப்பங்களை ஊக்குவித்தல்.
- பணியிடத்தில் சம நிலையை உத்தரவாதப்படுத்தல்.

ஊழியர் நன்மைகள்

நிறுவனம் சம்பளக் கட்டமைப்புகளில் வெளிப்படைத்தன்மையைக் கொண்ட கொள்கையைப் பின்பற்றுவதுடன், பாலினத்தைப் பொருட்படுத்தாமல், ஒரே தர வகைக்கள் ஊதிய அளவீடுகளில் எந்த வித்தியசமும் இல்லை என்பதை உறுதி செய்கின்றது.

மேலும், சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்-தின் ஊழியர்கள் சபையின் பல்வேறுபட்ட நன்மைகளையும் நலன்புரி நடவடிக்கைகளின் நன்மைகளையும் ஒருங்கே அனுபவிக்கின்றனர்.

சம்பன ஆளணிக்கு ஊழியர் நன்மைகள்	விபரம்	நன்னடத்தைக் காலத்தில் நன்மைகள்
விடுமுறை		
- வருடாந்த விடுமுறை	14 நாட்கள். ஊழியர் சேவையில் இணைந்துகொண்ட திகதியில் தங்கியிருக்கும்	
- அமைய விடுமுறை	7 வேலை நாட்கள்	ஆம்
- மருத்துவ விடுமுறை	21 வேலை நாட்கள் (ஊழியர் சேவையில் இணைந்துகொண்ட திகதியில் தங்கியிருக்கும்)	
- மகப்பேற்று விடுமுறை	- 84 வேலை நாட்கள்	
	- 84 அரை நாட்கள்	
	- சம்பளம் அந்த விடுமுறை 84 நாட்கள்	
- விபத்து விடுமுறை	ஊழியர் விபத்து (பணியில் இருக்கும் பொழுது)	
- பதில் விடுமுறை	ஒரு மாதத்தில் 4 சனிக்கிழமைகள் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் 2 நாட்கள் விடுமுறையையும் மேலதிக நேரக்கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வர்	
- விசேட விடுமுறை	விசேட நிகழ்வுகள் (தேர்தல், ஊரடங்குச் சட்டம்)	
- கடமை விடுமுறை	கம்பனி நோக்கத்திற்கான விசேட நிகழ்வுகள்	
- சம்பளமற்ற விடுமுறை	வெளிநாட்டுக் கல்வி, பயிற்சி, பணிக்காக	
சம்பள உயர்வு	ஊழியரின் பணி, வரவு மற்றும் நடத்தை மதிப்பீடு செய்யப்படும்	ஆம்
கொடுப்பனவுகள்	உணவுக் கொடுப்பனவுகள், பயணக் கொடுப்பனவுகள், முடிவுறுத்துகை கொடுப்பனவுகள், வருகைக்கான ஊக்குவிப்பு, மாற்றல் கொடுப்பனவுகள், வருடாந்த விடுமுறைக் கொடுப்பனவுகள், வாழ்க்கைப் படிக் கொடுப்பனவுகள், தொழில்சார் கொடுப்பனவுகள், வாராந்த விடுமுறை நாள் கொடுப்பனவுகள், உத்தியோகபூர்வ தொலைபேசி நன்மைகள்.	ஆம்
மிகையூதியம்	மருத்துவ விடுமுறை, ஊக்குவிப்பு மிகையூதியம், வருடாந்த மிகையூதியம்.	ஆம்
கடன்கள்		
- இடர் கடன்	10 மாத சம்பளம். 60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.	
- வீட்டுக் கடன்கள்	காணி அல்லது வீட்டை வாங்குவதற்கு அல்லது வீட்டைக் கட்டுவதற்கு. உச்சளவாக 300 மாதங்களில் அல்லது ஊழியரின் சேவையில் மீளப் பெறப்படும், சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்படும்	இல்லை
- வீட்டுத் திருத்தக் கடன்	வீட்டைத் திருத்துவதற்கு வழங்கப்படும், 120 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.	
- வீட்டு வசதிக் கட்டன்	தளபாடங்களை வேண்டுவதற்கு. 60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.	

சம்பன ஆளணிக்கு ஊழியர் நன்மைகள்	விபரம்	நன்னடத்தைக் காலத்தில் நன்மைகள்
- சிக்கன சமூகக் கடன்	03 மாத சம்பளம். 60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.	
- கார் கடன்	நிறைவேற்று அலுவலர்களுக்கு மட்டும். 60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.	
- மோட்டார் சைக்கில் கடன்	60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.	
- முச்சக்கர வண்டிக் கடன்	60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.	
முற்கொடுப்பனவு		
- விழாக்கால முற்கொடுப்பனவு	வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும்.	
- புது வருட முற்கொடுப்பனவு	10 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.	ஆம்
- பாடசாலைப் புத்தகங்களுக்கான முற்கொடுப்பனவு	வட்டி இல்லாதது. 10 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டிய கடன்.	ஆம்
விருது வழங்கல்	ஊழியரின் சேவை அடிப்படையில் தங்கியுள்ளது (சம்பள அதிகரிப்பு)	இல்லை
நலன்புரி சார் நன்மைகள்	- ஒவ்வொரு ஊழியரும் 3 பகல் மற்றும் 2 இரவுகள் குடும்பத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அல்லது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விடுமுறை பங்களாவில் தங்குவதற்கு உரித்துடையவர்கள்.	
	- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விளையாட்டு களரி நிகழ்வுகளிலும் ஜிம் வசதிகளிலும் பங்குபற்றுதல்.	ஆம்
	- வருடாந்த சுற்றுலா	ஆம்
	- இரத்ததான நன்கொடை முகாம்	ஆம்
	- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முனையங்களில் உள்ள கூட்டுறவுக் கடைகள்	ஆம்
மருத்துவ நன்மைகள்	- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முனையங்களில் உள்ள உள்ளக மருத்துவ வைத்தியர் மற்றும் இலவச மருந்து மற்றும் மருத்துவ மீள்கொடுத்துத் தீர்த்தல்.	ஆம்
	- வரையறுக்கப்பட்ட மருத்துவ காப்பீடுகள்	ஆம்
	- விசேட பரிசோதனைகளுக்கான வரையறையற்ற மீள்செலுத்தல்கள் (சீடி ஸ்கான், யுஎஸ் ஸ்கான், எம்ஆர்ஜ, என்டஸ்கோப்பி)	ஆம்
	- ஏனைய பரிசோதனைகளுக்கான வரையறுக்கப்பட்ட மீள்செலுத்தல்கள்	ஆம்
மரண நன்மைகள்	- பணியின் போதான மரணத்திற்கு ஊதியம் வழங்கப்படும்	ஆம்
சிக்கன சமூக நன்மைகள்	- மரண ஊதியம், ஊழியர், ஊழியரின் பெற்றோர் துணை மற்றும் பிள்ளைகள், துணையின் பெற்றோர் உள்ளடங்களாக	ஆம்
	- சிக்கன சமூக பணிக்கொடை நியதிச்சட்ட பணிக்கொடையாக வழங்கப்படும்	இல்லை
ஓய்வூதிய ஏற்பாடுகள்	- நியதிச் சட்ட பணிக்கொடை	இல்லை
ஏனைய வசதிகள்	- விசேட கடமைகளுக்கான சீறுடைக்கான ஏற்பாடுகள்	ஆம்

பயிற்சி மற்றும் அபிவிருத்தி


தொடர்ச்சியான பயிற்சி வாய்ப்புகளை வழங்குவது எங்கள் வெற்றிக்கு முக்கியமான அம்சமாகும். சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊழியர்களின் தொடர்ச்சியான அபிவிருத்தி அவசியம் எனவும், ஊழியர்களை தக்கவைத்துக் கொள்ளவும் நம்பிக்கைக்கும் இது நன்மையளிக்கும் எனவும் கம்பனி கருதுகின்றது. சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி செயற்பாடு அனைத்து ஊழியர்களினதும் பயிற்சித் தேவைகளைக் கண்காணிக்கின்றது. விசேட திறன்கள் மற்றும் புத்தாக்க இயலுமைகளின் தேவைகளின் வளர்ச்சியுடன், நாங்கள் எங்கள் ஊழியர்களின் திறன்களையும் இயலுமையையும் வழமையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக கூர்மைப்படுத்துவதற்கு நாங்கள் ஆதரவளிக்கின்றோம். மேலும், பணியின் போதானா பயிற்சிக்கு மேலதிகமாக வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை நாங்கள் ஊழியர்களுக்கு வழங்குகின்றோம். மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், கம்பனி தொழில்நுட்ப அறிவு, மென் திறன்கள், தலைமைத்துவ திறன்கள், அழுத்த முகாமைத்துவம், நேர்மறைச் சிந்தனை, குழுக் கட்டமைப்பு போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. நாங்கள் ரூபா 31.8 மில்லியனை பயிற்சிகளுக்காக முதலீடு செய்ததுடன், 2,391 பங்குபற்றுனர்களுக்கு 21,832 மணித்தியாளப் பயிற்சி வழங்கப்பட்டது. இவ்வருடம், மேற்கொள்ளப்பட்ட பயிற்சி செயற்பாடுகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித்திட்டம்	பங்குபற்றிவர்களின் எண்ணிக்கை
வாழும் கலை	76
ஊக்கப்படுத்தலின் ஊடாக உளப்பாங்கினை மாற்றுதல்	60
பூஜ்ஜிய அடிப்படையிலான வரவுசெலவுத்திட்டத்திற்கான வழிகாட்டல்	51
ஊழியர் அபிவிருத்தி	64
நிதிப் பிரமாணம்	112
முதலுதவி நிகழ்ச்சித்திட்டம்	73
ஆரோக்கியமாக வாழும் முறை	84
கணக்காய்வு பிரச்சினைகளை எவ்வாறு குறைப்பது	46
மனிதவள அலுவலர் அல்லாதவர்களுக்கான மனிதவள முகாமைத்துவம்	51
சங்கிலியின் இணைப்பாக வருவதற்கான முக்கியத்துவம்	47
கைத்தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	50
உள்ளக கணக்காய்வு ஊழியர்களுக்கான தகவல் முறைமை	45
புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டம்	141
ISO 14001: விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	41
உற்பத்தித்திறன் மேம்படுத்தலுக்கான தலைமைத்துவம்	52
ஊக்குவிப்பு மற்றும் குழுக் கட்டமைப்பு	52
தொழில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய முகாமைத்துவம்	57
நேர்மறைச் சிந்தனை மற்றும் உயிர்ப்பான நடத்தை	400
தகவல் தொழில்நுட்ப பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுகை	51
களஞ்சிய தொழிபாட்டுக்கான உற்பத்தித்திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	40
பொது உறவுகள்	45
சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு	172
உபாயமார்க்க திட்டமிடல்	40
அழுத்த முகாமைத்துவம்	147
நேர முகாமைத்துவம் மற்றும் பண முகாமைத்துவம்	69
விடுமுறை தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்	44
பணியார்களை அடுத்த கட்டத்திற்கு மாற்றுதல்	86
உங்கள் மின்னஞ்சல் உங்களையும் உங்கள் கம்பனியையும் ஊக்குவிக்கும்	25
புதிதாக ஆட்சேர்ப்பு சாரதிகளுக்கான செயல்முறை பயிறசி நிகழ்ச்சித்திட்டம்	25
வெளிவாரி பயிற்சி - கித்துல்கல	55
ஆங்கிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	28
கணணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	62
பாரமேற்றும் நடைமுறையை சீராக்கும் தொழிற்பாட்டுக்கான நிகழ்ச்சித்திட்டம்	04
பெற்றோலியப் பொருட்களின் பகுப்பய்வுக்கான ICP-OESயின் தொழிற்பாட்டைக் கையாளுதல்	02
தரக் கட்டுப்பாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	01
FIDIC ஒப்பந்தத்தின் கீழ் சர்வதேச நிர்மாணிப்பு கருத்திட்ட முகாமைத்துவ ஒப்பந்தங்கள் மீதான பயிற்சிப் பட்டறை	01
இலங்கைக்கான கூட்டிணைந்த முகாமைத்துவம் (LKCM 16) மீதான நிகழ்ச்சித்திட்டம்	03
CPSTL SAP குழு அங்கத்தவர்களுக்கான SAP பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	10
உயர் தலைமைத்துவம் மற்றும் மக்கள் முகாமைத்துவம் மீதான பயிற்சிப்பட்டறை	03
நிறைவேற்று நிகழ்ச்சித்திட்டமிடப்பட்ட தர முகாமைத்துவம் மீதான நிகழ்ச்சித்திட்டம்	01
மக்களையும் குழுக்களையும் முகாமைத்தவம் செய்வதற்கான செயலாற்றுகை மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் - டுபாய்	01
LNG பண்டங்கள் மீதான கற்கை	01






பாலின ரீதியாக சராசரி பயிற்சி மணித்தியாளங்கள்



வகை ரீதியாக சராசரி பயிற்சி மணித்தியாளங்கள்



கித்துல்கலவில் வெளியிடப் பயிற்சி

நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்காக திட்டமிடல், தலைமைத்துவம், நேர முகாமைத்துவம் மற்றும் இயலுமை போன்றி திறன்களை மேம்படுத்துவதற்கு உதவுவதுடன், குழு மனப்பான்மையைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் தண்ணீர் ரப்டிங், உளவியல் பயிற்சிகள், குழுக் கலந்துரையாடல்கள், சாகத இடர்கள் மற்றும் குழு கட்டியெழுப்பணி பணி என்பவற்றை உள்ளடக்கி கித்துல்கலவில் வெளியிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.





மேலும், தொழிலாளர் தரத்திலிருந்து முகாமைத்துவ மட்டம் வரை வெளித்தரப்பினரால் நடாத்தப்பட்ட அவசியமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஊழியர்கள் பங்குபற்றுவதற்கு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் அனுமதியளித்திருந்தது.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் ஊழியர்களின் நிபுணத்துவ மற்றும் தொழில் அபிவிருத்தி தொடர்பாக கவனத்தைக் கொண்டிருப்பதுடன், அவர்கள் விஞ்ஞான முதுமானி, வியாபாரக் கற்கையில் முதுமானி மற்றும் ஏனைய பட்டப்பின்படிப்பு கற்கைகளை மேற்கொள்ளுவதற்கு நிதியியல் உதவிகளை வழங்கி அவர்களை உயர்கல்விக்கு ஊக்குவிக்கின்றது. அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்தவும் அவர்களை நிறுவனத்தில் தக்க வைத்துக்கொள்வதற்காகவும் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் அவர்களின் சந்தாவை மீள்நிரப்பல் செய்கின்றது.

இவ்வருடம், ஊழியர்கள் 8 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் 8 முன் ஆய்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வெளிநாட்டுப் பயணங்களிலும் பங்குபற்றினர்.

தர உத்தரவாதம்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பிரதான ஆய்வுகூடம் கொலொன்னாவையில் அமைந்துள்ளதோடு, இது சந்தைப்படுத்தல் கம்பனிகளுக்கான சுயாதீன ஆய்வுகூடமாக இருக்கின்றதுடன் பண்ட தர உத்தரவாதத்தையும் சான்றிதழ்களையும் சுயாதீனமாக வழங்குகின்றது. ஆய்வுகூடமானது ஒவ்வொரு பெறுகை தொகுதி மற்றும் ஒவ்வாரு பண்ட மாற்றல்கள் மற்றும் அமைப்புக் குறியீடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு மொத்த விநியோக தாங்கியில் உள்ள பண்டங்கள் மீதும் பரிசோதனைகளை மேற்கொள்ளுகின்றது.

2017ம் ஆண்டு கீழ்வரும் பரிசோதனை வசதிகளை உள்ளடக்கி ஆய்வுகூடமானது இற்றைப்படுத்தப்பட்டது.

ASTM D 4815 - 09 பரிசோதனை முறையைப் பயன்படுத்தி நவீன வாயு குரோமடோகிராமின் ஊடாக பெற்றோல் 92, ஒக்டேன் மற்றும் பெற்றோல் 95 என்பவற்றின் ஒட்சியேற்ற அளவின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ASTM D 3606 - 10 பரிசோதனை முறையைப் பயன்படுத்தி நவீன வாயு குரோமடோகிராமின் ஊடாக பெற்றோல் 92, ஒக்டேன் மற்றும் பெற்றோல் 95 என்பவற்றின் பென்ஸீன் அளவின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பரிசோதனை அளவுருவை கொள்வனவு செய்த நவீன கருவியைப் பயன்படுத்தி வினைத்திறனுடனும் துல்லியமாகவும் மேற்கொள்ள முடியும்.

முழுமையான தன்னியக்க பிளாஷ்பொயின்ட் டெஸ்டரைப் பயன்படுத்தி பரிசோதனை ASTM D 93 - 12 / ISO 2719 – 1988 முறைகளின் ஊடாக காஸ் எண்ணெய் (500 ppm Max S, 10 ppm Max. S, Marine Gas Oil), எரிபொருள் எண்ணெய் ((Fuel Oil 800 secs, Low Sulphur Fuel Oil 1500 secs, High Sulphur Fuel Oil 180 cSt, , Low Sulphur Fuel Oil 180 cSt & RMG 380, RMG 180) என்பவற்றின் பிளாஷ்புள்ளிகளின் (PMcc) பகுப்பாய்வு. தற்போது

பிரதான ஆய்வுகூடம் பல்வகை முறை பிளாஷ்பொயின்ட் பகுப்பாய்வுக் கருவியைப் பயன்படுத்தி பிளாஷ்பொயின்ட் பரிசோதனைகளை இலகுவாகவும் வினைத்திறனுடனும் செய்ய முடியும்.

Ball on Cylinder Lubricity Evaluator ஊடாக விமானப் போக்குவரத்து ட்ர்பெயின் எரிபொருளின் மசகுப் பகுப்பாய்வு. (BOCLE) நவீன உபரணத்தைப் பயன்படுத்தி ASTM D 5001 - 10 பரிசோதனை முறை. இந்த உபகரணத்தைப் பயன்படுத்தி விமானப் போக்குவரத்து ட்ர்பெயின் எரிபொருளின் மசகுப் பகுப்பாய்வினை (JET A-1) சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் மேற்கொள்ள முடியும்.

தர உத்தரவாதம், சான்றுபடுத்தல் மற்றும் சோதனை முடிவுகளின் கண்டுபிடிப்பை பாராமரித்தல்.

இலங்கை அங்கீகார சபையிலிருந்து ISO 17025:2005 தர நியமத்தின் ஆய்வுகூட தர முகாமைத்துவ முறைமை மீது அங்கீகாரத்தைப் பெறுவதற்கான செயன்முறையை சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பிரதான ஆய்வுகூடம் ஆரம்பித்துள்ளது. இந்த நோக்கத்திற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் நிலையான சேவையைப் பெற்றுக்கொண்டுள்ளது. ஆலோசனைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், முதலாவது பயிற்சி நிகழ்ச்சியும் முறைமைக்கான இடைவெளிப் பகுப்பாய்வு, பரப்பெல்லைக்கான முன்தயார்ப்படுத்தல், தரக் கையேடுகள், நடைமுறை கையேடுகள், மாதிரிகள் மற்றும் ஏனைய அவசியமான ஆவனங்கள் என்பன தர முறைமையின் கீழ் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

கம்பனி இலங்கையின் மிகப்பெரிய பெற்றோலிய முனையங்களை தொழிற்படுத்துவதுடன், உயர் தீப்பற்றக்கூடிய பண்டங்களை கையாளுகின்றது. அதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் உயர் இடர் வகுதியின் கீழ் வருகின்றன. கையாளுதலில் ஏற்படும் ஒரு சிறிய தவறானது பாரிய தீயினை உருவாக்க முடியும். சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனமானது ஒரு பொருளாதார உணர்வுள்ள நிலையமாக இருப்பதுடன், ஒரு பாரிய தீ நாட்டின் பொருளாதாரத்தை முடக்கிவிட முடியும். அதனால் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் தீ மற்றும் எண்ணெய்க் கசிவுகளிலிருந்தான இடர்களுக்கு உயரளவிலான முக்கியத்துவத்தினை வழங்குகின்றது. கம்பனி அதன் உச்சளவான தொழிற்பாட்டு சூழ்நிலையில் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முறைமையை உறுதிப்படுத்தவதற்கு பாரிய முதலீட்டினை மேற்கொண்டுள்ளதுடன் அனைத்து நலன்விரும்பிகளுக்கும் அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஆரோக்கியத்தை பேணுவதற்காகவும் பவசர் சாரதிகள் மற்றும் உதவியாளர் போன்ற வெளிவாரி ஊழியர்களுக்கும் அதன் ஊழியர்களுக்கும் பயிற்சியினை வழங்கியுள்ளது.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் உள்ளக, முதலுதவிப் பயிற்சி, நெருப்பு டடரில், பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்பாக அர்ப்பணிப்புடன் உள்ளது. நெருப்பு ஹைரன்டை பராமரித்தல் மற்றும் பரிசோதனை செய்தல், தீ ஒலிச்சங்கை தினமும் பரிசோதித்தல், துப்பரவாக்கல், எண்ணெயிடல் மற்றும் அலுவலக உபகரணங்களை பரிசோதித்தல் என்பன நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக்கான உரிய முறையிலான அமுல்படுத்தலை ஆளுகை செய்வதற்கு விரிவான ஆரோக்கிய, பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் கொள்கை அமுலில் உள்ளது. இவ்வருடம் உரிய முறையில் கழிவுகளை அகற்றல் மற்றும் அவசியமான நியமத்தில்கழிவு நீரின் தரத்தைப் பேணுதல் என்பன ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. உலக வெப்பமாதலைத் தடுப்பதற்கு பங்களிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், 2017ம் ஆண்டு இலங்கை காலநிலை நிதியத்திலியிருந்து காபன் புகைத் தாக்கத்தைக் குறைத்தல் உதவி பெறப்படுகின்றது.



சமூக மற்றும் உறவுகள் மூலதனம்



வாடிக்கையாளர் உறவுகள்



சமூக ஈடுபாடு



சமூக நிகழ்வுகள்



விழிப்புணர்வு நிகழ்ச்சி

வாடிக்கையாளர் உறவுகள்

நாங்கள் பொருளாதார செயற்பாடு, இயக்கம் மற்றும் அபிவிருத்திக்கு வசதியளிக்கும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதன் ஊடாக நாடு முழுவதற்கும் சேவை செய்கின்றோம். நாங்கள் எங்கள் முனையங்கள் மற்றும் கிடங்குகளின் ஊடாக நாடு முழுவதற்கும் அவசியமான பெற்றோலியத் தேவைகளை வழங்குகின்றோம். எங்கள் விரிவான அணுகல் நாட்டின் அனைத்து பிரந்தியங்களுக்கும் மிகச்சிறந்த சேவையை வழங்குவதற்கு வழிவகுக்கின்றது.

சமூக ஈடுபாடு

கம்பனி சமூக ஈடுபாடுகள் தொடாபாக உபாயமார்க்க மற்றும் செயற்திறன் மிக்க அணுகுமுறையைப் பின்பற்றுகின்றது. நாங்கள் எங்கள் வழமையான வியாபாரத்தில் சமூகத்துடன் கொண்டிருக்கும் தன்மை, அளவு மற்றும் பங்குடமை என்பனவும் நாடு முழுவதிலும் தொழில்படுவதற்கு அர்த்தமுள்ள தன்மைக்கான சந்தர்ப்பத்தை எங்களுக்கு வழங்குகின்றது.

திறன் அபிவிருத்தி

கம்பனி, கைத்தொழில் பயிற்சி அனுபவம் அவசியமான பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில்சார் மாணவர்களுக்கும் பட்டயக் கணக்காளர்களுக்கு அவசியமான ஒரு வருட பயிற்சியை வழங்குவதற்கு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துடன் இணைந்தது செயற்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இவ்வருடம் 107 மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டதுடன், வெற்றிகரமாக நடாத்தப்படுகின்றது.

ஊழியர் நிகழ்வுகள்

வருடாந்தம், உதவி மற்றும் கூட்டிணைந்த பணிச் சூழலைக் கட்டியெழுப்புவதற்காக பல ஊழியர் சமூக மற்றும் நலன்புரி நிகழ்வுகளை சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் நடாத்துகின்றது. 2017ம் ஆண்டு நடாத்தப்பட்ட அவ்வாறான சில நிகழ்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

இரத்ததானப் பிரச்சாரம்

கம்பனியின் செயற்பாடான ஊழியர்களின் பங்களிப்புடன் தொடர்ச்சியான 37 வருடமாக 2017ம் ஆண்டும் வருடாந்த இரத்ததான பிரச்சார நிகழ்வு வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.





வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நன்கொடை

இவ்வருடம் தென் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான காசு நன்கொடைகள் மற்றும் உலர் உணவுகள் வழங்கப்பட்டது.





சங்கீத நிகழ்ச்சி

ஊழியர்களின் சங்கீதத் திறனை மேம்படுத்துவதற்கும் ஏனைய ஊழியர்களுக்கு களியாட்டத்தையும் வழங்கும் நோக்கத்துடன் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் கலைச் சங்கம் “வெத பிம்மக கீ சித்ம - தருவக் நொவன தருவக்” எனும் சங்கீத போட்டி நிகழ்ச்சியை நடாத்தியது.





சிரமதான நிகழ்ச்சி

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அனைத்து கிடங்குகளில் பணிபுரியும் ஊழியர்கள் உள்ளடங்களாக அலுவலக ஊழியர்களினால் சிரமதான நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.





தங்க நாணயங்கள் வழங்கும் வைபவம்

இந்தக் கம்பனியில் 25 வருட சேவையை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த ஊழியர்களுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டத்தாபனத்தின் உதவியுடன் தங்க நாணயங்களை வழங்கும் வைபவம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.





SAP பயிற்சி

இந்தியாவின் பெற்றோலியம் முகாமைத்துவத்திற்கான இந்தியன் ஒயில் நிறுவனத்தில் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியைத் சேர்ந்த ஊழியர்களுக்கு SAP (ERP) முறைமை தொடர்பாக பெறுமதிவாய்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது.



நேர்மறைச் சிந்தனைகள், செயற்திறன் மிக்க நடத்தை மற்றும் அணுகுமுறை தொடர்பான பயிற்சிகள்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அனைத்து கிடங்குகளில் பணிபுரியும் ஊழியர்கள் உள்ளடங்களாக அனைத்து ஊழியர்களுக்கும் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தலைவர் திரு தம்மிக்க ரனதுங்கவினால் நேர்மறைச் சிந்தனைகள், செயற்திறன் மிக்க நடத்தை மற்றும் அணுகுமுறை தொடர்பான பயிற்சிகள் நடாத்தப்பட்டது. இது ஊழியர்களின் தொழில் செயற்பாடுகளையும் தனிப்பட்ட வாழ்க்கையையும் மேம்படுத்துவதற்கு பங்களிப்பினை வழங்கியது.





பௌத்த நிகழ்வுகள்

நிறுவனத்தின் பௌத்த சங்கம் போயா தினங்களில் பௌத்த நிகழ்வுகளை அலுவலக வளாகத்தில் ஒழுங்கு செய்ததுடன், அனைத்து ஊழியர்களின் பங்குபற்றலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.





சித்திரக் கண்காட்சி

ஊழியர்களினதும் அவர்களினது பிள்ளைகளினதும் பங்களிப்புடன் சித்திரக் கண்காட்சி நடாத்தப்பட்டதுடன், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.





சமூக நிகழ்வுகள்

சமூகப் பொறுப்பானது, சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம், மக்களினது வாழ்க்கைத் தரத்தையும் சுற்றுப்புற சூழலினையும் மேம்படுத்தவதற்கு கம்பனி பணிபுரிவதனால், நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைளுடன் ஒன்றிணைந்த ஒரு பாகமாக நோக்கப்படுகின்றது. நாங்கள் எங்கள் வளர்ச்சி நிதி சார்பாக மட்டுமல்லாது சமூக ரீதியாகவும் வளர்ச்சியடைவது தொடர்பாக நாங்கள் மிகுந்த அக்கறையுடன் உள்ளோம். அதனால் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம், அதன் சட்டரீதியான பொறுப்புகளுக்கு அப்பால் தொடர்ந்து இவ்வருடமும் நலன்புரி, கலாச்சார நிகழ்வுகள் மற்றும் நன்கொடை நிகழ்வுகளின் ஊடாக சமூகத்திற்கு தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

அபெக்ஷா வைத்தியசாலையின் இரு வார்ட்டுக்களைப் புதுப்பித்தல்

மஹரகம அபெக்ஷா வைத்தியாசாலையில் உள்ள ஒரு கட்டடம் பயன்படுத்தும் நிலையில் இல்லை என்பதை சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பௌத்த சங்கம் அடையாளம் கண்டுகொண்டதுடன், அதனைப் புதுப்பித்து பிரித் வைபவத்தின் பின்னர் முகாமைத்துவத்திகு கையளித்தது. தற்போது புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தில் இரு வார்ட்டுக்கள் செயற்படுகின்றன.





சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி செயலமர்வு

களனி பல்கலைக்கழக பழைய மாணவர்களின் கொழும்பு சங்கத்தின் உதவியுடன் கட்டுபத்தகமுவ ராஜசிங்க மகா வித்தியாலயத்தின் சாதாரண தர மாணவர்களுக்கு கணக்கு பாடத்திற்கான கல்வி செயலமர்வுக்கு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் நிதி உதவி வழங்கப்பட்டது.





வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவு

தென்மாகணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு அவசியமான உலர் உணவுகள் மற்றும் வீட்டுத்தேவைப் பொருட்கள் என்பனவற்றை சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்ட் நிறுவனம் கையளித்தது.





வறிய குடும்பத்திற்கு புதிய வீடொன்றைக் கட்டிக்கொடுத்தல்

விபத்தினால் தந்தையை இழந்த 3 பிள்ளைகளுள்ள குடும்பத்திற்கு புதிய வீடொன்றினைக் கட்டிக்கொடுப்பதற்கான உதவி நிதி நலன்புரிச் சங்கத்தினால் வழங்கப்பட்டது.





தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் சிறுவர் பிரிவுக்கு உலர் உணவு வழங்கல்

சமூக பொறுப்பின் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அவசரமாக தேவைப்படும் மருந்துகளை வழங்குவதன் ஊடாக அவர்களின் முகங்களில் புன்சிரிப்பை வரவழைக்கும் வகையில் அபெக்ஷா வைத்தியசாலையின் சிறுவர் பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது.





மீதொட்டுமுல்ல பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி

மீதொட்டுமுல்ல பகுதியில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச உணவு வழங்குவதற்கு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் தனது உதவிக்கரங்களை நீட்டியது.





விழிப்புணர்வு நிகழ்ச்சி

வீதியில் வாகன ஓட்டல் மற்றும் ட்ராங்கர்களை ஓட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் 2017ம் ஆண்டு பாதுகாப்பான வாகன ஓட்டல் மற்றும் பாதை வீதி ஒழுங்குகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை வீதியில் ட்ராங்கர்களை ஓட்டுபவர்களுக்கு வழங்கியது.





இயற்கை மூலதனம்



சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான பெற்றோலியப் பொருட்களைக் கையாளுதல்




உரியநேரத்தில் அடையாளம் காணுதலும் பொருத்தமான முகாமைத்துவமும்



பொறுப்பான கழிவு அகற்றல்



எண்ணெய்க் கசிவுகளை குறைப்பதற்கான பயிற்சி



இலங்கையின் மூன்றாம் நிலை பெற்றோலிய உற்பத்திகளின் கையாளுகையினை நாம் முகாமை செய்வதற்கான அதி நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பெற்றோலிய மொத்தக் களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனியாவோம். நாட்டின் சில்லறை நுகர்வோரினதும் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு கைத்தொழில்துறைகளிலும் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையான மொத்த நுகர்வோர்களினதும் சக்திக்கான கேள்வியை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை இந்திய ஒயில் கம்பனிக்கும் உரித்தான நாடு முழுவதிலுமுள்ள ஓராயிரம் சில்லறை நிலையங்களுக்கு சேவையளிக்கின்றோம்.

நாட்டினுள் தொழிற்படும் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் எல்லைக்குள் மற்றும் எல்லைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் எண்ணெய் நடவடிக்கைகளில் சுற்றாடல் தொடர்புபடுகின்றன. இந்த நடவடிக்கைகள் நேரடியாக மற்றும் மறைமுகமாக உயிர் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். உரிய நேரத்தில் உயிர்ச்சூழலில் ஏற்படும் உத்தேச தாக்கங்கள் மற்றும் தொழிற்பாட்டு தங்கியிருத்தல்களை அடையாளம் காணுதல் ஊடாக உத்தேச இடர்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.

எங்கள் பெறுமதி உருவாக்கல் நடைமுறையில், வலுச்சக்தி தொழிற்பாட்டாளராக, பிரதான உள்ளீடாக இயற்கை மூலதனம் உள்ளது. முழுமையான பெறுமதிச் சங்கிலியில் உரிய செயற்பாடுகளைச் சேர்த்துக்கொள்வதன் ஊடாக சூழல் தாக்கங்களை மதிப்பீடு செய்வதுடன் குறைத்துக்கொள்கின்றோம். இந்த வருடம் எந்வொரு சுற்றாடல் சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளை மீறியதாக கம்பனி மீது எவ்வித தண்டங்களோ அல்லது குற்றத்தொகையோ விதிக்கப்படவில்லை.

வலுச் சக்தி

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வலுச்சக்தி தேவைகள் டீசல், பெற்றோலிய எண்ணெய்கள் மற்றும் தேசிய மின்சாரக் கட்டத்திலிருந்து பெறப்படும் மின்சாரம் மூலம் பூர்த்திசெய்யப்படுகின்றது. வலுச்சக்தி, கரைகடந்த அலகு மற்றும் நாடளாவிய கிடங்குகளுக்கு அதிகமாக வலுச்சக்தியை வழங்கும் பிரதானமாக இரு முனையங்கள் (கொலொன்னாவை மற்றும் முத்துராஜவெல) பயன்படுத்தப்படுகின்றது. இவ்வருடத்தில் கம்பனியினால் பயன்படுத்தப்பட்ட வலுச்சக்தி நுகர்வு மூலம் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வலுச்சக்தி மூலம்	அளவீட்டு அலகு	2017 நுகர்வு	2016 நுகர்வு
கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரம்	Kwh	2,904,300	2,914,112
டீசல்	KL	4,897	4,457

தண்ணீர்

எங்கள் கம்பனியின் தொழிற்பாடுகளுக்கு நீர் மூலம் பயன்படுத்தப்படுவதில்லை மற்றும் எங்கள் ஊழியர்களின் நுகர்வுக்கும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு மட்டுமே நீரானது பயன்படுத்தப்படுகின்றது. எங்கள் நீர்த் தேவையானது பிரதானமாக நகரசபை நீர்க் குழாய்களினால் பூர்த்திசெய்யப்படுகின்றது. கம்பனியின் நீர் நுகர்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மூலம்	அளவீட்டு அலகு	2017 நுகர்வு	2016 நுகர்வு
நகரசபையினால் விநியோகிக்கப்பட்ட தண்ணீர்	KL	275,720	268 ,120

பண்டங்களின் போக்குவரத்து

பெற்றோலியப் பண்டங்களின் போக்குவரத்தின் போது ஏற்படும் எண்ணெய்க் கசிவுகள்/ஒழுக்குகள்/விபத்துகள் என்பவற்றினால் ஏற்படும் சூழல் மாசடைதலானது நிலம் மற்றும் நீர் இரண்டையும் பாதிக்கின்றது. திட்டமிடப்படாத நிகழ்வுகளைக் கையாளுவதற்கு பயிற்றப்பட்ட போக்குவரத்து குழாமின் ஊடாக பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. நாங்கள் எண்ணெய்க் கசிவுகள்/ஒழுக்குகளின் போது நியமமுறையில் மற்றும் உடனடியாக செயற்படும் முறை தொடர்பாக போக்குவரத்து மேற்கொள்ளும் குழாத்திற்கு தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றோம்.

எங்கள் முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது,

1. பௌடி/ஜெட்டிகளில் ஏதேனும் எண்ணெய் கசிவுகள் ஏற்படுவதிலிருந்து தடுப்பதற்கு தாங்கிகளில் இருந்து கப்பல் போக்குவரத்துக்கான சாதனத்தைத் துண்டித்தல். தங்கிகளுக்கு பெற்றுக்கொள்ளல் மற்றும் தங்கிகளில் இருந்து அகற்றல் இரு நடவடிக்கைகளின் போதும் குழாய்களில் சேதங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தவதற்கு அழுத்தப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

2. ஏதேனும் எண்ணெய் கசிவுகள் ஏற்பட்டால், எண்ணைய்களை உறிஞ்சி எடுப்பதற்கான வாகனங்கள் தயாராக உள்ளதனால், இது சிறிய எண்ணெய் கசிவுகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

3. ஏதேனும் பொது மக்கள் பொறுப்புகள், பண்டப் பொறுப்புகள் மற்றும் மாசுறல் பொறுப்புகள் என்பவற்றுக்கு மூன்றாம் தரப்பு காப்புறுதி.



ஆளுகை மற்றும் இணக்கப்பாடு

கூட்டிணைந்த ஆளுகை

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனமானது சிறந்த ஆளுகைக்கு அர்ப்பணித்துள்ளது. இது சபையினதும் முகாமைத்துவத்தினதும் பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைதன்மை, அனைத்து பரிமாற்றங்களிலும் நியாயம் என்பவற்றை வலுப்படுத்துவதுடன், நிறுவனத்தின் மீதான பொது மக்கள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கு உதவுகின்றது. சிறந்த ஆளுகையின் நோக்கமானது, கம்பனியின் நீண்டகால வெற்றியினை தரக்கூடிய செயல்திறன் மிக்க தொழில்முயற்சி சார்ந்த மற்றும் முன்மாதிரியுடைய முகாமைத்துவத்தினை வசதிப்படுத்துவதாகும்.

- எவ்வாறு தொலைநோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் உபாயமார்க்கங்கள் வடிவமைக்கப்பட்டு தொடர்புகொள்ளப்படுகின்றது.
- எவ்வாறு பெறுமதிகள் இணங்கப்படுகின்றன
- எவ்வாறு இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது
- எவ்வாறு வெளிப்படைத்தன்மை ஊக்குவிக்கப்படுகின்றது
- எவ்வாறு நிலையான முறையில் தொழிற்பாடுகள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது
- எவ்வாறு எதிர்காலத் தலைவர்கள் ஊக்குவிக்கப்பட்டு மேம்படுத்துகின்றார்கள்
- எவ்வாறு கூட்டிணைந்த கலாச்சாரம் பங்குதாரர்களின் பெறுமதியை மேம்படுத்தவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளின் பிரதான வசதிப்படுத்துனராக நிறுவனமானது, நாட்டிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளினால் உருவாக்கப்பட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கோவைகள் மற்றும் கம்பனியினால் உருவாக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்கும் வகையில் கூட்டுணைந்த ஆளுகைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றது என்பதை நிறுவனமானது உறுதிப்படுத்துகின்றது.

கூட்டிணைந்த ஆளுகைச் சட்டகம்.


சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் சட்டகத்தின் பிரதான மூன்று தூண்களாக பின்வருவனற்றைக் குறிப்பிட முடியும்.

1. இணக்கம்
2. ஆளுகைக் கட்டமைப்பு
3. உத்தரவாதம் மற்றும் கட்டுப்பாடு

இணக்கம்

உள்ளக ஆளுகை கட்டமைப்பு

உத்தரவாதம் மற்றும் கட்டுப்பாடு



வெளிவாரித் தேவைப்பாடுகள்

- 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டம்
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான கோவை
- 2003ம் ஆண்டு நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டல்கள்
- 2006ம் ஆண்டு 10ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

உள்ளகத் தேவைப்பாடுகள்

- சபையின் அமைப்பு விதிகள்
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள்
- கம்பனி ஒழுங்குவிதிகள்
- வியாபாரத்தை நடாத்தவதற்கான ஒழுக்கநெறி
- இடர் முகாமைத்துவக் கொள்கை

01. இணக்கம்

கம்பனியின் கூட்டிணைந்த ஆளுகைக் நடைமுறைகள் கீழ்வரும் சட்டம், கோவைகள் மற்றும் தன்னார்வ பழக்கங்களின் சட்டகத்தைப் பின்னபற்றுவதற்கான தேவைப்பாட்டுடன் இணங்குகின்றன.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான கோவை
- 2003ம் ஆண்டு நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டல்கள்
- 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டம்
- 2006ம் ஆண்டு 10ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்
- சபையின் அமைப்பு விதிகள்
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள்
- கம்பனி ஒழுங்குவிதிகள்
- வியாபாரத்தை நடாத்துவதற்கான ஒழுக்கநெறி
- இடர் முகாமைத்துவக் கொள்கை

02. ஆளுகை கட்டமைப்பு

• சபைப் பணிப்பாளாகள்

கம்பனியின் அனைத்து செயற்பாடுகளிலும் கூட்டிணைந்த ஆளுகையின் உயர் நியமத்தைப் பராமரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. கூட்டிணைந்த ஆளுகையின் நோக்கம், நீண்ட கால பங்குதாரர் பெறுதியை வினைத்திறனானதும் முன்மாதிரியானதுமான முகாமைத்துவத்தின் ஊடாக உருவாக்குதல் ஆகும். சபையின் பிரதான பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- நிறுவனத்தின் நீண்ட கால வெற்றியை ஊக்குவிக்கும் நோக்குடன் அவசியமான உபாயமார்க்கங்களை உருவாக்குவதற்கான வழிகாட்டலையும் பணிப்புரையையும் வழங்குதல்.
- கம்பனியின் செயலாற்றுகை நோக்கம் மற்றும் கூட்டிணைந்த உபாயமார்க்கத்திற்கு உபாயமார்க்க வழிகாட்டலை வழங்குவதுடன் மதிப்பீடு செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- வருடாந்த திட்டங்களையும் நீண்ட கால வியாபாரத் திட்டங்களையும் மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- ஆளுகை மற்றும் இணக்க முறைமையை கண்காணித்தல்.
- கம்பனியினால் மேற்கொள்ளப்படும் நிதியியல் மற்றும் ஏனைய அறிக்கையிடல் நடைமுறைகளுக்கு அனுமதியளித்தல் மற்றும் கண்காணித்தல்.
- பிரதான கைகொள்ளல்கள், அகற்றல்கள் மற்றம் மூலதன செலவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- சபையிலிருந்து நிறைவேற்றுதர மட்டம் வரை வழங்கப்பட்ட சாட்டுதல்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதை தீர்மானித்தல்.
- உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறை முறைமைகளைக் கண்காணித்தல்.

	பணிப்பாளரின் பெயர்	பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி	பணிப்பாளர் சபையில் இருந்து இராஜினாமா செய்த திகதி	பதவி
1	திரு.டி.சி.செஹான் செனவிரத்ன	14 ஒக்டோபர் 2015	23 மே 2017	தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் (நிறைவேற்றுத் தரமுள்ள பணிப்பாளர்)
2	திரு.டீ.ஜி.ஜயசிங்க	14 ஒக்டோபர் 2015	06 மார்ச் 2017	நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
3	திரு.ஈஷான் பெரேரா	14 ஒக்டோபர் 2015	23 மே 2017	நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
4	திரு.சியாம் போரா	14 ஒக்டோபர் 2015		நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
5	டாக்டர்.லலித் லியனகே	14 ஒக்டோபர் 2015	23 மே 2017	நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
6	திரு நதுன் பெர்னாந்து	07 மார்ச் 2017	23 மே 2017	நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
7	திருமதி.கே.டி.ஆர்.ஒல்கா	14 ஒக்டோபர் 2015		நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
8	திரு.துமிந்த ராஜபக்ஷ	14 ஒக்டோபர் 2015	23 மே 2017	நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
9	திரு.அர்ஜுன் ஜெயின்	14 ஒக்டோபர் 2015		நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
10	திரு.ரந்தீர் சிங்	01 ஜூன் 2016		நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
11	திரு.தம்மிக்க ரனதுங்க	01 ஜூன் 2017		தலைவர்
12	திரு.சஞ்சீவ விஜேரத்ன	01 ஜூன் 2017		முகாமைத்துவப் பணிப்பாளர் (நிறைவேற்றுத் தரமுள்ள பணிப்பாளர்)
13	திரு. நிமல் ஜயசுந்தர	01 ஜூன் 2017		நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்
14	திரு.யு.என.குணவர்தன	01 ஜூன் 2017		நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்

NED நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர் **ED** நிறைவேற்றுத் தர பணிப்பாளர்

ஒவ்வொரு பணிப்பாளரினதும் சுயவிபரக் குறிப்புகள் 31 டிசம்பர் 2017ம் திகதியில் உள்ளவாறு வருடாந்த அறிக்கையின் பக்கம் 14 இருந்து பக்கம் 17 வரை அவர்களின் அனுபவத்தின் பெறுமதி மற்றும் கம்பனிக்கு உபாயமார்க்கம், செயலாற்றுகை மற்றும் வளங்கள் மற்றும் வியாபார நடைமுறைகளை வழங்குவதற்கான சுயாதீன நியாயத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

- **சபையின் உள்ளடக்கம் மற்றும் மீதி**

  சபையின் அமைப்பு விதிகளின் ஊடாக வருடாந்த பொதுக் கூட்டத்தின் ஊடாக பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்படுகின்றனர். பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கும் பொழுது சபை ஏனைய அவசியமான காரணிகளுடன் அனுபவம், வியாபாரத்தையும் நிதியியல் பிரச்சினையையும் விளங்கிக்கொள்ளல், தீர்மானங்களை எடுப்பதற்கான அனுபவம், பல்திறன், தலைமைத்துவம் மற்றும் வியாபாரத்தையும் கைத்தொழிற்துறையையும் பாதிக்கும் அடைவுகள் மற்றும் அனுபவங்கள் என்பனவற்றையும் ஏனைய விடயங்களுடன் கவனத்தில் கொள்ளுகின்றது.

- **பணிப்பாளர்களின் நியமனம்**

  சபையின் அமைப்பு விதிகளின் ஊடாக வருடாந்த பொதுக் கூட்டத்தின் ஊடாக பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்படுகின்றனர். பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கும் பொழுது சபை ஏனைய அவசியமான காரணிகளுடன் அனுபவம், வியாபாரத்தையும் நிதியியல் பிரச்சினையையும் விளங்கிக்கொள்ளல், தீர்மானங்களை எடுப்பதற்கான அனுபவம், பல்திறன், தலைமைத்துவம் மற்றும் வியாபாரத்தையும் கைத்தொழிற்துறையையும் பாதிக்கும் அடைவுகள் மற்றும் அனுபவங்கள் என்பனவும் ஏனைய விடயங்களும் கவனத்தில் கொள்ளுகின்றது.

- **பொறுப்புகளின் பங்கீடு**

  01 ஜூன் 2017 இல் இருந்து தலைவரினதும் முகாமைத்துவப் பணிப்பாளரினதும் வகிபாகங்கள், சபையின் செயற்பாட்டுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் அதிகாரம் மற்றும் வியாபாரத்தை கொண்டு நடாத்தவதற்கான அதிகாரம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவர்களுக்கிடையிலான பொறுப்புகளுக்கிடையில் தெளிவான வேறுபாடுகளுடன் வேறாக காணப்படுகின்றது, திரு தம்மிக்க ரனதுங்க, தலைவராக, சபையின் செயற்பாடுகளை நடாத்துவதற்கும் வினைத்திறனான நிறுவனத்திற்கும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களுக்கும் நிறைவேற்றுத் தரமுள்ள பணிப்பாளருக்கும் இடையில் ஒருங்கிணைந்த வினைத்திறனான உறவுமுறையை உறுதிப்படுத்தவதற்கான தலைமைத்துவத்தை வழங்குகின்றார்.

  முகாமைத்துவப் பணிப்பாளராக, திரு சஞ்சீவ விஜேரத்ன சபையினால் காலத்திற்கு காலம் அனுமதி வழங்கப்படும் உபாயமார்க்க பணிப்புரை, கொள்கை உருவாக்கல் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவாக நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்கின்றார்.

  சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொழிற்பாடுகள் கொலொன்னாவை நிறுவல் தொழிற்பாடுகள், முத்துராஜவெல முனையத் தொழிற்பாடுகள், கொழும்பு துறைமுக எண்ணெய் வசதிக் காரியாலயம் மற்றும் நாடு முழுவதிலும் உள்ள லங்கா மொத்தக் கிடங்குகளின் தொழிற்பாடு என உப வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முத்துராஜவெல முனைத்தின் தொழிற்பாடுகள் முனைய முகாமையாளர் (முத்துராஜவெல), தொழிற்பாட்டு முகாமையாளர் (கரைகடந்த தொழிற்பாடுகள்) கொழும்பு துறைமுக எண்ணெய் வசதிக் காரியாலயம்,´ நாடு முழுவதிலும் உள்ள லங்கா மொத்தக் கிடங்குகளின் தொழிற்பாடு பிரதிப் பொது முகாமையாளரின் (தொழிற்பாடுகள்) மேற்பார்வையின் கீழ் கிடங்கு அத்தியட்சர்களினால் கையாளப்படுகின்றது.

- **சபைக் கூட்டங்கள் மற்றும் வரவுகள்**

  வழமையான அடிப்படையில் மாதாந்தக் கூட்டங்கள் நடைபெறுவதுடன், அவசியமாயின் விசேட கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. அழைப்பின் பேரில் சிரேஸ்ட முகாமையாளர்கள் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர்.

  சபைக் கூட்டங்களானது வழமையான நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் நடாத்தப்படுவதுடன். கூட்டத்திற்கு முன்னர் பணிப்பாளர்கள் விரிவான முறையில் உரிய பின்புலத் தகவல்களை வழங்குகின்றனர். 2017ம் ஆண்டு 12 சபைக் கூட்டங்களும், ஒரு விசேட கூட்டமும் நடைபெற்றது.

கீழ்வரும் அட்டவணையில் பணிப்பாளர்களின் கூட்டத்திற்கான வருகை காட்டப்பட்டுள்ளது.

		வருகை	
	பணிப்பாளரின் பெயர்	வழமையான கூட்டங்கள்	விசேட கூட்டம்
1	திரு.டி.சி.செஹான் சேனவிரத்ன	04/04	
2	திரு.டீ.ஜி.ஜயசிங்க	01/02	
3	திரு.ஈஷான் பெரேரா	04/04	
4	திரு.சியாம் போரா	04/04	
5	டாக்டர்.லலித் லியனகே	04/04	
6	திரு நதுன் பெர்னாந்து	01/01	
7	திருமதி.கே.டி.ஆர்.ஒல்கா	11/12	01/01
8	திரு.துமிந்த ராஜபக்ஷ	12/12	01/01
9	திரு.அர்ஜூன் ஜெயின்	12/12	01/01
10	திரு.ரந்தீர் சிங்	08/12	
11	திரு.தம்மிக்க ரனதுங்க	08/08	01/01
12	திரு.சஞ்சீவ விஜேரத்ன	08/08	01/01
13	திரு. நிமல் ஜயசுந்தர	06/08	
14	திரு.யு.என.குணவர்தன	08/08	01/01

* திரு.டீ.ஜி.ஜயசிங்க 06 மார்ச் 2017ம் திகதியில் இருந்து பணிப்பாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ததுடன், திரு நதுன் பெர்னாந்து 07 மார்ச் 2017ம் திகதியில் இருந்து பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

- **அதிகார பகிர்ந்தளிப்பு மற்றும் குழுக்கள்**

ஏனைய விடயங்களை சபை தன்னுடன் வைத்துக்கொண்டு, குழுக்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் சபையானது அதிகாரங்களை பகிர்ந்தளிப்பு செய்துள்ளது.

சில குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகளுடன் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட கீழ்வரும் குழுக்களினால், சபைக்கு உறுதுணை வழங்கப்படுகின்றது.

அ) கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இக்குழு நேரடியாக சபைக்கு அறிக்கையிடும். கம்பனியின் பணிப்பாளர் சபையினால் உருவாக்கப்பட்டுள்ள முழுமையான ஆளுகை செயன்முறையினுள் கணக்காய்வுக் குழுவின் பணிகள் அமைந்துள்ளதுடன், சபை வினைத்திறனுடன் தனது பொறுப்புக்களையாற்றுவதற்கு குழு உதவிபுரிகின்றது.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத் தரமில்லாத இரு அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படும் பணிகள் வருடாந்த அறிக்கையின் 64 இருந்து 66 பக்கங்கள் வரை குறிப்பிட்ப்பட்டுள்ளது.

ஆ. கையிருப்பு மீளாய்வுக் குழு

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஊழியர்களினதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியின் பிரதிநிதிகளினதும் பங்குபற்றலுடன் வாராந்தம் கையிருப்பு மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படும். முன்திட்டமிட்டவாறு அடுத்த மூன்று மாத காலத்திற்கான தேவைப்பாடுகளுக்கு அமைவாக கையிருப்பு நிலைமை மீளாய்வு செய்யப்படும். நாட்டில் காணப்படும் தேவையையும் சுத்தப்படுத்தல் தயாரிப்பு இயலுமை மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதி என்பவற்றின் எதிர்வுகூறலை கருத்தில் கொண்டபின்னர், இறக்குமதி செய்ய வேண்டிய அளவு அடையாளம் காணப்படும். நெருக்கமான கண்காணிப்பு, நாட்டினுள் தடையின்றிய விநியோகத்தினை சாத்தியமாக்குகின்றது.

இ. தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல் குழு

நிறுவனத்தின் உபாயமாக்க இலக்குகளுக்கு அமைவாக பிரதான தகவல் தொழில்நுட்ப கருத்திட்டங்களை மீளாய்வு செய்தல். கண்காணித்தல் மற்றும் முன்னிலைப்படுத்தலின் நிர்வாக அமைப்பாக விளங்குகின்றது. இந்தக் குழு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளதுடன், சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுவான தகவல் தொழில்நுட்ப கேந்திரத்தின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்கு நேர்மறையாக பங்களிப்பு செய்வதுடன் அனைத்து நலன்விரும்பிகளினதும் நன்மைக்காக பிரதான தீர்மானமெடுப்பவராக இருக்கின்றது.

ஈ. திணைக்களம் சார் பெறுகைக் குழு

பொருட்கள், பண்டங்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக தேசிய பெறுகை முகவராண்மை வழிகாட்டல் தொகுதியொன்றினை வெளியிட்டுள்ளது. வெளிப்படைத்தன்மை, தாமதங்களைக் குறைத்தல் மற்றும் நிதியியல் ரீதியாக மிகவும் அனுகூலமானவொன்றைக் பெற்றுக்கொள்ளுதல், தரமிக்கதான சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல், கம்பனிக்கான வழங்கல்கள் போன்றவற்றினை உறுதி செய்வதற்கு தேசிய பெறுகை முகவராண்மையினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் திணைக்களம் சார் பெறுகைக் குழு என்பன தொழிற்படுகின்றன. இக்குழுவிற்கு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமை வகிப்பதுடன் பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்) மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி ஆகியோரை குழு உள்ளடக்கியுள்ளது.

- **தகவல்களை அணுகுதல்**

சபையானது தீர்மானங்களை எடுப்பதற்கு, ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்னரும், நிகழ்ச்சிநிரல், குறிப்புகள், சபைப் பத்திரங்கள், சுற்றறிக்கைகள், நிதியியல் முழுமையான தகவல்கள் சபைக்கு வழங்கப்படுகின்றது. எந்தவொரு மேலதிக தகவல்களையும் எந்தவொரு பணிப்பாளரும் பெற்றுக்கொள்ள முடியும். பணிப்பாளர்கள் வெளிவாரி பணிப்பாளர்களின் தொழில்சார் ஆலோசனைகளையும் தகவல்களையும் அவர்களுடைய பொறுப்புகளைப் பூர்த்திசெய்வதற்காக பெற்றுக்கொள்ள முடியும்.

03. உத்தரவாதம் மற்றும் கட்டுப்பாடு

- **நிதியியல் வெளிப்படுத்தல்கள்**

நிதியியல் கூற்றுக்களை உண்மையாகவும் நியாயமாகவும் எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். நிதியியில் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இரண்டினதும் இணைந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்து வெளியிடுவதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் முக்கிய தீர்மான கருமங்களில் பொருத்தமான தன்மை மற்றும் மாற்றங்கள் நியமங்களுடனான இணங்குவித்தல் என்ற அடிப்படையில் முகாமைத்துவத்தினதும் வெளிவாரி கணக்காளர்களுடனும் கலந்துரையாடப்பட்டது.

- **வெளிப்படைத்தன்மை மற்றும் இணக்கம்**

பணிப்பாளர் சபையானது அதன் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களின் போதும் வெளிப்படைத்தன்மையை பாராமரிப்பதற்கும் மற்றும் ஒழுக்கநெறி நியமங்கள், தொழில் மற்றும் மனிதவள உரிமைகள் மற்றும் கம்பனிக் கொள்கைகள் என்பவற்றை பாதுகாக்கும் அதேவேளையில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கடுமையாக இணங்குவதற்கு பொறுப்பாக உள்ளது.

- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 1961ம் ஆண்ட 28ம் இலக்கச் சட்டம் மற்றும் 1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணங்கும் வகையில் நிறுவனத்தின் வெளிவாரிக் கணக்காய்வு கணக்காய்வாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் நிதிக்கூற்றுகள் வருடாந்தம் வெளியிடப்படுவதுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.
- நிறுவனத்தின் பொறுப்புணர்வை உறுதிப்படுத்துவதற்காக புதிய இலங்கை கணக்காய்வு நியமங்கள் மற்றும் ஏனைய உரிய ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படுகின்றன.

- **உள்ளகக் கட்டுப்பாடுகள்**

தொழிற்பாடுகளின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை அடைந்து கொள்ளுதல் நிதியறிக்கையின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் என்பன தொடர்பில் நியாயமான உத்தரவாதம் ஒன்றினை வழங்குவதற்கு கம்பனியானது ஆற்றல் மிக்கதும் செயற்திறன் மிக்கதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை உறுதி செய்கின்றது. இது தொழிற்பாட்டு மற்றும் இலாபத்தன்மை இலக்குகளை நிறைவுசெய்கின்றதுடன் நிதியியல் கணக்கீட்டுத் தகவல்களின் ஒருமைப்பாட்டினை உறுதி செய்கின்றதுடன் நிறுவனம் முழுவதிலும் முகாமைத்துவ கொள்கைகளை பரிமாற்றம் செய்கின்றது. ஏதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது நியாயமான உத்தரவாரம் ஒன்றினை மாத்திரம் உறுதி செய்யக்கூடியதுடன் நியாயமான காலப்பகுதி ஒன்றினுள் தவறுகள் அல்லது ஒழுங்கீனங்கள் முன்வைக்கப்படும் என்ற மிகச் சரியாக உத்தரவாதமளிக்கின்றது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்ட் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு முறைமைத் தொகுதியினுள் நிறுவனம் வினைத்திறன் மிக்கவாறு தொழிற்படுவதனை உறுதிசெய்கின்றது.

- **உள்ளகக் கணக்காய்வு**

சுயாதீன முகாமைத்துவத்துடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளக கணக்காய்வின் குறிக்கோளாக நிறுவனத்தின் செயற்பாடுகளின் கண்காணிப்பு கட்டுப்பாட்டினை மேற்கொள்ளல் அமைந்துள்ளது. நிறுவனத்தின் நடைமுறைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளினால் எடுத்துரைக்கப்பட்டதிற்கு இணங்க நிறுவனத்தினுள் கட்டுப்பாட்டு முறையொன்று பேணப்படும் பொருட்டு மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல் குறிக்கோளுடன் தொழிற்படுகின்றது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவின் நோக்கெல்லை பின்வறுமாறு:

- தற்போது காணப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்தல்.
- முறைமை பிரயோக பொதி மற்றும் முறைமை பதிவேடுகளில் உள்ள அனைத்துக் கணக்கீட்டுத் தகவல்களும் செம்மையாகப் பேணப்படுகின்றது என்றும் தொடர்புடைய புள்ளி விபரங்கள் மற்றும் கட்டுப்பாட்டுத் தகவல்கள் வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தினை உறுதி செய்வதற்கு முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதையும் உறுதிசெய்தல்.
- நிதியியல் கணக்கீட்டுக் கூற்றுகள் வியாபார முயற்சியின் அந்தஸ்து பற்றி உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை வெளிப்படுத்துகின்றன என்பதனை உறுதி செய்தல்.
- தொழிற்பாட்டில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனைக் கணித்தல்.
- தொழிற்பாட்டில் உள்ள கட்டுப்பாட்டு முறைமைகளின் வினைத்திறனை அணுகுதல்.
- உள்ளக கணக்காய்வு அலகானது பொதுவாக பின்வருவனவற்றை மீளாய்வு செய்து மதிப்பிடுவதற்கான அணுகுமுறை, முதன்மைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட முறையொன்றினை பின்பற்றுகின்றன.
- கொள்கை குறிக்கோள்களை எய்துவதில் திணைக்களத்தினால் இயக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய தொழிற்பாடுகள் வெற்றிகரமானவை என்ற அடிப்படையில் அளவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றவை உள்ளடகங்களாக திணைக்களத்தின் தொழிற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து முறைகளினையும் நடைமுறைகளினையும் (நிதியியல், முகாமைத்துவம் சார் போன்ற) வடிவமைத்து தொழிற்படுத்தல்.
- குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கம் மற்றும் ஏனைய தேவைப்படுத்தல்கள் அத்துடன் முகாமைத்துவத்திட்டங்கள் நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகின்ற அளவு.
- மோசடி, துர்நடத்தை மற்றும் ஒழுங்கீனம் போன்றவற்றிலிருந்து தோன்றுகின்றவை உள்ளடங்களாக இழப்புகளிலிருந்து சொத்துக்களையும் நலன்களையும் பாதுகாக்கின்ற கையகப்படுத்தல் மற்றும் சொத்துக்களை கையுதிர்தல்.
- வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்தவதற்கும் வீண் விரயத்தினை தவிர்ப்பதற்குமான ஒழுங்கமைப்புகள்.
- தீர்மானம் எடுத்தலுக்காக மற்றும் பொறுப்புக்கூறலுக்காக அத்துடன் இத்தகவல்கள் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படையில் வழங்கப்படுகின்ற தகவல்களின் போதுமை, நம்பகத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு.

இடர் முகாமைத்துவம்


சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் நீண்டகால வளர்ச்சிக்கு உரிய முறையிலான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் அவசியம் என உறுதியாக நம்புகின்றது. நிறுவனத்தின் நோக்கம் என்னவென்றால், நிறுவனத்தின் நடைமுறைத் தொழிற்பாடுகளையும் மறைமுறையாகப் பாதிக்கும் அனைத்து பக்கங்களிலுமுள்ள அனைத்து உத்தேசக் காரணிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வதன் ஊடாக அதிகபட்ச நிலையான மதிப்பைச் சேர்ப்பதாகும். இடர் முகாமைத்தவம் என்பது தொடர்ச்சியான மற்றும் வளரும் ஓர் செயன்முறையாவதுடன், இது கூட்டிணைந்த உபாயமார்க்கம் மற்றும் அதன் அமுல்படுத்தலில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

நிறுவனத்தில் நிர்வாக முகாமைத்துவம், முகாமைத்துவ முடிவுகள் மற்றும் வியாபார செயன்முறைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக இடர் முகாமைத்துவம் உள்ளது. மேலிருந்து கீழாக செயல்பாடுகள் திறம்பட செயற்பட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம் அவசியமாகும். இடர் முகாமைதுவ முன் முயற்சிகளை, வியாபார திட்டமிடல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறை ஆகியவற்றில் ஈடுபடுத்துவது திட்டமிடல் அறிக்கையிடல், கணக்காய்வு முற்றும் தகவல்களை முகாமைத்துவம் செய்தல் இடையே ஒரு பயனுள்ள ஒருங்கிணைப்பை வழங்கும்.

இடர் முகாமைத்துவ சட்டகம்

தற்போதைய மாறும் வியாபாரச் சூழலில் முக்கிய கொள்கைகள் மற்றும் கருத்துக்களுடன் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் சட்டகத்தின் தேவையானது கட்டாயமாக அமைந்துள்ளது. கம்பனி பழக்கமான அபாயங்கள் அல்லது கணக்கிடுவதற்கு எளிதானவை மட்டுமல்லாது, அனைத்து அபாயங்களையும் அவற்றின் தொடர்புகளை நிர்வகிப்பதன் முக்கியத்துவத்தை நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. பார்க்கும் பொழுது முக்கியமல்லாமல் காணப்படும் இடர்கள் கூட, அவை ஏனைய நிகழ்வுகளுடன் இணைகையில் பாரிய சேதங்களை ஏற்படுத்தக்கூடும்.

ஒரு ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவத்தின் அடிப்படை உண்மை என்னெவெனில், ஒவ்வொரு கம்பனியும் அதன் நலன்விரும்பிகளுக்கு பாரிய பெறுமதியை உருவாக்குவதற்கு செயற்படுகின்றது என்பதாகும். ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம் நிர்வாகத்தை அதன் நிச்சயமற்ற தன்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆபத்து வாய்ப்பைத் திறம்பட கையாள உதவுவதுடன், மேலும் மதிப்பை உருவாக்கும் திறனை மேம்படுத்துகின்றது. இடது முகாமைத்துவத்தின் இறுதி நோக்கம், இடர் முகாமைத்துவ செயல் முறையில் ஆபத்து நன்மைகளை விட அதிகமாக இருப்பதுடன், செலவு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதனால், ஆபத்து வெகுமதி வர்த்தகத்தை சமநிலைப்படுத்துவதாகும். இடர்களை முகாமைத்துவம் செய்யும் உபாயமார்க்கம் சூழலை நிறுவுதல், இடரை அடையாளம் காணல்,



இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி)

பகுப்பாய்வு இடர்களை அளவிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல், மதிப்பிடுதல் மற்றும் இடர்களை முன்னிலைப்படுத்தல் மற்றும் இடர்களுக்கு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இடர் முக்கியத்துவம்

இடரை முகாமைத்துவம் செய்யும் போது, கம்பனியின் இடர் முக்கியத்துவம் மற்றும் அதன் இடர் சகிப்பளவு என்பவற்றை நிறுவுதல் மிக முக்கியமானதாகும். இடர் முக்கியத்துவம் என்பது, நிறுவனம் அதன் குறிக்கோள்களை அடைவதற்கு தயாராகக்கூடிய ஏற்றுக்கொளக்கூடிய அல்லது உள்வாங்குவதற்கு விரும்பும் மொத்த இடர் தாக்கம் ஆகும். இடர் சகிப்புத்தன்மை என்பது ஒரு குறிப்பிட்ட குறிக்கோளின் சாதனையுடன் தொடர்புடைய ஏற்றுக்கொள்ளத்தக்களவிலான மாறுபாடாகும். மேலும் இரு பெரும்பாலும் தொடர்புடைய குறிக்கோளை அளவிடப்படும் அதே அலகுகளில் அளவிடப்படுகின்றது.

முகாமைத்துவம் இடர் சகிப்புத்தன்மையுடன் விசேடமாக அடையாளம் காணப்பட்டவை ஊடாக இடர் முக்கியத்துவத்தின் மாறாத தன்மைக்காக நிறுவனத்தின் செயற்பாடுகளைக் கண்காணிக்கின்றது. இடர் சகிப்புத்தன்மையும் கம்பனியின் செயலாற்றுகைகளை மதிப்பிடுவதற்கான கண்காணிப்பு செயன்முறையுடன் ஒருங்கிணைந்த ஒருபகுதியாகும். இவ்வருடம், கைத்தொழிற்துறையின் பிரச்சினைகள் மற்றும் வியாபார வளர்ச்சி என்பவற்றை கருத்தில் கொண்டு இடர் சகிப்பு மட்டம் இற்றைப்படுத்தப்பட்டது.

இடர் ஆளுகை

இடர் முக்கியத்துவத்தை நிர்ணயித்தல், இடர் உபாயமார்க்கத்தை அறிவித்தல் மற்றும் இடர்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதற்கான கொள்கைகளை அங்கீகரித்தல் என்பவற்றுக்கான பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியதாகும்.


கம்பனியின் முகாமைத்துவக் குழு நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ தத்துவங்களை ஆதரிக்கின்றது, அதன் இடர் முக்கியத்துவத்துடன் இணக்கப்பாட்டை ஊக்குவிக்கின்றது மற்றும் முன் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுடன் அவைகளின் பொறுப்பெல்லையினுள் இடர்களை முகாமைத்துவம் செய்கின்றது.

எங்கள் வியாபாரத்தில் உள்ளார்ந்த இடர்கள்

பாரிய மூலதன அர்ப்பணிப்புகள் மற்றும் தனிப்பட்ட ஊதியக் கொடுப்பனவுகள், மேந்தலை மற்றும் பராமரிப்பு செலவுகள் காரணமாக தொழிற்பாடுகளில் இருந்து போதுமானளவு காசினை நாங்கள் கொண்டிருப்பதில்லை.

கீழ்வரும் ஏனைய விடங்களின் அடிப்படையில் பருவத்திற்கு பருவம் மாற்றமுரும் எங்கள் தொழிற்பாடுகளில் இருந்து நாங்கள் பிறப்பித்துக்கொள்ளும் காசின் அளவில் தான் நாங்கள் எவ்வளவு காசினை எங்கள் பங்குகளுக்கு பகிர்ந்துகொள்ள முடியும் என்பது தங்கியுள்ளது.

- நாங்கள் கையாளும் பெற்றோலியப் பண்டங்களின் அளவு.
- நாங்கள் கையாளும் அளவின் அடிப்படையில் முனையப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் கட்டணங்கள்
- குழாய் இணைப்பு வசதிகளில், தொடர்படைய உபகரணங்கள் மற்றும் சுற்றிவரவுள்ள ஆதனங்களுக்கு வெள்ளத்தினால், நெருப்பினால், கடுமையான காலநிலையினால், வெடிப்புகளினால் மற்றம் ஏனைய இயற்கை அனர்த்தங்கள் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளினால் ஏற்படும் சேதங்கள்.
- மனிதப் பிழை அல்லது வேறேதும் காரணமாக ஏற்படும் ஒழுக்குகள் அல்லது விபத்துக்காரணமாக சூழலுக்கு பண்டங்கள் அல்லது ஏனைய பொருட்கள் கசிதல்.



- நிலவும் பொருளாதார மற்றும் சந்தை நிலைமைகள்
- எங்கள் பெறுகைகளை சேகரிப்பதில் காணப்படும் சிரமங்கள்
- புதிய மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சுகாதார, சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் தாக்கம்.
- நாங்கள் தொழிற்படும் கைத்தொழிற்துறையில் அரசாங்க ஒழுங்குவிதிகளில் ஏற்படும் மாற்றங்கள் உள்ளடங்காக அரசாங்க ஒழுங்குவிதிகள்.
- வரிச் சட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள்
- காலநிலை மற்றும்
- தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலை.





எங்கள் நிதியியல் விளைவுகள், ஏனைய மற்றைய காரணிகளுக்கிடையில், நாங்கள் எங்கள் முனையங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் இலகு சுத்திகரிப்பு பண்டங்கள், கனரக சுத்திகரிப்பு பண்டங்கள், மசகு எண்ணெய் மற்றும் ஏனைய சேவைகளுக்கான கேள்வி, மற்றும் நிலையான காலத்திற்கு இந்தப் பண்டங்களுக்கு காணப்படும் குறைந்த கேள்வியின் விளைவாக பொது பொருளாதாரச் சரிவு போன்ற விளைவுகளில் தங்கியுள்ளது.

எங்கள் முனையங்களில் உள்ள களஞ்சியப் பயன்பாட்டுகளில் ஏற்படும் குறிப்பிட்ட வீழ்சியினால் எங்கள் முனையங்களினால் சந்தையில் இலகு சுத்திகரிப்பு பண்டங்கள், கனரக சுத்திகரிப்பு பண்டங்கள், மசகு எண்ணெய் உடன் தொடர்புடைய சேவைகளுக்கான கேள்வியில் ஏற்படும் ஏதேனும் நிலையான வீழ்ச்சி, எங்கள் இரு பங்குதாரர்களுக்கும் வழங்கும் எங்கள் திறனையும் எங்கள் காசுப் பாச்சலையும் குறைக்கும். எங்கள் நிதியியல் விளைவுகளும், 2017ம் ஆண்டில் இறுதிக் காலாண்டில் ஆரம்பித்து 2018இலும் தொடர்ந்த இலகு சுத்திகரிப்பு பண்டங்கள், கனரக சுத்திகரிப்பு பண்டங்களுக்கான நிலையான விலை வீழ்ச்சி உள்ளடங்களாக நாட்டில் ஏற்படும் மாறும் பொருளாதார நிலைமைகள் மற்றும் நிட்சயமற்ற தன்மைகளினால் பாதிக்கப்படும்.

பொருளாதாரம் மற்றும் சந்தை நிலைமைகள் தொடர்ந்தும் நிட்சயமற்று அல்லது மறைமுக நிலைமைகள் தொடர்ந்தால், மேலும் பரவினால் அல்லது மோசமடைந்தால், நாங்கள் எங்கள் வியாபாரத்தில், நிதியியல் நிலமைகளில் மற்றும் தொழிற்பாட்டு பெறுபேறுகளில் முக்கிய தாக்கங்களை அனுபவிக்கக்கூடும்.

எங்கள் தொழிற்பாடுகள், வெள்ளம், நிலச்சரிவு அல்லது கடுமையான புயல்களினால் ஏற்படும் குறுக்கீடுகள் உட்பட போதியளவு காப்பீடு செய்யப்படாத தொழிற்பாட்டு அபாயங்கள் மற்றும் எதிர்பாராத குறுக்கீடுகளுக்குட்பட்டவை.

நாங்கள் விநியோக உட்கட்டமைப்பு அல்லது போக்குவரத்து என்பன மோசமான காலநிலை, விபத்துகள், நெருப்பு, வெடிப்புகள், தீங்கான பொருட்களின் வெளியேற்றங்கள், பொறியியல் பழுதுகள், தடங்கல்கள் போன்ற காரணிகளினாலும், ஏனைய எங்கள் கட்டுப்பாட்டுக்குள் அமையாத நிகழ்வுகளாலும் பாதிக்கப்படலாம். 2017ம் ஆண்டு முத்துராஜவெல முனையத்தில் அமைந்துள்ள சேதமடைந்த நீர்முழ்கி ஹோல்களை பதிலீடு செய்தபோது முனையத்தில் இருந்த எஸ்பீபிஎம் மற்றும் அதன் தொழிற்பாடுகள் திருத்தங்கள் முடிவடையும் வரை இரண்டு நாட்கள் தடங்களுக்குட்பட்டது. இவ்வாறான நிகழ்வுகள் ஏதும் ஏற்பட்டால், ஆதனம் மற்றும் உபகரணத்திற்கு ஏற்படும் பாரிய சேதங்கள் மற்றும் சூழல் மாசடைதல் அல்லது வேறேதும் சேதங்கள் ஏற்படாதிருப்பதற்கு எங்கள் தொழிற்பாடுகளை இடைநிறுத்த வேண்டிய தேவை ஏற்படுவதனால் நாங்கள் பாரிய நட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையேற்படும்.



நாங்கள் எங்கள் வியாபாரத்தில் ஏற்படும் அனைத்து இடர்கள் தொடர்பாகவும் காப்புறுதியினை மேற்கொள்ளவில்லை. மேலும், எங்களால் நியாயமான வீதத்தில் நாங்கள் விரும்பும் வகையிலும் தொகையிலும் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள அல்லது பராமரிக்க எங்களால் முடியவில்லை. சந்தை நிலமைகள், எங்கள் சில காப்புறுதி கொள்கைகளுக்கான கட்டுப்பணங்கள் மற்றும் கழிப்பனவுகள் அதிகரித்ததனால் பராமரிக்கவோ அல்லது பெறமுடியாதோ போகலாம். மேலும், சில இடர்களுக்கு உப வரையறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. சில வேளைகளில் சிலகாப்புறுதிகள் கிடைக்கப்பெறாமை அல்லது குறைந்த காப்புறுதி இழப்பீடுகள் கிடைக்கப் பெறுகின்றமை போன்றன நிகழ்கின்றன. முழுமையாக காப்புறுதி செயப்படாமையினால் நாங்கள் குறிப்பிட்ட பொறுப்புக்களை எடுக்க வேண்டி வருவதனால், அது எங்கள் நிதி நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மறுதலையான தாக்கத்தை உருவாக்குவதனால், தொழிற்பாடுகளிலிலும் காசு கிடைப்பனவுகளிலும் தாக்கங்கள் ஏற்படுகின்றன.

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பிட்டளவிலான களஞ்சியப்படுத்தல் வசதியைக் குறைந்த விலையில் போட்டிக் கம்பனிகள் வழங்குவதற்கு தயாராக உள்ளமையினால் அது எங்கள் தொழிற்பாட்டுப் பெறுபேறுகளையும் நிதியியல் நிலமைகளையும் மறுதலையாக பாதிக்கின்றது.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் இரு பங்குதாரர்களான ஏனைய இரு முனையக் கம்பனிகளில் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி) இருந்தும் போட்டியை எதிர்கொள்ளுகின்றன.

எங்களிடம் தற்போதுள்ள சொத்துக்களின் விரிவக்கல் மற்றும் புதிய சொத்துக்களின் நிர்மாணிப்பு என்பன வருமான அதிகரிப்பை தரப்போவதில்லை எனினும் சுற்றாடல் ஒழுங்குவிதிகள், அரசியல், சட்ட மற்றும் பொருளாதார இடர்கள் என்பன எங்கள் தொழிற்பாட்டிலும் நிதியியல் நிலமையிலும் எதிர்மறையான தாக்கத்தை விளைவிக்கின்றன.

எங்கள் உபாயமார்க்கத்தின் ஒரு பகுதியாக தற்போதுள்ள சொத்துக்களை விரிவுபடுத்தல் மற்றும் மேலதிக சொத்துக்களை உருவாக்குவதற்கான எங்கள் இயலுமை தொழிற்பாடுகளை அதிகரித்தல் மற்றும் நிலைத்திருப்பு என்பவற்றில் தங்கியுள்ளது. தற்போதுள்ள முனையத்தின் விரிவாக்கம், களஞ்சியப்படுத்தல் கொள்ளளவை அதிகரித்தல் அல்லது இல்லையேல் எங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பால் பல்வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல், சுற்றாடல் மற்றும் அரசியல் மற்றம் சட்ட நிட்சயமற்றதனமை என்பவற்றால் ஏற்படுகின்றது. மேலும் இவ்வாறான கருத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் தேவையான நிதியை வழங்குவதற்கு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் இரு பங்குதாரர்களான இரு சந்தைப்படுத்தல் கம்பனிகளிடமிருந்து நாங்கள் பாரிய நீண்டகால ஒப்பந்த ஈடுபாடுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடாது. இதன் விளைவாக, நாங்கள் புதிய வசதிகளை உருவாக்குதல் வேண்டும், இதனால் எங்களால் எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டு வருவாயை அடைவதற்கு போதிய கேள்வியை கவர முடியவில்லை. இது எங்கள் அலகுவைப்பாளர்களுக்கு விநியோகிப்பதற்கான எங்கள் இயலுமை மற்றும் நிதியியல் நிலமை மற்றும் தொழிற்பாட்டு விளைவுகளை எதிர்மறையாக பாதிக்கின்றது.

நாங்கள் இவ்வாறான கருத்திட்டங்களை எடுத்துக்கொண்டால், அட்டவணைப்படுத்தப்பட்டவாறு அல்லது திட்டமிடப்பட்ட செலவினுள் பூர்த்திசெய்வதற்கு முடியாமல் போகலாம். நாங்கள் இவ்வாறான கருத்திட்டங்களுக்கு அவசியமான வருமானத் தேவையை வழங்குவதற்கு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் இரு பங்குதாரர்களான இரு சந்தைப்படுத்தல் கம்பனிகளிமிருந்து போதியளவு பல் வருட ஒப்பந்த ஈடுபாடுகளைப் பெற்றுக்கொண்டாலும், விரிவுபடுத்தப்பட்ட காலத்தினுள் வருமானத்தில் அதிகரிப்பை நாங்கள் பெற்றுக்கொள்ள முடியாது. உதாரணமாக, நாங்கள் இரு புதிய தாங்கிகளை நிர்மாணிக்கின்றோம் என எடுத்துக்கொண்டால், இந்த நிர்மாணிப்பு பொதுவாக 12 தொடக்கம் 24 மாதங்கள் வரையான காலத்தை எடுத்துக்கொள்ளுவதுடன், இந்த நிர்மாணிப்பு முடிந்த பின்னரும் குறிப்பிடத்தக்க வருவாயை நாம் பெற்றுக்கொள்ள மாட்டோம். இவ்வாறான நிலமைகள் எங்கள் தொழிற்பாடுகளின் பெறுபேற்றையும் நிதியியல் நிலமையையும் இலாபத்தை உருவாக்கும் எங்கள் இயலுமையையும் எதிர்மறையாகத் தாக்கக்கூடும்.

எங்கள் தொழிற்பாடுகள் பண்டத்தின் தர அமைப்புக்குறியீடுகள் சட்டரீதியானதுடன் இலங்கையின் சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டதனால், நாங்கள் விநியோகித்த பண்டங்களில் சில தர அமைப்புக்குறியீடுகளுடன் இணங்காமையினால் எங்கள் விநியோகத்தர்கள் எங்களுக்கு எதிராக சேதங்களின் அடிப்படையில் கோரிக்கைகளை விடுக்கக்கூடும்

ஆவியாதல் அமுக்கம், கந்தக அளவு, எத்தனோல் அளவு மற்றும் பயோடீசல் உள்ளடங்களாக சுத்திகரிக்கப்பட்ட பண்டங்களுக்கான பண்ட தர அமைப்க்குறியீடுகளை பல்வேறுபட்ட சட்டரீதியான மற்றும் இலங்கை அதிகாரசபைகள் விவரித்துள்ளன. பண்ட தர அமைப்புக்குறியீடுகள் அல்லது கலக்கும் தேவைப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் எங்கள் முனையங்களில் உங்கள் பண்ட அளவினைக் குறைக்கும், அத்துடன் மேலதிக கையாளல் ஆகுசெலவு மற்றும் மூலதன செலவுகளை ஏற்றுக்கொள்வதற்கு தேவைப்படுத்தும்.



அதிகரிக்கும் வருமானத்தின் ஊடாக எங்களால் இந்த ஆகுசெலவை மீட்க முடியாமல் போனால், எங்கள் காசுப் பாச்சல் மற்றும் தொழிற்பாடுகளை சீராக மேற்கொள்ளும் இயலுமை என்பன எதிர்மறையாக தாக்கமுறும். எங்கள் தொழிற்பாட்டுக்கு உடமையாக்கத்தக்க பண்ட தரச் சட்டங்கள் மீறுதல்களுக்கு விதிக்கப்படும் தண்டங்கள் மற்றும் விதிப்பனவுகள் எதிர்மறையான விம்பத்தை ஏற்படுத்தக்கூடும். எங்கள் களஞ்சிய தாங்கிகளில் ஏற்றப்படும் பண்டங்களின் தரத்தையும் தூய்மையையும் உறுத்திப்படுத்தவதற்கான பொறுப்பினை நாம் கொண்டுள்ளோம். பொது மக்கள் பாவனைக்காக அமைப்புக்குறியீடுகளுக்கு அப்பாற்பட்ட பண்டங்களை விநியோகித்தலானது குறித்த பண்டத்தின் தரரச் சட்டங்களை மீறுவதோடல்லாது, அதன் விளைவாக எஞ்சின் சரியாகத் தொழிற்படாமல் அல்லது எஞ்சினை சேதமடையச் செய்யக்கூடும். இந்தவகையான நிகழ்வுகள் காரணமாக எரிபொருள் அமைப்புக்குறியீடுகளுக்கு அப்பாற்பட்ட பண்டங்களை விநியோகித்தமை காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கான பொறுப்பினைக் கோருவதன் விளைவாக எதிர்மறையான விளம்பரப்படுத்தல், எங்கள் தொழிற்பாட்டின் பெறுபேற்றிலும் காசுப்பாச்சலிலும் குறிப்பிடத்தக்க எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்ட் நிறுவனம் எந்தவொரு பெற்றோலிய எரிபொருளையும் பரிசோதனை செய்வதற்கான நவீன ஆய்வுகூடத்தை கொண்டிருப்பதுடன், அது கடுமையான தரக் கட்டுப்பாட்டு பொறிமுறையை பின்பற்றுவதோடு ஒழுங்குமுறை மற்றும் சான்றுபடுத்தலுடன் இணங்குகின்றது.

எங்களுடைய பல முனைய வசதிகளும் களஞ்சியப்படுத்தல் சொத்துக்களும் பல தசாப்தகாலமாக சேவைபுரிகின்றனதன் காரணமாக அதன் பராமரிப்பு செலவு அல்லது புதுப்பித்தல் செலவுகள் அதிகரிக்கின்றன, இது எங்கள் வியாபாரம், தொழிற்பாட்டு விளைவுகள், நிதி நிலைமைகள் மற்றும் எங்கள் இரு பங்குதாரர்கள் எதிர்பாக்கும் எங்கள் இயலுமை என்பவற்றை எதிர்மறையாகப் பாதிக்கும்.



சில களஞ்சிய தாங்கிகள் பலவருகாலம் பழைமையானவையாக இருந்தபோதிலும், சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்ட் நிறுவனம் உரிய பராமரிப்புகளையும் திருத்தங்களையும் மேற்கொண்டதனால் தற்போதும் அவை பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன.

மிகச் சிக்கலானதும் அடிக்கடி மாறுவதுமான சுற்றாடல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதற்கு குறிப்பிடத்தக்களவு ஆகுசெலவுகளையும் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

எங்கள் தொழிற்பாடுகள் இலகு சுத்திகரிக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் கனரக சுத்திகரிப்பு பண்டங்கள் மற்றும் மசகு எண்ணை என்பவற்றை போக்குவரத்து செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலில் ஈடுபட்டிருப்பதுடன், ஏனையவற்றடன் சுற்றாடல் பாதுகாப்பதுடன் தொடர்புபட்ட பெற்றோலியப் பண்டங்களை சேகரித்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து செய்தல், சுற்றாடலுக்கு வெளியிடப்படும் புகை மற்றும் ஏனைய பதார்த்தங்கள், கழிவுகளின் முகாமைத்துவம் மற்றும் அகற்றல் போன்றவற்றினால் அரச மற்றும் உள்;ராட்சி சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளினால் ஆளுகை செய்யப்படுகின்றது, அத்துடன் எங்கள் தொழிற்பாடுகள் தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குட்பட்டன. இந்த சிக்கலான அரச மற்றும் உள்; ராட்சி சட்டங்களுடன் இணங்குதல் மிகக் கடினமானதுடன் மாசடைதலைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு குறிப்பிட்டளவு மூலதனச் செலவு மற்றும் தொழிற்பாட்டு ஆகுசெலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் எங்கள் வியாபாரம் இயல்பாகவே சுற்றுச்சூழல் மற்றும் அண்டை பகுதிகளுக்கு தற்செயலான கசிவுகள், வெளியேற்றங்கள் அல்லது பெற்றோலிய அல்லது அபாயகரமான பதார்த்தங்களை வெளியிடுவதற்கு உட்பட்டதனால், இதற்காக நாங்கள் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் தீர்வுகளைக் காண்பதற்கும் பொறுப்புகளை ஏற்ற வேண்டியேற்படலாம். இந்த பிரயோகிக்கப்படக்கூடிய சுற்றாடல், சுகாதார மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமல் போவதன் காரணமாக நிர்வாக, சிவில் அல்லது குற்றத் தண்டங்கள் உள்ளடங்களாக அனுமதி இரத்துச்செய்தல் மற்றும் எங்களின் சில அல்லது அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் அல்லது தடைசெய்யும் தடைகள் உள்ளிட்ட பொருளாதாரத் தடைகளை மதிப்பீடுசெய்யலாம்.





எதிர்காலத்தில் என்ன கூடுதல் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் அல்லது விதிமுறைகள் இயற்றப்படும் அல்லது நடைமுறைக்கு வரும் அல்லது எங்களது செயற்பாடுகள் தொடர்பாக தற்போதுள்ள அல்லது எதிர்கால சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன அல்லது விளக்கப்படும் என்பதை நாம் கணிக்க முடியாது. இந்தச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் பல பெருகிய முறையில் கடுமையானவையாகி வருகின்றன. மேலும் இந்த தேவைகளுக்கு இணங்குவதற்கான செலவு காலப்போக்கில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கலாம். சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு இணக்கத்திற்கான இந்த செலவுகள் எங்கள் நிதி நிலை தொழிற்பாடுகளின் முடிவுகள் அல்லது காசுப் பாச்சலில் ஒரு மோசமான விளைவை ஏற்படுத்தக்கூடும்.

எதிர்காலத்தில் என்ன கூடுதல் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் அல்லது விதிமுறைகள் இயற்றப்படும் அல்லது நடைமுறைக்கு வரும் அல்லது எங்களது செயற்பாடுகள் தொடர்பாக தற்போதுள்ள அல்லது எதிர்கால சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன அல்லது விளக்கப்படும் என்பதை நாம் கணிக்க முடியாது. இந்தச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் பல பெருகிய முறையில் கடுமையானவையாகி வருகின்றன. மேலும் இந்த தேவைகளுக்கு இணங்குவதற்கான செலவு காலப்போக்கில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கலாம். சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு இணக்கத்திற்கான இந்த செலவுகள் எங்கள் நிதி நிலை தொழிற்பாடுகளின் முடிவுகள் அல்லது காசுப் பாச்சலில் ஒரு மோசமான விளைவை ஏற்படுத்தக்கூடும்.

எங்கள் வசதியளிப்புகளினால் ஏற்படும் மாசுறுதலுக்கு குறிப்பிட்டுக்கூறக்கூடியளவு ஆகுசெலவு மற்றும் பொறுப்புகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளல் நேரிடும்.

எங்கள் முனைய வசதியளிப்புகள் பல வருட காலமாக இலகு சுத்திகரிக்கப்பட்ட பண்டங்கள். கனரக சுத்திகரிக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் மசகு எண்ணெய்களை போக்குவரத்து செய்வதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு மற்றும் விநியோகிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. நாங்கள் காலத்திற்கு காலம் நியம தொழிற்பாட்டு மற்றும் அகற்றல் நடைமுறைகளைப் பயன்படுத்தியிருந்தாலும், முனைய ஆதனத்தில் அல்லது அதன் கீழ் ஹைரோகாபன்கள் மற்றும் கழிவுகள் காலத்திற்கு காலம் சிந்தியிருக்கலாம் அல்லது வெளிப்பட்டிருக்கலாம்.

முனைய ஆதனங்கள் சட்ட, அரச மற்றும் உள்ளூராட்சி சட்டங்களுக்கு உட்பட்டவை, சூழல் மாசுபாட்டைத் தவிர்க்கவும் மற்றும் அவற்றை கவனத்தில் கொள்வதற்காகவும் தவறுகையின்றி மேற்கொள்வதற்காக விசாரணைகளையும் அதனை தீர்ப்பதற்கான தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துகின்றன. இவற்றில் சில கூட்டாகவும் தனித்தும் அல்லது கடுமையான பொறுப்பு தேவைப்பாடுகளுக்குட்பட்டவை.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் காலத்திற்கு காலம் கழிவு எண்ணெய்களை உரிய கழிவகற்றல் முறையில் அகற்றுவதுடன் சூழலுக்கு அக்கழிவுகள் சேதங்களை ஏற்படுத்தாது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

எங்கள் நிறைவேற்று உத்தியோகத்தர்களும் குறிப்பிட்ட சில பிரதான தனிப்பட்ட நபர்களும் எங்கள் வியாபாரத்திற்கு முக்கியமானவர்கள். இந்த நிறைவேற்று உத்தியோகத்தர்களும் குறிப்பிட்ட சில பிரதான தனிப்பட்ட நபர்களும் எதிர்காலத்தில் எங்களுடன் இல்லாது போகலாம்.

எங்கள் எதிர்காலம் எங்கள் நிறைவேற்று உத்தியோகத்தர்களினதும் மற்றும் ஏனைய பிரதான நபர்களினதும் தொடர்ச்சியான சேவைகளில் தங்கியுள்ளது. நாங்கள் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் அல்லது பிரதான நபர்களை இழக்க நேர்ந்தால் எங்கள் வியாபாரத்தின், தொழிற்பாட்டின் பெறுபேறுகளும் நிதியியல் நிலைமைகளும் பாதிப்புக்கு உள்ளாகும்.

ஊழியர்களை அங்கீகரித்தல், மதிப்பீடுகளை வழங்குதல் மற்றும் பாராட்டுதல் ஆகியவற்றைக் கொண்ட வலுவான ஊழியர் மதிப்பு முன்மொழிவின் மூலம் ஊழியர்களின் ஊக்கத்தை பராமரித்தல்.

அனைத்து ஊழியர்களுக்குமாக கட்டமைக்கப்பட்ட பயிற்சித்திட்டங்கள் மற்றும் வலுவான செயற்திறன் முகாமைத்துவ அமைப்பின் ஊடாக அடையாளம் காணப்பட்ட பயிற்சித்தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கி பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பற்றாக்குறையை சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் குறைத்துள்ளது.

நாங்கள் வினைத்திறனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அபிவிருத்தி செய்யாது விட்டால் அல்லது பராமரிக்காது விட்டால், சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் மீது மறைமுக தாக்கத்தை விளைவிக்கும் எங்கள் நிதியியல் பெறுபேறுகளை சரியான முறையிலும் செம்மையானதாகவும அறிக்கையிட முடியாமல் போவதுடன், மோசடிகளைத் தடுக்கவும் முடியாது.

அரசியலமைப்பின் 19ம் வது திருத்தச்சட்டத்திற்கு அமைவாக, நாங்கள் நிதி மற்றும் பிற தகவல்களை சான்றழிக்கவும் எங்கள் நிர்வாகத்திற்கு தேவைப்படும் விதிமுறைகள் உட்பட் பொது அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கு பதிலளித்தல் வேண்டும். நாங்கள் எங்கள் காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாராளுமன்றத்திற்கு நிதி அறிக்கையிடலுக்காக எங்கள் உள்ளக கட்டுப்பாட்டின் செயற்திறனை பற்றிய வருடாந்த அறிக்கையை வழங்குகின்றோம்.

வெற்றிகரமாக செயற்படும் ஒரு அரச கம்பனியாவும், மோசடிகளைத் தடுப்பதற்கும், நம்பகமான மற்றும் சரியான நிதி அறிக்கைகளை வழங்குவதற்கும் வினைத்திறனான உள்ளக கட்டுப்பாடு அவசியம். நாங்கள் இலங்கை நிதியில் பிரமாணத்திற்கு அமைவாக நிதியில் கூற்றுக்களைத் தயாரிக்கின்றோம். எங்கள் உள்ளக கட்டுப்பாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்காது இல்லாது போனால் எதிர்காலத்தில் எங்கள் நிதி செயற்பாடுகளை மற்றும் அறிக்கையிடல் மீது அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் இணக்கங்களுக்கான எங்கள் தேவைப்பாடுகள் மீது திறமையான கட்டுப்பாட்டை பராமரிக்க முடியாது போகலாம்.

எங்கள் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளில் செய்யப்பட்ட மாற்றங்களை காலாண்டு அடிப்படையில் நாங்கள் வெளிப்படுத்த வேண்டும். மேலும் நிதி அறிக்கையிடலுக்கான எங்கள் உள்ளக கட்டுப்பாடு குறித்து வருடாந்த மதிப்பீட்டை நாங்கள் செய்துள்ளோம்.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் இடர்களைக் குறைப்பதற்காக கடமைகளைப் பிரித்தல், மீளாள்வு மற்றும் மூன்றாம் தரப்பினரிடமிருந்து அறிக்கைகளை செம்மையாக்கல், இட பரிசோதனை மற்றும் மீள்கணிப்பீடுகள், அணுகலை மேற்பார்வை செய்தல் மற்றும் ஊழியர்களை பயிற்றுவித்தல் போன்ற உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறைகளை அமுல்படுத்தியுள்ளது.

எங்கள் வசதிகளை அல்லது சுற்றியுள்ள பகுதிகளை நோக்கமாகக் கொண்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் எங்கள் வியாபாரத்தை மோசமாகப் பாதிக்கும்.

இரண்டு முனையங்கள் மற்றும் தீவு முழுவதிலும் உள்ள கிடங்குகள் நாட்டின் எரிபொருள் சொத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். குறிப்பாக கொலொன்னாவை மற்றும் முத்துராஜவெல முனையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் பயங்கரவாத அமைப்புகளின் எதிர்கால இலக்குகளாக இருக்கலாம். எங்கள் வாடிக்கையாளர்களின் எங்கள் வசதிகளில், ஏனைய முனையங்களில், எஸ்பீபிஎம், அல்லது ஏனைய முறையங்களில் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத தாக்குதல்கள் எங்கள் நிதி நிலமையை, காசுப்பாச்சலின் அல்லது தொழிற்பாட்டு பெறுபோறுகளை மோசமாககத் தாக்கும்.






அதிநவீன கண்காணிப்பு கமரா அமைப்புகளை செயற்படுத்துதல் மற்றும் உயர் தொழில்நுட்ப சோதனை பயன்படுத்துதல் ஊடாக பயங்கரவாத தாக்குதல்களைத் தணித்தல்.

எங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் எங்கள் தகவல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பிற மீறல்களைத் தடுக்கும் சைபர் தாக்குதல்கள் எங்கள் செயற்பாடுகளை சீர்குலைத்து செலவுகளை அதிகரிக்கும். எங்கள் சொத்துக்களை இயக்க மற்றும் எங்கள் வியாபாரத்தை நிர்வகிக்க தொழில்நுட்ப முறைமைகளைப் பயன்படுத்துகின்றோம். சைபர் தாக்குதல்கள் அல்லது எங்கள் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளின் பிற பாதுகாப்பு மீறல் முக்கியமான செயற்பாட்டு அல்லது நிதிக் கட்டுப்பாடுகளை மீறுவதோடு எங்கள் செயற்பாடுகள் வணிக நடவடிக்கைகள் அல்லது நிதி செயன்முறைகளை சீர்குலைக்க வழிவகுக்கும்.

சைபர் தாக்குதல்கள் அல்லது பாதுகாப்பு மீறல்கள் மற்றும் அதன் தோல்வி சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடும். பேரழிவு மீட்பு முகாமைத்துவ மத்தியநிலையக் கருத்திட்டம் இன்னும் பூர்த்தியாகவில்லை என்பதுடன் நாம் சார்ந்திருக்கும் சைபர் தாக்குதல்கள் வளர்ந்து வரும் ஒவ்வொரு வகை தாக்குதலையும் எதிர்பார்ப்பது அல்லது தடுப்பதற்கான ஆதாரங்கள் அல்லது தொழில்நுட்பங்களைக் கொண்டிருக்கவில்லை. அத்தகைய தாக்குதல்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் அத்தகைய தாக்குதல்களைத் தடுப்பதற்கு எங்கள் செயற்பாடுகள் நிதி நிலைமை மற்றும் காசுப்பாச்சலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.



பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கம்பனியின் விவகாரங்கள் பற்றிய 2017 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது.

இவை 07 மார்ச் 2018ம் திகதி பணிப்பாளர்களினால் அனுமதிக்கப்பட்டன.

முதன்மை நடவடிக்கை

கம்பனியின் முதன்மை நடவடிக்கையானது, இலங்கையில் பெற்றோலிய களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளை வசதிப்படுத்தல் மற்றும் எண்ணெய் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய்த் தொகுதிகள் மற்றும் பவுசர் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய மற்றும் விநியோக உட்கட்டமைப்பை உரித்தாகக் கொள்ளுதல் தொழிற்படுதல் 2003 ஒக்டோபர் 13ம் திகதிய 1310-8 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் மற்றும் கொலொன்னாவை, முத்துராஜவெல நாடு முழுவதிலும் உள்ள மொத்தக் கிடங்குகள் மற்றும் தொடர்புடைய வசதிகள் மற்றும் முத்துராஜவெல எண்ணெய் நிலையத்திற்கான தனி நிலைய நங்கூர மிதவை கொழும்பு துறைமுக முதல் கொலொன்னாவை நிலையம் வரை மற்றும் வாடிக்கையாளர் சேகரிப்பு எல்லைகள் வரை அவற்றின் கிளைகள், காலி துறைமுகம் தொடக்கம் மாகல்ல வரை மொத்தக் கிடங்குகள் மற்றும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நிலையங்கள் மொத்தச் சாலைகளிலுள்ள குழாய்த் தொகுதி போன்றன தொடர்பில் பயன்படுத்தவதற்கான உரிமை அத்துடன் அல்லது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அனுபவிக்கப்படும் குத்தகை உரித்து உரிமையுடன் தாபிக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாட்டாளர் வசதியாகும்.

தொழிற்பாடுகள் மற்றும் நிதியில் முனைவுறுத்தல்கள் பற்றிய மீளாய்வு

தொழிற்பாடு ரூபா 2,799,571, 815 தேறிய இலாபத்துடன் ரூபா 14,176,146,910 மில்லியன் வருவாய் ஒன்றினைக் காட்டியுள்ளது

விபரங்கள்	2017 ரூபா	2016 ரூபா
புரள்வு	14,176,146,910	12,663,444,509
வரிவிதிப்புக்கு முன்னர் உழைப்பு	3,273,309,403	2,330,073,120
வரிக்கு பிந்திய இலாபம் / நட்டம்	2,799,571,815	1,738,629,426

குறிப்பிடப்பட்ட மூலதனம்

31 டிசம்பர் 2017ம் திகதியில்உள்ளவாறு குறிக்கப்பட்ட மூலதனம் ரூபா 7,500,000,000 ஆகும். பங்குரிமை விநியோகம் பின்வருமாறு

	சாதாரண பங்குகள்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	500,000,000
இலங்கை இந்தியன் ஒயில் கம்பனி லிமிடட்	250,000,000

ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இவ் ஆண்டின் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 10 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பங்கிலாபம்

31 டிசம்பர் 2017ம் உடன் முடிவுற்ற ஆண்டுக்கான பங்கொன்றுக்கு ரூபா 0.54 இடைக்கால பங்குலாபம் ஒன்றினை பணிப்பாளர்கள் பரிந்துரைத்தனர்.

நிறுவன அன்பளிப்புகள்

ஆண்டின் போது கம்பனி ரூபா 6,114,277 தொகையை நன்கொடைகள் மற்றும் அனுசரணைக் கொடுப்பனவுகளாக வழங்கியது.

31 டிசம்பர் 2017ம் திகதியில் உள்ளவாறு பணிப்பாளர்கள்

31 டிசம்பர் 2017ம் திகதியில் உள்ளவாறு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிபாளர் சபை பின்வருமாறு,
தமிமிக்க ரனதுங்க
உதித நிரோஷன் குணவர்தன
ககுல்தொட்டுவகே மொன ரோஸ்மேரி ஒல்கா
அனுஜ் ஜெயின்
சியாம் போரா
ரன்தீர் சிங்
ரனவீர ஆராச்சிகே நிமால் ஜயசுந்தர
ஹேரத் முதியான்சகே சஞ்சீவ லுசாந்த விஜேரத்ன

பணிப்பாளர்களின் வேதனாதிகள்

பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற வேதனாதிகள் நிதிக்கூற்றுக்கான வருமானக் கூற்றில் விபரமாக எடுத்தரைக்கப்பட்டுள்ளது.

நலன்கள் பற்றிய பதிவேடு

கம்பனியானது 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக நலன்கள் பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணுகின்ற போது 2017 இன் 07ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 192 (2)இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அனைத்துப் பணிப்பாளர்களும் பிரகடனங்களை மேற்கொள்ள வேண்டும். தொடர்புடைய பதிவகள் மீளாய்விற்குஉட்படுகின்ற ஆண்டின் போது நலன்கள் பற்றிய பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டன.

நியதிச் சட்ட கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசாங்கத்துடன் தொடர்புடைய மற்றும் ஊழியர்களுக்கான அனைத்து நியதிச் சட்ட கொடுப்பனவுகளும் உரிய திகதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன அல்லது கம்பனியின் ஏடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

வியாபார தொழிற்பாடுகளை தொடர்வதற்கு கம்பனி போதிய வளங்களை கொண்டுள்ளது என பணிப்பாளர்கள் நம்புகின்றனர். அதற்கமைய நிதியில் கூற்றுகளை தயாரிக்கையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவினை பின்பற்றுவது பொருத்தமானது என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 23இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய சரிப்படுத்தல்களை வேண்டுகின்ற கம்பனி மீதான ஏதேனும் முக்கிய தாக்கத்தை கொண்டிருக்கக்கூடிய ஐந்தொகை திகதிக்கு பிந்தி நிகழ்ந்துள்ள முக்கிய நிகழ்வுகள் ஏதும் காணப்படவில்லை.

கணக்காய்வாளர்கள்

அரசியலமைப்பின் 19வது திருத்த நியதிகளுக்கு அமைய கம்பனியின் கணக்காய்வாளராக பணிப்பாளர்களாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை அல்லது அவர் பெயர் குறிப்பிட்டவரை நியமிப்பதற்கு கம்பனி வேண்டப்பட்டுள்ளது.

2017 டிசம்பர் 31ம் திகதியில் முடிவுற்ற நிதியியல் ஆண்டிற்கான கணக்காய்வு ஏர்னஸ்ட் யங் பட்டயக் கணக்காளர்களின் உதவியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளருக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் நிதியில் கூற்றுக்களுக்கான விபரிக்கப்பட்ட வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் அறிந்தவரையில் மேலே வெளியிடப்பட்டவை தவிர கணக்காய்வாளர்கள் கம்பனியுடன் ஏதேனும் உறவினை (கணக்காய்வாளர் ஒருவராகத் தவிர) கொண்டிருக்கவில்லை. கணக்காய்வாளர்கள் கம்பனியில் அல்லது அதன் குழுமக் கம்பனிகளில் ஏதேனும் நலனையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்கநெறிக் கோவைகளுக்கு அமைவாக அவர்கள் சுயாதீனமானவர்கள் என்பதை உறுதிசெய்கின்றனர்.

வருடாந்த பொதுக் கூட்டம்

கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டம் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அறையில் 01 மார்ச் 2019ம் திகதி நடைபெறும்.

பணிப்பாளர் சபை சார்பாக



ஜி.எஸ்.விதானகே
தலைவர்



கே.டி.ஆர்.ஒல்கா
பணிப்பாளர்

சபையின் கட்டளைக்கு அமைவாக



கணக்கீட்டு முறைமைகள் செயலக சேவைகள் (தனியார்) லிமிடட்
கம்பனி செயலாளாகள்

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

தொகுப்பு

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள் இருவரை உள்ளடக்குகின்றது.

- திருமதி.கே.டி.ஆர்.ஒல்கா (அமைச்சின் பிரதிநிதி) - தலைவி
- திரு அனுஜ் ஜெயின் (லங்கா இந்திய ஒயில் கம்பனியின் பிரதிநிதி) - அங்கத்தவர்

அரசாங்க வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வு குழுக்களை நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்ட பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறித்துரைத்த கடமைகளின் நோக்கெல்லையினை உள்ளடக்கி கணக்காய்வுக் குழுவின் பொறுப்பானை தயாரிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வுக் குழுவின் பணிகள்

குழு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை உள்ளக கணக்காய்வு செயன்முறை, உள்ளக கட்டுப்பாடுகள் முறைமை என்பவற்றை மேற்பார்வை செய்வதுடன் கம்பனியின் தொழிற்பாடுகள் மீதான சாத்தியமான தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கும் இதனூடாக நிதியியில் கூற்றுக்களில் தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கும் வெளீவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு அத்துடன் அண்மைய தொழில்சார் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிவுறுத்தல்கள் மூலம் எழுப்பப்படும் முக்கிய கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் பிரச்சினைகளை மீளாய்வு செய்கின்றது. இதற்கு புறம்பாக குழுவானது கம்பனி ஆட்பட்டுள்ள இடர் இடரினை தணிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் செயற்திறனை மீளாய்வு செய்கின்றது.

உள்ளக கணக்காய்வுகள்

குழு நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் மற்றும் தயாரிப்புகள் வரை நிதியியல் அறிக்கையிடல் முறைமை அது சொத்துக்களைப் பாதுகாக்கின்றதுடன், பணிப்பாளர்களுக்கு நியாயமான உத்தரவாத்தை வழங்குகின்ற வகையில் வடிவமைக்கப்பட்ட ,வினைத்திறனான நிதியியல் கட்டுப்பாடுகளை அணுகக்கூடிய கணக்கியல் முறைமை மற்றும் உள்ளக கணக்காய்வு முறையின் நோக்கெல்லை மற்றும் பூர்த்திசெய்தல்கள் அமைந்துள்ளதை மீளாய்வு செய்கின்றது. உள்ளக கணக்காய்வு செயற்பாடு கம்பனியுள் நிறுவப்பட்டுள்ளது. பின்னூட்டல் மீளாய்வுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு கணக்காய்வு விதப்புரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்கின்றது.

நியதிச்சட்ட கணக்காய்வுகள்

அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின்படி கணக்காய்வின் தன்மை, அணுகுமுறை மற்றும் நோக்கம் ஆகியவற்றை மீளாய்வு செய்ய இலங்கையின் சட்ட கணக்காய்வாளர்கள், தேசிய கணக்காய்வு அலுவலகம் ஆகியவற்றுடன் குழு விவாதிக்கின்றது. எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் விதமாக நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் இடத்தில் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் ஆகியவை கலந்துரையாடப்படுகின்றன.

கூட்டங்கள்

மீளாய்வுக்கு உட்படுகின்ற ஆண்டின் போது மேலே குறிப்பிட்டவாறு குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை செயலாற்றுவதற்காக 13 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆண்டின் போது கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

தொடர் இல	திகதி	குழுவின் பலம்	பங்குபற்றிய அங்கத்தவர்கள்	அங்கத்தவர்களின் பெயர்
01.	16.02.2017	03	02	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திருமதி. சுதர்மா கருணாரத்ன
02.	10.03.2017	03	02	திருமதி. கே.டி.ஆர்.ஒல்கா திரு. அனுஜ் ஜெயின்

03.	14.08.2017	03	03	திருமதி. கே.டி. ஆர்.ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர
04.	18.08.2017	03	03	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர
05.	07.09.2017	03	02	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின்
06.	15.09.2017	03	03	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர
07.	18.09.2017	03	03	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர
08.	21.09.2017 (LIOC)	03	02	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின்
09.	30.10.2017	03	03	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர
10.	18.11.2017	03	03	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர
11.	24.11.2017	03	03	திருமதி .கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர
12.	05.12.2017	03	03	திருமதி. கே.டி.ஆர்.ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர
13.	14.12.2017	03	03	திருமதி. கே.டி.ஆர். ஒல்கா திரு. அனுஜ் ஜெயின் திரு. நிமல் ஜயசுந்தர

கணக்காய்வு குழுவின் வகிபாகம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு பல தீர்மானங்களையும் விதப்புரைகளையும் உபாயமார்க்க பிரச்சினைகள் மீது வழங்கியது.

- முகாமைத்துவம் கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுடன் இணைந்து உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு முறைமையினை மீயாள்வு செய்தல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான எடுத்துரைப்பினை உறுதி செய்வதற்கு நிதியியல் அறிக்கையினை மேற்பார்வை செய்தல்.
- நட்டங்களை உருவாக்கும் அலகுகளுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக விதப்புரைகளை முன்மொழிவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நட்டங்களுக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்களை அடையாளம் காணுதல் மற்றும் விரிவான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் கற்கைசெய்தல்.
- வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் மற்றும் செயற்பாட்டு திட்டத்தை மீளாய்வு செய்தல்.
- உயர் மட்டத்தின் தொணியிலிருந்து வெளிக்கொணருகின்ற வலுவான மற்றும் செயற்திறன் மிக்க உள்ளக கட்டுப்பாடுகளுக்காக நிறுவனம் முழுவதும்

கடமைப் பொறுப்பொன்றினை உருவாக்குதல்.

- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், ஒழுக்கநெறிகள், ஆர்வமுரண்பாடு போன்றவற்றுடனான இணங்குவித்தல் தொடர்பில் நிறுவனக்கொள்கைகளை மீளாய்வு செய்தல்.
- நிலமைகள், முன்னேற்றங்கள், புதிய அபிவிருத்திகள், பிரச்சினை மிக்க விடயப் பரப்புகள் தொடர்பில் சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் தொடர்ச்சியான தொடர்பினை ஏற்படுத்துதல்.

முடிவுரை

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியியல் கூற்றுகள் வரலாற்று ஆகுசெலவு மாற்றீட்டின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழு, கம்பனியின் விவகாரங்கள் அதன் கொள்கைகளுக்கு அமைவாக முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக கம்பனியின் சொத்துக்கள் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட்டு போதிய பாதுகாப்பளிப்பதற்கு கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு போதியளவான உத்தரவாதத்தை வழங்கியுள்ளது என்பது தொடர்பாக திருப்தியடைகின்றது.



கே.டி.ஆர். ஒல்கா
தலைவி
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

நிதியியல் தகவல்கள்



විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. POE/A/CPSTL/2017/FR/01 මගේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date // செப்ரெம்பர் 2018

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் ரேமினல் லிமிடட்டின் பங்குதாரர்களுக்கு

வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் ரேமினல் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் ரேமினல் (கம்பனி) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் எனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமான கணக்காய்வுச்சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்புடுகின்றன.

(அ) கம்பனியினுடைய நிதிக்கூற்றில் காட்டப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டிய தொகை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட அதனுடன் தொடர்புடைய செலுத்தவேண்டிய தொகை ரூபா. 670.93 மில்லியனில் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது மற்றும் அந்தநாளில் இத்தொகையில் ரூபா 548.66 சச்சரவுத் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 163.62 மில்லியன் ஏற்பாடு மாத்திரம் நட்டக்கழிவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) லங்கா இந்திய ஒயில் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம், நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய தொகை ரூபா 432.77 மில்லியன், நிறுவனத்தின் நிதிக்கூற்றின் பிரகாரம் அதனுடன் தொடர்புடைய தொகை ரூபா 475.40 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. ஆகவே இந்த இரண்டு மீதிகளுக்குமிடையில் ரூபா 42.63 மில்லியன் கணக்கிணக்கம் செய்யப்படாத மீதி ஒன்ற அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களில் ரூபா 142.92 மில்லியனுக்கு உருவாக்கப்பட்ட இருப்பு உருப்படிகளிற்கான ஏற்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை அல்லது கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஈ) கம்பனியினுடைய நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட வருமானவரி மற்றும் பெறுமதிசேர்வரி கொடுக்கப்படவேண்டிய மீதிகள் மற்றும் பெறுமதிசேர் வரி பெறப்படவேண்டிய மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் வருமானவரித் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் பதிவேடுகளில் காட்டப்பட்ட அதனுடன் தொடர்புடைய ரூபா.436.78 மில்லியன் தொகைகளில் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. ஆகவேதான் கணக்காய்வில் இந்த மீதிகளின் சரியானதன்மை, பூரணத்துவம் மற்றும் இருக்கும்தன்மை சந்தேகத்திலிருந்தது.

(உ) மேலதிக கொடுப்பனவின் மீளப்பெறுகைக்கான உழைக்கும் போதானவரி மற்றும் பெறுமதிசேர் உள்ளீட்டுவரி முறையே ரூபா 6.8 மில்லியன் மற்றும் 8.06 மில்லியன் தொகைகள் முறையே 2008 மற்றும் 2010 ம் ஆண்டுகளிலிருந்து இவைகள் மீளப் பெறப்படாமலிருந்தமையால் சந்தேகம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் இவைகள் தொடர்பான ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செலுத்தவேண்டிய பிடித்துவைத்தல் வரி மற்றும் பெறுமதிசேர் வெளியீட்டு வரியினுடைய நம்பகத்தன்மை முறையே ரூபா 19.09 மில்லியன் மற்றும் 13.91 மில்லியனில் சந்தேகம் ஏற்பட்டது இவை தொடர்ச்சியாக ஆண்டுதோறும் நிதிக்கூற்றுக்களில் நீண்டகாலமாக தீர்வு இல்லாமல் முற்கொணரப்பட்டது.

(எ) எல்கேஏஎஸ் (LKAS) 16 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியால் முழுமையாக பெறுமானத்தேய்வடைந்த அண்ணளவாக ரூபா 5,045 மில்லியன் கிரயமான சொத்துக்களின் ஆயுட்காலம் தொடர்ச்சியாக மீள்மதிப்பீடு செய்யப்படாமல் உபயோகிப்பதுடன் அவைகள் கணக்கிடப்படுகின்றன. மேலும், கம்பனி தொடக்கத்திலிருந்து அதன் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை மற்றும் இந்நோக்கத்திற்காக பொருத்தமான மறுமதிப்பீட்டுக் கொள்கை ஸ்தாபிக்கப்படவில்லை. எனவே நிதிக்கூற்றில் காட்டப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்கள் அத்தகைய சொத்துக்களின் நியாயமான பெறுமதிகளை பிரதிபலிக்கவில்லை.

(ஏ) எல்கேஏஎஸ் (LKAS) 08 இன் படி நிதிக்கூற்றுக்களில் முன்னைய வருடம் சீர்செய்யப்படவேண்டிய ரூபா 36.3 மில்லியனைக் கொண்ட நான்கு கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வாண்டில் தவறான முறையில் கொடுக்கல் வாங்கல்களாக அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் பகிரப்படாத இலாபம் ரூபா 19.12 மில்லியனால் முறையே கூட்டி மற்றும் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஐ) முயற்சிவள திட்டமிடல் முறைமையில் (ஈஆர்பி) பாரிய தொகையுடன் கூடிய 250 ற்கும் மேலான வகையான இருப்புத் தொகுதிகள் உள்ளடக்கப்பட்டடிருந்தது. அதாவது இந்த இருப்பு தொகுதிகளின் பெறுமதி கம்பனியினடைய ளுயீ முறைமைகளில் பதிவுசெய்யப்படவில்லை/ எனவே இருப்பு தொகுதிகளின் பூரணத்துவும் மற்றும் பெறுமதியிடலின் சரியானதன்மை கணக்காய்வில் நம்பமுடியாதுள்ளது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் ரேமினல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன எனபது எனது அபிப்பிராயமாகும்.

2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 ம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ) எனது அபிப்பிரயாத்தில்

- கணக்காய்விற்கு அவசியமானதும், சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுகின்றன என்பதும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்

அரசியலமைப்பின் 154(6) சரத்தின் பிரகாரம் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் எனது அறிக்கை பாராளுமன்றத்திற்கு உரிய முறையில் சமர்ப்பிக்கப்படும்.

எச். எம் காமினி விஜயசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வருமானக் கூற்று

டிசெம்பர் 31அல் முடிவுற்ற ஆண்டு	குறிப்பு	2017 ரூபா	2016 ரூபா
சொத்துகள்			
நடைமுறையற்ற சொத்துகள்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	10	16,754,748,458	16,799,855,205
அருவச் சொத்துகள்	11	277,797	7,609,019
ஏனைய நிதியியல் சொத்துகள்	14.1	444,255,366	441,724,050
		17,199,281,621	17,249,188,274
நடைமுறை சொத்துகள்			
பொருட்பதிவேடு	12	407,496,049	413,049,408
வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள்	13	9,071,571,994	6,021,067,151
எனைய நிதியியல் சொத்துகள்	14.2	1,838,973,439	1,920,169,313
காசும், காசுக்கு சமமானவையும்	15.1	1,474,120,011	2,455,417,182
		12,792,161,492	10,809,703,053
மொத்த சொத்துகள்		29,991,443,113	28,058,891,327
பங்குரிமையும் பொறுப்புகளும்			
மூலதன ஒதுக்குகளும்			
குறிக்கப்பட்ட மூலதனம்	16	7,500,000,000	7,500,000,000
மூலதன ஒதுக்குகள்	16.1	979,000,000	979,000,000
பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு		16,684,197,986	14,371,811,934
மொத்தப் பங்குரிமை		25,163,197,986	22,850,811,934
நடைமுறையற்ற பொறுப்புகள்			
வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு	17	1,473,989,898	1,234,070,802
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்	8.1	1,017,152,375	1,005,757,215
வட்டியுடனான கடன்களும் கடன்பாடுகளும்	18	-	911,050,854
		2,491,142,273	3,150,878,871
நடைமுறை பொறுப்புகள்			
வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு	19	1,845,584,533	1,311,033,498
வட்டியுடனான கடன்களும் கடப்பாடுகளும்	18	-	599,114,311
கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரி		491,518,321	147,052,713
மொத்த பொறுப்புகள்		2,337,102,854	2,057,200,522
மொத்த பங்குரிமையும் பொறுப்புகளும்		29,991,443,113	28,058,891,327

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இந்த திதியியல் கூற்றுகள் இணங்குகின்றன என சான்றுபடுத்துகின்றேன்.

நிதி முகாமையாளர்

இந்நிதியில் கூற்றுகளை தயாரித்து எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்புடமையாகும். பணிப்பாளர் சபைக்காக அதன் சார்பில் ஒப்பமிட்டது.

பணிப்பாளர் **தலைவர்**

75 தொடக்கம் 103 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியில் கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

07 மார்ச்சு 2018
கொழும்பு

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று

டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு	குறிப்பு	2017 ரூபா	2016 ரூபா
வருமானம்	3	14,176,146,910	12,663,444,509
நேரடிச் செலவுகள்		(7,400,983,212)	(6,668,940,700)
மொத்த இலாபம்		6,775,163,699	5,994,503,809
ஏனைய தொழிற்படுதல் வருமானம்	4	457,796,444	483,200,474
நிருவாகச் செலவுகள்		(4,025,018,806)	(4,071,225,562)
தொழிற்படுத்தல் இலாபம்		3,207,941,337	2,406,478,721
நிதி வருமானம்	5.1	189,440,805	90,369,796
நிதிச் செலவு	5.2	(124,072,738)	(166,775,397)
வரிக்கு முந்திய இலாபம்	6	3,273,309,403	2,330,073,120
வருமான வரிச் செலவு	7.1	(473,737,588)	(591,443,694)
ஆண்டுக்கான இலாபம்		2,799,571,815	1,738,629,426
அதனை தொடர்ந்த காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படாத ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்			
வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகள் மீதான காப்பு கணிப்பீட்டு இலாபம்	17	(94,946,584)	243,863,733
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் மீதான வரி	8.1	12,760,821	(33,409,331)
ஆண்டுக்கான வரியினைக் கழித்து மொத்த அனைத்தையம் உள்ளடக்கிய வருமானம்		(82,185,763)	210,454,402
ஆண்டுக்கான வரியினைக் கழித்து மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்		2,717,386,052	1,949,083,828
பங்கொன்றுக்கான உழைப்பு	9.2	3.73	2.32

75 தொடக்கம் 103 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியில் கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று

2017 டிசம்பர் 31 அன்று அன்றுள்ளவாறு	குறிக்கப்பட்ட மூலதனம் ரூபா	மூலதன ஒதுக்கு ரூபா	பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு ரூபா	மொத்தம் ரூபா
2016 சனவரி 01இல் மீதி	7,500,000,000	979,000,000	12,910,228,106	21,389,228,106
ஆண்டுக்கான இலாபம்	-	-	1,738,629,426	1,738,629,426
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	-	-	210,454,402	210,454,402
மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	-	-	1,949,083,828	1,949,083,828
கொடுப்பனவு செய்யப்பட் பங்கிலாபம்	-	-	(487,500,000)	(487,500,000)
2016 டிசம்பர் 31இல் மீதி	7,500,000,000	979,000,000	14,371,811,934	22,850,811,934
ஆண்டுக்கான இலாபம்	-	-	2,799,571,815	2,799,571,815
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	-	-	(82,185,763)	(82,185,763)
மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	-	-	2,717,386,052	2,717,386,052
கொடுப்பனவு செய்யப்பட்ட பங்கிலாபம்	-	-	(405,000,000)	(405,000,000)
2017 டிசம்பர் 31இல் மீதி	7,500,000,000	979,000,000	16,684,197,986	25,163,197,986

75 தொடக்கம் 103 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியில் கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று

2017 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு	குறிப்பு	2017 ரூபா	2016 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து/பயன்படுத்தப்பட்ட			
வருமான வரிக்கு முன்னர் இலாபம்		3,273,309,403	2,330,073,120
சீர்படுத்தல்கள்			
நிதி வருமானம்	5.1	(189,440,805)	(90,369,796)
நிதிச் செலவுகள்	5.2	124,072,738	166,775,397
ஊழியர் கடன் மதிப்ப குறைவிற்கான ஒதுக்கீடு		(2,304,574)	2,203,697
பொருட்பதிவேடு மற்றும் ஏனைய வர்த்தக பெறத்தக்கவை மதிப்பு குறைப்பிற்கான ஒதுக்கீடு		9,792,534	(41,257,622)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண விற்பனை மீதான நட்டம்/(இலாபம்)	4	(3,594,938)	(51,245,219)
வரையறை செய்யப்பட்ட ஏற்பாடு		242,188,768	204,224,090
பெறுமானத் தேய்வு	10.2	878,355,612	800,940,058
அருவச் சொத்து பெறுமதிக் குறைப்பு	11.2	7,331,222	9,740,642
பணியாற்று மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படுத்தல்		4,339,709,960	3,331,084,367
பதிவேட்டுப் பொருட்களில் (அதிகரிப்பு)/குறைவு		(4,640,443)	(33,513,691)
வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/குறைவு		(3,050,103,575)	1,172,661,197
ஏனைய நிதியியல் சொத்துகளில் (அதிகரிப்பு)/குறைவு		80,969,132	(79,064,121)
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு/(குறைவு)		534,551,035	(338,412,405)
தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) காசு		1,900,486,109	4,052,755,347
செலுத்தப்பட்ட வருமான வரி		(105,115,999)	(136,988,654)
செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள்	5.2	(124,072,738)	(174,930,901)
செலுத்தப்பட்ட வரையறை செய்யப்பட்ட நலன்	17	(97,216,256)	(111,923,886)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்)		1,574,081,115	3,628,911,907
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல்	10.1	(833,289,951)	(913,411,535)
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல்		3,636,025	51,271,409
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் இருந்து நிதி வருமானம்	5.1	189,440,805	90,369,796
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்)		(640,213,121)	(771,770,330)
நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்கள்			
கடன்பாடுகளை மீளச் செலுத்தல்		(1,398,850,854)	(773,504,627)
செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்		(405,000,000)	(487,500,000)
நிதியளித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட/(பயன்படுத்தப்பட் தேறிய காசுப் பாய்ச்சல்)		(1,803,850,854)	(1,261,004,627)
காசு மற்றும் காசுக்கு சகமானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு)		(869,982,860)	1,596,136,950
ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும்	15.2	2,344,102,871	747,965,921
ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்	15.2	1,474,120,011	2,344,102,871

75 தொடக்கம் 103 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியில் கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

2017 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு

1. நிறுவனத் தகவல்

1.1 தகவல்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் கம்பனி நிறுவனமானது 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஒக்டோபர் 8 ஆம் திகதியன்று கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றாவதுடன் இலங்கையில் வாழிடத்தைக் கொண்டுள்ளது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் எரிபொருள் நிலையம் கொலன்னாவ என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

1.2 முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

ஆண்டின்போது கம்பனியின் முதன்மைச் செயற்பாடுகளானவை பெற்றோலியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியனவாயிருந்தன.

1.3 தாய்க்கம்பனியும் இறுதியாக கட்டுப்படுத்துகின்ற தரப்பும்

பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின்படி கம்பனியின் பொறுப்பேற்கின்ற தாய்க் கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமாகும்.

1.4 வெளியிடுவதற்கான அங்கீகாரத் திகதி

2017 டிசம்பர் 31இல் ஆண்டுக்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட்டின் நிதியியல் கூற்றுகள் 2018 செப்ரெம்பர் 7ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றுக்கு அமைவாக வெளியிடுவதற்காக அங்கீகாரமளிக்கப்பட்டது.

2. தயாரித்தல் அடிப்படை

2.1 இணங்குவித்தல் கூற்று

நிதியியல் நிலைக்கூற்று அனைத்துமடங்கிய வருமானக்கூற்றுபங்குரிமை மாற்றக்கூற்று காசுப்பாய்ச்சல்கள் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற கம்பனியின் நிதியியற் கூற்றுகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் எடுத்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) இற்கமைவாகவும் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.1.1 அளவீட்டு அடிப்படை

கம்பனியின் நிதியியற் கூற்றுக்களானவை நிதியியல் நிலைக்கூற்றின் உள்ள பின்வரும் விடயங்களுக்கானவை தவிர வரலாற்றுக் கிரய அடிப்படை மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட நலக்கடப்பாடுகளுக்கான பொறுப்பானது காப்பீட்டு கணிப்பீட்டு அடிப்படையில் விலைமதிப்பீடு செய்யப்பட்டு தற்போதைய பெறுமதியில் இணங்காணப்பட்டுள்ளது.

2.1.2 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றுடன் தொடருவதற்கான கம்பனியின் இயலுமை பற்றிய மதிப்பீடொன்றினைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்திற்காக தொழிலினைத் தொடருவதற்கு கம்பனி மூலவளங்களைக் கொண்டுள்ளது என திருப்தியடைகின்றனர். கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலமை மீது ஏதேனும் குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் முக்கிய நிச்சயின்மைகள் பற்றி சபை அறிந்திருக்கவில்லை. அத்துடன் கம்பனித் தொழிற்பாடுகளை தீர்த்துக்கட்டுவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ அவர்கள் உத்தேசிக்கவில்லை. எனவே நிதியியல் கூற்றுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயம்

நிதியியல் கூற்றுகள், இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும்.

2.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியினால் ஒரேமாதிரியாக பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுக்கு இசைவானதாகும். முன்னைய ஆண்டின் தொகைகளும் சொற்றொடர்களும் நடைமுறை எடுத்துரைப்புக்கு இணங்குவதற்கு அவசியப்படுகின்ற போது மீள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விவரங்கள் நிதியியல் 24 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

2.4 முக்கிய கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக கம்பனியின் நிதியியல் கூற்றுகளின் எடுத்துரைப்பானது கணக்கீட்டுக் கொள்கை பிரயோகத்தினையும் சொத்துகளின் பொறுப்புகளின் வருமானத்தின் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கின்ற தீர்வுகள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை ஆக்குவதற்கு முகாமைத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்றது. இவ்வூகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமின்மைகள் எதிர்காலங்களில் சொத்துகளினது அல்லது பொறுப்புகளினது கொண்டுசெல்லும் தொகைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற முக்கிய சீராக்கமொன்றினை வேண்டுகின்ற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

மதிப்பீடுகளும் ஊகங்களும் முன்னெடுக்கப்படும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீட்டுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்படுகின்ற காலத்திலும் அத்துடன் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்காலத்திலும் இனங்காணப்படுகின்றன.

கம்பனியின் நிதியியல் கூற்றுகளில் தொகைகள் மீது மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளைப் பிரயோகிப்பதில் மதிப்பீடுகள், நிச்சயின்மை மற்றும் முக்கிய தீர்வுகள் பற்றிய மிக முக்கிய விடயப்பரப்புக்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

(அ) ஊழியர் நலப்பொறுப்பு

வரையறை செய்யப்பட்ட நலத்திட்டங்கள் - பணிக்கொடையின் செலவும் அதேபோன்று தற்காலப் பெறுமதியும் காப்பு கணிப்பீட்டு விலைமதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. காப்பு கணிப்பீட்டு பெறுமதிப்பீடானது கழிவு வீதங்கள், எதிர்காலச் சம்பள அதிகரிப்புகள் மற்றும் ஏனைய முக்கிய தொடர்புடைய தரவுகள் பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்துகின்றது. ஊழியர் நலன்களின் நீண்டகாலத் தன்மையின் விளைவாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைக்கு உட்படுத்துகின்றன. மேற்குறித்த முக்கிய ஊகங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினால் கொண்டு

நடாத்தப்பட்டவாறான அவற்றின் உணர்வுத்தன்மை பகுப்பாய்வுடன் சேர்த்து ஊகங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் உணர்வு பகுப்பாய்வுகளின் பெறுபேறுகள் என்பன 17.7 ஆம் மற்றும் 17.4 ஆம் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

(ஆ) வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவைகளின் மதிப்பிழப்பு

வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை பெறுமதி இழந்துள்ளன என்ற பொருமையான சான்றுவுள்ளதா என்பது பற்றி நிதியில் நிலைக்கூற்றுத் திகதியில் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. தற்போதுள்ள கிடைக்கப்பெறத்தக்கவைகளின் நடைமுறை நிலைமை மற்றும் வரலாற்று ரீதியான சேகரிப்பு அனுபவம் என்பவற்றின் மீளாய்வொன்றின் அடிப்படையில் மதிப்பிழப்பு நட்டங்கள் கணிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் உள்ளபடியான மதிப்பிழப்புகளை பிரதிபலிக்கும்படியாக அத்தகைய ஏற்பாடுகள் காலமுறையாக சீர்செய்யப்படுகின்றன. வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை மீதான மதிப்பிழப்பு நட்டம் 2.5.11 மற்றும் 13 ஆம் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(இ) வருமான வரியும் பிற்போடப்பட்ட வரியும்

கம்பனி, வருமான வரிக்குட்பட்டதாகும். வருமான வரிக்கான ஏற்பாடுகளைத் நிர்ணயிப்பதில் முக்கிய தீர்வு தேவைப்படுகின்றது. இறுதி வரி நிர்ணயம் நிச்சயமற்றதாகவுள்ள பல கொடுக்கல்வாங்கல்களும் கணிப்புக்களும் காணப்படுகின்றன. மேலதிக வரிகள் செலுத்தப்பட வேண்டலாம் என்ற மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட வரி தொடர்பிலான பொறுப்புக்களை நிறுவனம் இனங்காண்கின்றது.

2.5 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

2.5.1 வெளிநாட்டு நாணய மாற்றங்கள்

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும். வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல்வாங்கல்கள், கொடுக்கல்வாங்கல்கள் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய வீதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் மாற்றம் செய்யப்பட்ட நாணயச் சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய மாற்றுவீதத்தில் மீள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து வேறுபாடுகளும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றில் எடுத்துரைக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்று கிரய நியதிகளில் அளவிடப்படுகின்ற நாணயமல்லாத விடயங்கள், ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயமல்லாத விடயங்கள் நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து நாணய மாற்று வீதங்களைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

2.5.2 வருமானத்தினை இனங்காணுதல்

பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உட்பாயும் மற்றும் வருமானம் நம்பகமாக அளவிடப்படக்கூடியதாகவிருக்கும் என்ற நிகழ்வுள்ளது என்ற ரீதியில் வருமானம் இனங்காணப்படுகின்றது. வருமானமானது கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கப்பெறத்தக்க பிரதிபலன்களின் வர்த்தக கழிவுகள் மீளளித்தல்கள், தள்ளுபடிகள் மற்றும் விற்பனை வரிகள் (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேச நிர்மாண வரி ஆகியவற்றை கழித்து நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்தினுள் பாயும் அத்துடன் கீழே விவரிக்கப்பட்டவாறு கம்பனியின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் குறித்துரைத்த மூலப்பிரமாணம் நிறைவுசெய்யப்படுகின்ற நிகழ்வுள்ளது என்ற அடிப்படையில் வருமானம் நம்பகமான அளவிடப்படக்கூடியதாகவுள்ளபோது கம்பனி வருமானத்தினை இனங்காணுகின்றது. விற்பனையுடன் தொடர்புடைய அனைத்து எதிர்பாராச் செலவுகளும் தீர்க்கப்படும் வரை வருமானம் நம்பத்தகுந்தவாறு அளவிடத்தக்கதாக கருதப்படவில்லை.

அ) சேவைகளை வழங்குதல்

சேவைகளை வழங்குவதில் இருந்தான வருமானமானது சேவைகள் வழங்கப்படுகின்ற அல்லது செயலாற்றப்படுகின்ற கணக்கீட்டுக் காலத்தில் இனங்காணப்படுகின்றது.

முனையக் கட்டணம்

2003 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லங்கா இந்தியன் ஓயில் கம்பனி மற்றும் திறைசேரித் திணைக்களம் என்பனவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டு அதனைத்தொடர்ந்து 2011 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பொது பயன்பாட்டாளர் உடன்படிக்கைக்கு அமைவாக சந்தைப்படுத்தும் கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படுகின்ற தொழிற்படுத்தல் செவுகளை இது உள்ளடக்குகின்றது. இது, அவர்களுக்கு உரித்தான பெற்றோலிய உற்பத்திகளை மாற்றல் செய்கின்றபோது இனங்காணப்படுகின்றது. முனைய கட்டணமானது விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக அளவிடப்படுகின்றது.

தொழிற்படுத்தல் இலாபம்

தொழிற்படுத்தல் இலாபமானது விலைகுறித்தல் முன்கூட்டி நிர்ணயிக்கப்படுகின்ற வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக தொழிற்படுத்தல் இலாபம் அளவிடப்படுகின்றது.

போக்குவரத்து வருமானம்

புகையிரத கொள்கலன், குழாய்த் தொகுதி பவுசர் வணிகர்கள் மீது ஏற்பட்ட போக்குவரத்து செலவினம் அறவிடுகின்றது. வருமானமானது லீட்டர் அளவு மற்றும் பயணம் செய்த தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

கடன் வட்டி

கடன் வட்டியானது கம்பனியினால் செலுத்தப்படும் கடன் வட்டி அறவிடுவதில் கணிக்கப்படுகின்ற விலைகுறித்தல் சூத்திரத்தில் முன்கூட்டி நிர்ணயிக்கப்படும் வீதத்தில் இனங்காணப்படுகின்றது. கடன் வட்டி வருமானமானது விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக அளவிடப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 1 " நிதிக்கூற்றுகளை வெளிப்படுத்தல்" 31 டிசம்பர் 2017ம் திகதி முடிவடைந்த நிதி ஆண்டுக்கான வருமானக் கூற்றின் ஒப்பீட்டுத் தொகைகளின் மீள்வகைப்படுத்தல்.

கீழ்வரும் அட்டவணை, 31 டிசம்பர் 2017ம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றினையும் நடப்பு வருடத்தின் வெளிப்படுத்தலுடன் கடந்த வருடத்திற்கான மீள்வனைப்படுத்தலை ஒப்பீட்டை உறுதிப்படுத்தும் சிலோன் பெற்றோலியம் ஸ்ரோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் நிதிக்கூற்றுகளை வெளிப்படுத்துதலுக்கு அமைவாக மீள்வகைப்படுத்தளை வெளிப்படுத்துகின்றது.

	குறிப்பு	2016 ரூபா	மீள்வகைப்படுத்தல்	மீளமைக்கப்பட்டவாறு
வருமானம்	3	12,663,444,509	-	12,663,444,509
நேரடி செலவுகள்		(6,661,689,016)	(7,251,684)	(6,668,940,700)
மொத்த இலாபம்		6,001,755,493	-	5,994,503,809
எனைய தொழிற்பாட்டு வருமானம்	4	483,200,474	-	483,200,474
நிறைவேற்றுச் செலவுகள்		(4,071,225,562)		(4,071,225,562)
விற்பனை மற்றும் விநியோகித்தல் செலவுகள்		(7,251,684)	7,251,684	-
தொழிற்பாட்டு இலாபம்		**2,406,478,721**		**2,406,478,721**

* சிலோன் பெற்றோலிய ஸ்ரோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாத போதிலும் சிறந்த அறிக்கையிடலுக்கான விற்பனை மற்றும் விநியோகித்தல் செலவுகள் நேரடிச் செலவுக்காக மீள்வகைப்படுத்தப்பட்டவாறு.

ஆ) நிதி வருமானம்

நிதி வருமானது விளைவு வட்டி முறையினை பயன்படுத்தி திரளுகின்ற வட்டியாக இனங்காணப்படுகின்றது

இ) ஏனையவை

ஏனைய வருமானது திரளுகின்ற அடிப்படையொன்றில் இனங்காணப் படுகின்றது.

முதலீடுகள் உள்ளடங்கலாக ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அத்துடன் ஏனைய நடைமுறையற்ற சொத்துகளின் விற்பனையில் இருந்து தோற்றுகின்ற தன்மையிலான வருமானம் ஒன்றின், தேறிய பெறுகைகள் அல்லது இழப்புகள் சொத்துகள் கொண்டுள்ள தொகை மற்றும் தொடர்புடைய விற்பனை செலவுகளை விற்று அகற்றுவதன் மீதான பெறுகைகளில் இருந்து கழித்து வருமானக்கூற்றில் கணக்கிடப்படுகின்றது.

பிரதானமாக வருமானம் ஈட்டுகின்ற செயற்பாடுகளுக்கு இடைநேர்விளைவான செயற்பாடுகளில் இருந்து தோன்றுகின்ற அத்துடன் முக்கியத்துவம் அற்ற அதனை ஒத்த கொடுக்கல் வாங்கல்களில் குழுவொன்றில் இருந்து தோன்றுகின்ற பெறுகைகள் அல்லது இழப்புகள் ஒன்றுசேர்க்கப்பட்டு தேறிய அடிப்படை ஒன்றில் அறிக்கையிடப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.5.3 செலவினத்தை இனங்காணுதல்

வியாபாரத்தினை தொழிற்படுத்துவதில் அத்துடன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை வினைத்திறன் மிக்க விதத்தில் பேணுவதில் ஏற்படுகின்ற அனைத்து செலவினமும் காலத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றது.

2.5.4 வரி வீதிப்பு

காலத்திற்கான வரிச்செலவானது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. வரியானது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படும் விடயங்களுடன் அது தொடரப்படுகின்றது என்ற அடிப்படையிலானவை தவிர ஆண்டுக்கான இலாபத்தில் இனங்காணப்படுகின்றது. இவ்விடயத்தில் வரியானது முறையே ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படுகின்றது.

நடைமுறை வரிகள்

நடைமுறை மற்றும் முன்னைய காலங்களுக்கான நடைமுறை வருமான வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் வரிவிதிப்பு அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்பட்ட அல்லது கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் அளவிடப்படுகின்றது. தொகையினை கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் வரி வீதங்களுக்கு வரிச்சட்டங்களுக்கு அறிக்கையிடும் திகதியன்று இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்டுள்ளவையாகும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதியியல் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு வருமான மற்றும் செலவின கூறுகளை அடிப்படையாக கொண்டதுடன் தொடர்புடைய வரிச்சட்டவாக்கத்தினை ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்படுகின்றது.

பங்குரிமையில் நேரடியாக இனங்காணப்படுகின்ற விடயங்களுடன் தொடர்புடைய நடப்பு வரியானது பங்குரிமையில் இனங்காணப்படுவதுடன் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்படுவதில்லை.

பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

நிதியியல் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் நோக்கங்களுக்காக அவை கொண்டுள்ள தொகை என்பவற்றிக்கிடையில் அறிக்கையிடும் திகதியில் தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறையினை பயன்படுத்தி பிற்போடப்பட்டு வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்புகளானவை வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனங்காணுதலில் இருந்து தோன்றுகின்ற கொடுக்கல் வாங்கல் நேரத்தில் கணக்கிட்டு இலாபத்தினையோ அன்றில் வரி விதிக்கத்தக்க இலாபத்தினையோ அல்லது நட்டத்தினையோ பாதிக்காத பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்பு உள்ளவை தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்குமென இனங்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துக்களானவை கழிக்கத்தக்க வேறுபாடுகளுக்கு எதிராக வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்ற நிகழ்வின் அடிப்படையில் இத்துடன் வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனங்காணுதலில் இருந்து தோன்றுகின்ற தற்காலிக வேறுபாட்டுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து காணப்படுகின்றவிடத்து அத்துடன் கொடுக்கல் வாங்கல் நேரத்தில் கணக்கீட்டு இலாபத்தினையோ அன்றி வரிவிதிக்கத்தக்க இலாபம்

அல்லது நட்டத்தையோ பாதிக்காத பயன்படுத்தப்படாத வரி சொத்துக்களினதும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளினதும் முன்கொண்டு செல்லும் தொகை பயன்படுத்த கூடியதாக உள்ளபோது அனைத்து கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கும் இனங்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து ஒன்றின் கொண்டுசெல்லும் தொகையானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பிற்போடப்பட்ட வருமானவரிச் சொத்தின் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியை பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு போதிய வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்ற நிகழ்வு இனியேனும் இல்லையென்ற அடிப்படையில் குறைக்கப்படுகிறது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது பொருண்மையாக சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களை (அத்துடன் வரிச் சட்டங்கள்) அடிப்படையாகக்கொண்டு சொத்து தேறுகின்றபோது அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்றபோது ஆண்டுக்காக பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன.

விற்பனைகள் வரி (பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் தேச நிர்மாண வரியும்)

வருவாய்கள் செலவுகள் மற்றும் சொத்துகள் என்பன வரிவிதிப்பு அதிகாரிகளிடமிருந்து அறிவிடப்பட முடியாதுள்ள சொத்துகள் அல்லது சேவை கொள்வனவொன்றின் மீது ஏற்பட்ட விற்பனைகள் வரிகள் தவிர விற்பனை வரித்தொகையின் கழித்து இனங்காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விற்பனை வரியானது ஏற்புடையவாறு சொத்துச் செலவின் பாகமொன்றாக அல்லது செலவு விடையங்களின் பாகமொன்றாக அத்துடன் விற்பனை வரிகள் உள்ளடக்கப்படுகின்றது.

2.5.5 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப இனங்காணலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

2.5.5.1 நிதியியல் சொத்துகள்

கம்பனியின் நிதிச்சொத்துக்கலானவை காசு மற்றும் குறுகியகால வைப்புகள் வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கத்தவை அத்துடன் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து நிலுவைத் தொகை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்ககையினுள் நிதியில் சொத்துக்கலானவை இலாபம் அல்லது நட்டமூடாக நிதிசார் பெறுமதியில் நிதியில் சொத்துகள் கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவை முதிர்விற்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள் விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துகள் அல்லது பொருத்தமான விதத்தில் விளைவுமிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக பெயர் குறிக்கப்பட்ட பெறுமதிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் சொத்துகளை வகைப்படுத்துவதனை ஆரம்ப இனங்காணுதலில் நிர்ணயிக்கின்றது.

இலாபம் அல்லது நட்டமூடாக நியாயப்பெறுமதியில் அல்லாத சொத்துகள் தொடர்பில் நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல்களுடன் சேர்ந்தது அனைத்து நிதியியல் சொத்துகளும் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றது.

சந்தையில் (கிரமமான வணிக வழிமுறை) ஒழுங்குவிதியினால் அல்லது சமவாயத்தினால் நிறுவப்படுகின்ற காலச் சட்டகம் ஒன்றினுள் சொத்துகளின் ஒப்படைப்பினை தேவைப்படுத்துகின்ற நிதி.

தொடர்கின்ற அளவீடுகள்

நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் மீது சார்ந்துள்ள அவற்றின் அதனை தொடர்ந்த அளவீடானது பின்வருமாறு:

அ) கடன்களும் கிடைக்கத்தக்கவையும்

கடன்களும் கிடைக்கத்தக்கவையும் செயற்பாடுமிக்க சந்தை ஒன்றில் விலைக்குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதி அல்லாத நிதியியல் சொத்துக்களாகும். அத்தகைய நிதியியல் சொத்துகள் ஆரம்ப அளவீட்டின் பின்னர் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி மதிப்பிழப்பினை கழித்து பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் அதனைத் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுமதி குறைக்கப்பட்ட செலவானது கையகப்படுத்தல் மீதான எதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீத முறையின் மிக முக்கிய பாகமொன்றான கட்டணங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பிழப்பில் இருந்து தோன்றுகின்ற நட்டங்கள் நிதிச் செலவுகளில் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

இனங்காணாமை

நிதியியல் சொத்து ஒன்று (அல்லது பொருத்தமான விடத்து நிதியியல் சொத்தொன்றின் பாகமொன்று அல்லது அதனை ஒத்த நிதியியல் சொத்துகளின் குழும பாகம்) பின்வரும் சந்தர்ப்பங்களில் இனங்காணப்படுவதில்லை.

- சொத்தில் இருந்தான காசுப்பாய்ச்சல் கிடைப்பதற்கான உரிமைகள் காலாவதியாதல்
- கடந்துசெல்லல் ஒப்பந்தம் ஒன்றின் கீழ் முக்கிய தாமதம் இன்றி மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கான சொத்தில் இருந்து காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கு அல்லது கிடைக்கப்பெற்ற காசுப்பாய்ச்சல்களை முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடு ஒன்றினை ஊகித்துள்ள போது கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ளது. அத்துடன் ஒன்றில் (அ) சொத்தின் கணிசமாக அனைத்து இட நேர்வுகளையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி மாற்றம் செய்து இருக்கின்றது. (ஆ) சொத்தொன்றின் கணிசமாக அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி இடமாற்றவோ அன்றில் பிடித்துவைத்தில்லாமல் ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றம் செய்துள்ளது.

சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ள போது அல்லது கடந்துசெல்லல் ஒழுங்கொன்றினை கைச்சாத்திட்டுள்ள போது அத்துடன் சொத்தினது கணிசமான அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் மாற்றம் செய்தோ அன்றில் பிடித்து வைத்தோ அன்றி கட்டுப்படுத்தலினை மாற்றம் செய்தோ இல்லாத போது சொத்தானது கம்பனி அதில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது என்ற ரீதியில் இனம்காணப்படுகின்றது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் கம்பனியானது இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் இனங்காண்கின்றது. மாற்றம் செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் கம்பனி பிடித்துவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையொன்றில் அளவிடப்படுகின்றது.

மாற்றம் செய்யப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதமொன்றின் வடிவினை பெற்றுக்கொள்கின்ற தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் அடிப்படை கொண்டு செல்லும் தொகையின் குறைவான மட்டத்தில் அளவிடப்படுவதுடன் மீள்கொடுப்பனவிற்காக கம்பனி வேண்டப்படக்கூடிய ஆகக்கூடிய பிரதிபலன் தொகையிலும் அளவிடப்படுகின்றது.

நிதியியல் சொத்துக்களின் மறுமதிப்பிழப்பு

நிதியியல் சொத்தொன்று அல்லது நிதியியல் சொத்துகளின் குழுமமொன்று சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் இடம்பெற்ற ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக (ஏற்பட்ட இழப்பு) மற்றும் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச்சொத்தின் அல்லது நிதிச் சொத்துக்களின் குழுமத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் மீது அவ்விழப்பு நிகழ்வு தாக்கமொன்றினைக் கொண்டுள்ளது என பொருண்மையான மதிப்பிழப்புச் சான்று காணப்படுமெனில் அதன் போது மாத்திரம் மதிப்பிழந்ததாக கருதப்படுகின்றது.

மதிப்பிழப்பு சான்றானது கடன்படுநர் அல்லது கடன்படுநர் குழுமமொன்று குறிப்பிடத்தக்க நிதிக்கஸ்டத்தினை அனுபவிக்கின்ற தவணை தவறுகின்ற அல்லது வட்டியினை அல்லது முதன்மை கொடுப்பனவுகளை தவணை தவறுகின்ற அல்லது கடமை தவறுகின்ற அவர்கள் வங்குரோத்து அடைகின்ற அல்லது ஏதேனும் நிதியியல் மறுசீரமைப்பு நிலையடைகின்ற மாற்றம் அடைகின்ற குறிகாட்டிகளையும் தவணை தவறுவதன் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நிலுவைகள் அல்லது பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் அளவிடப்பட்ட வீழ்ச்சியொன்று காணப்படுகின்றது என்ற அவதானிக்கத்தக்க தரவுக்குறிக்காட்டிகள் காணப்படுகின்றவற்றை உள்டக்கலாம்.

பெறுமதி குறைப்பில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துகள்

பெறுமதி குறைப்புச் செலவில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்களுக்காக கம்பனியானது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமுடைய அல்லது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமற்ற நிதியியல் சொத்துக்களுக்கான கூட்டான மதிப்பிழப்பு காணப்படுவதற்கு மெய்யான சான்றுதழ் உள்ளதா என்பதனை முதலில் மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட ரீதியாக மதிப்பிட்ட சொத்தொன்றுக்காக முக்கியமானதோ அல்லது முக்கியமற்றதோ மதிப்பிழப்பு மெய்யான சான்றொன்று காணப்படவில்லை என கம்பனி நிர்ணயிக்குமாயின் அது சொத்தினை அதனையொத்த கடன்இடர் பண்புகளுடன் கூடிய நிதிச்சொத்துக்களின் குழுமமொன்று உள்ளடக்குவதுடன் மதிப்பிழப்பிற்காக அவற்றை கூட்டாக மதிப்பீடு செய்கின்றது. மதிப்பிழப்பிற்காக தனியாக மதிப்பிழக்கப்பட்ட சொத்து மற்றும் மதிப்பிழப்பு நட்டத்திற்காக தொடர்ச்சியாக இனங்காணப்பட வேண்டியவை மதிப்பிழப்பின் கூட்டான மதிப்பீடொன்றில் உள்ளடக்குவதில்லை.

மதிப்பிழப்பு நட்டமொன்று ஏற்பட்டு வருகின்றது என மெய்யான சான்றொன்று காணப்படுமாயின் நட்டத்தொகையானது சொத்துகள் கொண்டு செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான (இன்னமும் ஏற்பட்டிருக்காத எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் நீங்கலாக) வேறுபாடாக அளவிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிகள் நிதியியல் சொத்தின் அடிப்படை விளைவு வட்டி வீதத்தில் கழிவு செய்யப்படுகின்றன. கடனொன்று மாறுபடும் வட்டி வீதத்தினை கொண்டிருக்குமாயின் ஏதேனும் மதிப்பிழப்பு நட்டத்தினை அளவிடுவதற்கான கழிவுவீதமானது நடைமுறை விளைவு வட்டிவீதமாகவிருக்கும்.

சொத்தொன்று கொண்டு செல்லும் தொகையானது ஏற்புவரம்பு கணக்கொன்றினை பயன்படுத்துவதன் ஊடாக குறைக்கப்படுவதுடன் இழப்புத் தொகை வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. வட்டி வருமானமானது குறைக்கப்பட்ட கொண்டு செல்லும் தொகை மீது தொடர்ந்து திரட்டப்படுவதுடன் மதிப்பிழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல்களை கழிவுசெய்வதற்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தினை பயன்படுத்தி திரட்டப்படுகின்றது. வட்டி வருமானது நிதி வருமானத்தின் பாகமொன்றாக வருமானக்கூற்றில் தெரிவு செய்யப்படுகின்றது. எதிர்கால கடன் அறவீட்டுக்கு ஐயமற்ற எதிர்பார்க்கையொன்று காணப்படாத போது கம்பனிக்கான அனைத்து பிணையை உறுதிகளும் தேறவுள்ள அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள போது கடன்கள் இணையப்பெற்ற ஏற்புவரம்புகளுடன் சொத்து பதிவழிப்புச் செய்யப்படுகின்றன. தொடர்ந்து வருகின்ற ஆண்டொன்றில் மதிப்பிழப்பு இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்கின்ற நிகழ்வின் காரணமாக மதிப்பிடப்பட்ட மதிப்பிழப்பு அதிகரித்தல் அல்லது குறைவடைதல் தொகை இருப்பின் முன்னர் இனங்காணப்பட்ட மதிப்பிழப்பு நட்டமானது ஏற்புவரம்புக் கணக்கினை சரிசெய்வதன் மூலம் அதிகரிக்கப்படுகின்றது அல்லது குறைக்கப்படுகின்றது. எதிர்கால பதிவழிப்பொன்று பின்னர் மீள அறவிடப்படுமாயின் அறவீடானது வருமானக்கூற்றின் நிதிச்செலவுகளுக்கு வரவு வைக்கப்படுகின்றது.

2.5.5.2 நிதியியல் பொறுப்புகள்

கம்பனியின் நிதியியல் பொறுப்புகளானவை வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை தொடர்புடைய தரப்பினருக்கான நிலுவை வங்கி மேலதிகப் பற்றுகள் மற்றும் வட்டியுடைன கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் ஆகியவற்றை உள்டக்குகின்றன.

ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்கெல்லையினுள் நிதியியல் பொறுப்புகளானவை இலாபம் அல்லது நட்டம் ஊடாகப் நியாயப் பெறுமதியில் உள்ள நிதியியல் பொறுப்புகள் கடன் மற்றும் கடனாக்கங்கள் அல்லது பொருத்தமானவாறு செயல்திறன்மிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக நியமிக்கப்பட்ட பெறுமதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலினை அதன் ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கின்றது.

அனைத்து நிதியியல் பொறுப்புகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் இனங்காணப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் தொடர்பில் பெறுமதிக் குறைப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன. இது நேரடியாக சாட்டத்தக்க செலவுகளை உள்ளடக்குகின்றது. ஆரம்ப நியாயப் பெறுமதிக்கும் உத்தேசத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு தொழிற்படுத்தல் வாடகை வருமானத்தின் கூறொன்றாக உள்ளடக்கப்படுவதுடன் ஏற்புடைய காலப்பகுதி மீது நேர்கோட்டு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

தொடர்கின்ற அளவீடு

நிதியியல் பொறுப்புகளின் அளவீடானது பின்வருமாறு இவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கிறது.

அ) கடன்களும் கடனாக்கங்களும்

ஆரம்ப இனங்காணலின் பின்னர் வட்டியுடைய கடன்களும் கடனாக்கங்களும் விளைவு வட்டிவீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதி குறைப்புச் செலவில் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுகைகளும் இழப்புகளும், பொறுப்புகள் இனங்காணாமையின்போது அத்துடன் விளைவு வட்டிவீத முறை பெறுமதி குறைப்புச் செயன்முறையினூடாகவும் வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

பெறுமதி குறைக்கப்பட்ட செலவானது கையேற்பின் மீதான ஏதேனும் கழிவையும் அல்லது கட்டுப்பணத்தையம் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றான கட்டங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு கணிக்கப்படுகின்றது. விளைவு வட்டியின் பெறுமதி குறைத்தலானது வருமானக்கூற்றில் நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றது.

இனங்காணாமை

பொறுப்பின்கீழுள்ள கடப்பாடு நிறைவேற்றப்படுகின்ற போது அல்லது இரத்துச் செய்கின்ற போது அல்லது காலாவதியாகின்ற போது நிதியியல் பொறுப்பொன்று இனங்காணப்படுவதில்லை. நடைமுறையிலுள்ள நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட

நியதிகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்து பதிலீடு செய்யப்படுகின்ற போது அல்லது தற்போது காணப்படுகின்ற பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமாக மாற்றியமைக்கின்ற போது அத்தகைய மாற்றம் அல்லது திருத்தம் மூல பொறுப்பின் இனங்காணாமையொன்றாகவும் புதிய பொறுப்பின் இனங்காணப்படுவதாகவும் கொள்ளப்படுவதுடன் தொடர்புடைய கொண்டு செல்லும் தொகைகளிலுள்ள வேறுபாடு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றது.

2.5.6 நியாயப் பெறுமதி அளவீடு

நியாயப் பெறுமதி என்பது அளவீட்டுத் திகதியன்று சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்கு முறையான கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்தொன்றினை விற்பனை செய்வதற்கு கிடைக்கப்பெறுகின்ற அல்லது பொறுப்பொன்றின் மாற்றலுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற விலையாகும். நியாயப் பெறுமதி அளவீடானது பின்வருவனவொன்றில் இடம்பெறுகின்ற சொத்தினை விற்பனை செய்வதற்கான அல்லது பொறுப்பினை மாற்றுவதற்கான கொடுக்கல்லாங்கல் முன் ஊகத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்துக்கான அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை - அல்லது
- சொத்துக்கான அல்லது பொறுப்புக்கான முதன்மைச் சந்தை இல்லாதவிடத்து மிகவும் அனுகூலமான சந்தை

முதன்மைச் அல்லது மிக அனுகூலமான சந்தையானது கம்பனி அணுகத்தக்கதாக இருக்க வேண்டும். சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் நியாயப் பெறுமதியானது தமது அதிகூடிய பொருளாதார நலனுக்காக சந்தைப் பங்கேற்பாளர்கள் செயற்படுகின்றனர் என்பதனை ஊகிக்கின்ற சொத்தினை அல்லது பொறுப்பினை விலை குறிக்கின்றபோது சந்தைப் பங்கேற்பாளர்கள் பயன்படுத்துகின்ற ஊகங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

நிதியியல் அல்லாத சொத்தொன்றின் நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு அதனை விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார நலன்களை ஈட்டுவதற்கான சந்தைப் பங்கேற்பாளர்ரொருவரின் இயலுமையினைக் கருத்திற் கொள்ளத்தக்கது.

சூழ்நிலைக்கு பொருத்தமான விலைமதிப்பீட்டு நுட்பங்களை கம்பனி பயன்படுத்தப்படுவதுடன் இதற்காக நியாயப் பெறுமதியினை அளவிடுவதற்கு தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகள் பயன்பாட்டினை உச்சப்படுத்துகின்ற மற்றும் அவதானிக்க முடியாத உள்ளீடுகள் பயன்பாட்டை குறைகின்ற போதிய தரவுகள் கிடைக்கப் பெறுகின்றன.

நிதியியல் கூற்றுக்களில் நியாயப் பெறுமதி அளவிடப்பட்டுள்ள அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து சொத்துக்களும் பொறுப்புகளும் மொத்தமாக நியாயப் பெறுமதி அளவீடுகளுக்கு முக்கியமாக விளங்குகின்ற குறைந்த மட்ட உள்ளீட்டினை அடிப்படையாகக் கொண்ட பின்வருமாறு விவரிக்கப்படும் நியாயப்பெறுமதி படிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்களுக்கு அல்லது பொறுப்புகளுக்கு செயற்பாடுமிக்க சந்தைகளில் குறிக்கப்பட்ட (சீர்செய்யப்பாடாத) சந்தை விலைகள்
- மட்டம் 2 - நியாயப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்குகின்ற குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாக அல்லது நேரடியற்று அவதானிக்கப்படுகின்ற விலைமதிப்பீட்டு நுட்பங்கள்
- மட்டம் - 3 நியாயப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்குகின்ற குறைந்தமட்ட உள்ளீடானது நியாயப்பெறுமதி வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக அவதானிக்க முடியாததாகவுள்ள விலைமதிப்பீட்டு நுட்பங்கள் சொத்தின் அல்லது பொறுப்பின் தன்மை பண்புகள் மற்றும் இடர்நேர்வுகள் மற்றும் மேலே விளக்கப்பட்டவாறு நியாயப் பெறுமதி ஒழுங்குமுறை என்பவற்றின் அடிப்படையில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வகுப்புகளை கம்பனி நிர்ணயிக்கின்றது.

2.5.7 பதிவேட்டுப் பொருட்கள்

பாவணைக்குதவாத மற்றும் மெதுவாக நகருகின்ற பொருட்களுக்கு உரிய ஒதுக்கீடுகளை மேற்கொண்டபின்னர் குறைந்த செலவிலும் நிகர தேறத்தக்க பெறுமதியிலும் விலைமதிப்பிடப்படுகின்றன. நிகரதேறத்தக்க பெறுமதி என்பது நிறைவு செய்வதற்கு மதிப்பிட்ட செலவு மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு என்பவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் பதிவேட்டு பொருட்களை விற்பனை செய்யக்கூடிய விலையாகும்.

பதிவேட்டுப் பொருட்களின் தற்போதைய அமைவிடத்திற்கு மற்றும் நிலைமைகளுக்கு அவற்றைக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட செலவுகள் பின்வரும் செலவுச் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றன.

திருத்த வேலைகளுக்கான நுகர்பொருட்கள், மோட்டார் உதிரிப் பாகங்கள் பொதுவான வன் பொருட்கள்	- நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் கொள்வனவுச் செலவில்
முடிவுப் பொருட்கள்	- உண்மையான கொள்வனவுச் செலவில்

2.5.8 ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் நாளாந்த நன்நிலைப்படுத்தல் செலவுகள் ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வினையும் பெறுமதியில் ஒன்றுசேர்ந்த மதிப்பிழப்பினையும் கழித்து கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. அத்தகைய கிரயங்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பாகத்தினை மாற்றீடு செய்கின்றபோது ஏற்படுகின்ற செலவு இனங்காணுதல் மூலப்பிரமாணத்தினை நிறைவு செய்யுமாயின் உள்ளடக்கப்படுகின்றது.

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணியானது பொறுப்பேற்கப்பட்டுள்ள மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இன்னும் பூர்த்தியடையாத நிலையிலுள்ள பணி மீது கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து தொகைகளையம் பிரதிநிதிப்படுத்துகின்றது.

காணியானது முடிவுற்ற ஆயுளை கொண்டிருப்பதாக கருதப்படுகின்றமையினால் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. தேய்மானமானது பயன்பாட்டுக்காக கிடைக்கப்பெறுகின்ற திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற அச்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது அவற்றின் எஞ்சியுள்ள பெறுமதிகளுக்கு ஒவ்வொரு சொத்தினதும் செலவினை ஒதுக்கீடு செய்வதந்காக நேர்கோட்டு முறை அடிப்படையில் கணிக்கப்படுகின்றது சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதுடன் மீது சொத்தானது இனங்காணப்படாத திகதியில் பெறுமானத் தேய்வு நிறுத்தப்படுகின்றது.

சொத்தினது எஞ்சியுள்ள பெறுமதிகள் பயன்பாடுமிக்க ஆயுட்காலங்கள் மற்றும் பெறமானத்தேய்வு முறை என்பன குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு ஏற்புடதாயின் சீர்செய்யப்படும்.

சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட மீளஅறவிடத்தக்க தொகையினை விட அது கொண்டுள்ள தொகை பெரிதாகவிருப்பின் சொத்து கொண்டுள்ள தொகையானது உடனடியாக பெறுமதி குறைக்கப்படும்.

கொண்டுள்ள தொகையுடன் பெறுகைகளை ஒப்பிடுவதன் மூலம் விற்பனைகள் மீதான வருவாய்களும் இழப்புகளும் நிர்ணயிக்கப்படுவதுடன் வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.5.9 அருவச் சொத்துகள்

அ) தொழில்முயற்சி வளத்திட்டமிடல் (ERP) முறைமையும் உரிமக் கட்டணங்களும்

கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் பிரயோகங்களின் உரிமங்களுடன் தொடர்புடைய செலவுகளை உரிமக் கட்டணங்கள் உள்ளடக்குகின்றன. உரிமக் கட்டணங்கள் திரண்ட பெறுமதிக்குறைப்பினை கழித்து கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. பெறுமதி குறைத்தலானது 5 வருடங்கள் கொண்ட அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது உரிமங்களின் செலவினை ஒதுக்கீடு செய்வதற்கு நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது

2.5.10 காசும் காசுக்கு சமமானவையும்

காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பது கையில் உள்ள காசு கேள்வி வைப்புக்கள் மற்றும் அறிந்த பணத்தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய அத்துடன் பெறுமதி மாற்றத்தின் முக்கியமற்ற இடருக்குட்படுகின்ற குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் என வரையறை செய்யப்பட்டவையாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசும் காசுக்கு சமமானவையும் கையிலுள்ள காசு நிலுவையாகவுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களைக் கழித்து வங்கியிலுள்ள வைப்புக்கள், ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மூன்று மாதங்கள் அல்லது அதனைவிடக் குறைந்த அடிப்படை முதிர்ச்சிகளுடனான முதலீடுகளும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்படுகின்றது.

2.5.11 நிதியமல்லாத சொத்துக்களின் மதிப்பிழப்பு

வரையறையற்ற பயன்பாடுமிக்க ஆயுட்காலமொன்றினைக் கொண்டுள்ள சொத்துக்கள் பெறுமதி குறைப்புக்கு கட்படுவதில்லை என்பதுடன் பெறுமதி குறைப்புக்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றன. பெறுமதிக்குறைப்பிற்கு உட்படுகின்ற சொத்துக்கள் அவை கொண்டு செல்கின்ற தொகையை அறவிடப்பட முடியாமலிருக்கலாம் என குறித்துக் காட்டுகின்ற சூழ்நிலைகளின் நிகழுகின்றபோது மதிப்பிழக்கப்படுகின்றது.

2.5.12 ஏற்பாடுகள்

கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்குகின்ற வள வெளிப்பாய்ச்சலொன்று தேவைப்படும் எனும் நிகழ்வு காணப்படுகின்றவிடத்து மற்றும் கடப்பாட்டின் தொகை பற்றி நம்பகத்தகுந்த மதிப்பீடொன்றினை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்ற விடத்து கடந்தகாலத்தின் விளைவொன்றாக கம்பனியானது தற்கால கடப்பாடொன்றினை (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கொண்டுள்ளபோது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடு சிலவற்றை அல்லது அனைத்தையும் மீள்நிரப்புவதற்க கம்பனி எதிர்பார்க்கப்படுகின்றபோது மீள்நிரப்பலானது தனியான சொத்தொன்றாக இனங்காணப்படுகின்றது. ஆயினும் மீள்நிரப்பலானது தோற்றநிலையில் நிச்சயமானதாக இருக்கும்போது மாத்திரமாகும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புடைய செலவானது ஏதேனும் மீள்நிரப்பலினை கழித்து வருமானக்கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பணத்தின் காலப்பெறுமதித் தாக்கம் முக்கியமானதாயின் பணத்தின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்ற வரிக்கு முந்திய வீதமொன்றில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அத்துடன் பொருத்தமானவிடத்து பொறுப்பிற்கான குறித்துரைத்த இடர்நேர்வுகளையும் கழிப்பதன் மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. கழிவுசெய்தல் பயன்படுத்துகின்றவிடத்து காலப்போக்கின் காரணமாக ஏற்பாட்டிலுள்ள அதிகரிப்பானது வட்டிச் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

2.6 ஊழியர் நலன்கள்

அ) வரையறை செய்யப்பட்ட ஊழியர் நலன்கள் - பணிக்கொடை

கம்பனியானது ஒவ்வொரு ஆண்டும் எதிர்வுகூறப்பட்ட அளவு வரவு முறை இனைப்பைப்பயன்படுத்தி கணிப்பீட்டாளரின் ஆலோசனையுடன் வரையறை செய்யப்பட்ட திட்டமொன்றான பணிக்கொடைக் கடப்பாட்டின் வாக்குறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய நலப்பெறுமதிகளை அளவிடுகின்றது. கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும் அதுதோன்றுகின்ற காலத்தில் ஏனைய அனைத்தையம் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

கணிப்பீட்டு வருவாய்களையம் இழப்புகளையும் இனங்காணுதல்

கணிப்பீட்டு வருவாய்களையும் இழப்புகளும் அவை தோன்றுகின்ற வருடத்தில் ஏனைய அனைத்தையம் உள்ளடங்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

ஆ) வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

கம்பனியானது வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றினையும் தொழிற்படுத்துகின்றது. வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டமொன்றுக்கு செல்லத்தக்க பங்களிப்பானது ஊழியர்கள் மூலம் கம்பனிக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான பங்கொன்றாகவுள்ளதுடன் "ஆளணிச்செலவுகள்" இன் கீழ் செலவொன்றாக பதிவு செய்யப்படுகின்றது. கொடுப்பனவு செய்யப்படாத பங்களிப்புகள் பொறுப்பொன்றாகப் பதிவு செய்யப்படுகின்றன.

கம்பனியானது பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றது.

ஊழியர் சேமலாப நிதியம்

கம்பனியும் ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளத்தில் (மேலதிக நேரம் நீங்கலாக) முறையே 15% மற்றும் 10% இனை பங்களிக்கின்றன.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தின் மேலதிக நேரம் நீங்கலாக 3% இனை கம்பனி பங்களிக்கின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையினால் நம்பிக்கை நிதியம் பராமரிக்கப்படுகின்றது.

மருத்துவ நன்மை திட்டம்

2017 செப்டெம்பர் வரை சிலோன் பெற்றோலியம் கோப்பரேசன் ரிப்ட் சொசைட்டி லிமிடட்டினால் சிபிஎஸ்டீஎல் நிறுவனத்தின் ஊழியர்களின் மருத்துவ நன்மைகள் முகாமைத்துவம் செய்யப்பட்டது. ஒக்டோபர் 2017 இல் இருந்து சிபிஎஸ்டீஎல் நிறுவனம் அதன் ஊழியர்களுக்கு குழு மருத்துவக் கொள்கையொன்றை காப்புறுதி கம்பனியிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளதுடன், காப்புறுதிக் கம்பனிக்கு கட்டப்படும் தவணைக் கட்டணங்கள் இலாப நட்டக் கணக்கில் அறவிடப்படுகின்றது.

2.7 வெளியிடப்பட்ட ஆனால் இன்னம் அமுல்படுத்தப்படாத இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தாக்கம்

2017 மார்ச் 31 அறிக்கையிடும் காலங்களுக்காக கட்டாயம் அல்லாத சில புதிய கணக்கீட்டு நியமங்களையும் தற்போது காணப்படுகின்ற நியமங்களுக்கான திருத்தங்களும் மேம்படுத்தல்களும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் எவையும் கம்பனியினால் முன்கூட்டியே பின்பற்றப்படவில்லை.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்கள்

2014 டிசெம்பரில் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனமானது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் இறுதியில் பதிப்பினை வெளியிட்டது. இது நிதியியல் சாதனங்கள் எதிர்வுகூறலின் அனைத்துக் கட்டங்களையும் பிரதிபலிப்பதுடன் இலங்கை அறிக்கையிடல் நியமம் 39 நிதியியல் சாதனங்கள் இனங்காணுதல் மற்றும் அளவீடுகளினை மாற்றீடு செய்கின்றது. நியாயமானது மதிப்பிழத்தலின் வகைப்படுத்தலுக்கான புதிய தேவைப்பாடுகளையும் அத்துடன் காப்பு கணக்கீட்டினையும் அறிமுகப்படுத்துகின்றது. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 ஆனது அனுமதிக்கப்பட்ட முன்கூட்டிய பிரயோகத்துடன் 2018 சனவரி 1 முதல் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலங்களுக்கு நடைமுறைக்கு வரும் பின்னோக்கிய பிரயோகம் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பீட்டுத் தகவல்கள் கட்டாயமானதன்று. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இல் இருந்தான சாத்தியமான தாக்கத்தினை இன்னும் முகாமைத்துவம் மதிப்பிட வேண்டியுள்ளது.

9. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம்

இந்நியமத்தின் குறிக்கோள் வருமானத்தின் தன்மை, தொகை, காலம் மற்றும் நிச்சயின்மை பற்றியும் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தமொன்றிலிருந்து தோன்றுகின்ற காசுப்பாய்ச்சல் பற்றியும் நிதியியல் கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு பயன்மிக்க தகவல்களை அறிக்கையிடுவதற்கு நிறுவனமொன்ற பிரயோகிக்கின்ற போட்பாடுகளைத் தாபிப்பதாகும்.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 2018 சனவரி 1 முதல் அமுலில் இருக்கும். இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 இலிருந்தான சாத்தியமான தாக்கத்தினை முகாமைத்துவம் இன்னும் அளவிடவில்லை.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 குத்தகைகள்

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் 2016 சனவரியில் குத்தகைகளுக்கான கணக்கீட்டுக்காக இ.நி.அ.நி. 16 குத்தகைகள் என்ற வழங்குநருக்கான குத்தகைகளுக்காக கணக்கீட்டினை புதிய நியமம் கணிசமாக மாற்றவில்லை. எவ்வாறாயினும் நேரொத்த பதிவழிப்பு சொத்துகளைப் பயன்படுத்தலுடன் குத்தகைப் பொறுப்புக்களாக தமது ஐந்தொகையில் அதிக குத்தகைகளை இனங்காண்பதற்கு குத்தகை எடுத்தவரை தேவைப்படுத்துவதில்லை. அனைத்து இனங்காணப்பட்ட குத்தகைகளுக்கும் குத்தகை எடுத்தவர்கள் தனி மாதிரியொன்றினை பிரயோகிக்க வேண்டும். ஆனால் "குறுகிய கால" குத்தகைகளையும் "குறைந்த பெறுமதி" சொத்துக்கள் குத்தகைகளையும் இனங்காணாத தெரிவினை கொண்டிருப்பவர். பொதுவாக இனங்காணப்பட்ட குத்தகைகளுக்கான இலாப அல்லது நட்ட இனங்காணல் முறையானது இலாப அல்லது நட்டக் கூற்றில் வேறாக இனங்காணப்படுகின்ற வட்டி மற்றும் பெறுமானத் தேய்வுடன் இன்றைய நிதிக் குத்தகை கணக்கீட்டினை ஒத்ததாகவிருக்கும்.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16ஆனது 2019 சனவரி 1 அன்று அல்லது அதன்பின் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலங்களுக்கு செயற்பாடுடையதாகும். முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு முன்னர் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமம் 15இனை நிறுவனமொன்று பிரயோகிக்க வேண்டும். குத்தகைதாரரொருவர் முன் முழுமையான முன்னேதிகதியிடப்பட்ட அல்லது திருத்தியமைக்கப்பட்ட முன்தேதியிடப்பட்ட அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி நியமத்தினை பிரயோகிப்பதனை தெரிவு செய்யலாம்.

இ.நி.அ.நி. 16 இலிருந்தான சாத்தியமான தாக்கத்தினை முகாமைத்துவம் இன்னமும் கணிக்கவில்லை.

இ.க.நி. 07 காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுக்கான திருத்தங்கள்

2016 செம்டெம்பரில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் நிதியியல் செயற்பாடுகளின் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தப்படும் நோக்கத்துடனும் அறிக்கையிடும் நிறுவனத்தின் நிலைமையினை பயன்பாட்டாளர்கள் சிறப்பாக புரிந்து கொள்வதற்கு உதவுவதற்கும் இ.க.நி. 7 காசுப்பாய்ச்சல் கூற்றுக்கிற்கான திருத்தங்களை வெளியிட்டது. புதிய தேவைப்படுத்தல்களின் கீழ் காசுப்பாய்ச்சல் மற்றும் காசல்லா விடயங்களிலிருந்தான மாற்றங்கள் போன்ற நிதியிடல் செயற்பாடுகளின் (உதாரணம் வெளிநாட்டு நாணய அசைவுகளின் காரணமாக வருவாய்கள் மற்றும் இழப்புகள்) விளைவொன்றாக தமது நிதியியல் பொறுப்புகளிலுள்ள மாற்றங்களை நிறுவனங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

சர்வதேச கணக்கீட்டு நியமம் 12 வருமான வரிகள் கீழுக்கான திருத்தங்கள்

2016 செம்டெம்பரில் இ.க.நி. 12 இற்கான திருத்தங்களை வெளியிடுவதன் மூலம் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமானது கணக்கீட்டுக்காக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட ஆனால் வரி நோக்கங்களுக்காக செலவில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள் பிறிபோடப்பட்ட வரிச் சொத்துக்களின் கணக்கீட்டு விதத்தினை விளக்கியது. 2017 சனவரி 1 முதல் திருத்தம் செயலில் இருக்கும் கம்பனியின் நிதியியல் கூற்றுக்கள் மீது திருத்தங்களைப் பின்பற்றுவது தாக்கங்களைக் கொண்டிருக்கும் என கம்பனி எதிர்பார்க்கவில்லை.

2.7.1 பங்குடமையாளர்கள் ஒப்பந்தம் மற்றும் பங்குவிற்பனை கொள்வனவு உடன்படிக்கை பொதுப்பயன்பாட்டாளர் வசதிகள் காலாவதியாதல்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை இந்தியக் கம்பனி பீஎல்சி மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் ஆகியவற்றுக்கிடையிலான பங்குடமையாளர்கள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வருமானமும் செலவினங்களும் சொல்லப்பட்ட நியதிகளையும் கம்பனியின் பணிப்பாளர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள அதனைத் தொடர்ந்து ஏதேனும் மாற்றங்களையும் கருத்திற் கொண்டதன் பின்னர் இந்நிதியியல் கூற்றுகளில் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

		2017 ரூபா	2016 ரூபா
3.	**வருமானம்**		
3.1	**செயன்முறைப்படுத்தல் வருமானம்**		
	முன்னைய வருமானம்	7,306,421,290	6,622,880,272
	தொழிற்படுத்தல் இலாபம்	3,264,482,431	2,958,442,733
	மீள்நிரப்பத்தக்க கடன் வட்டி	708,163,767	642,628,413
		11,279,067,487	10,223,951,417
	சேவைகளை வழங்குதல்		
	போக்குவரத்து வருமானம்	2,663,173,275	2,439,493,091
	கப்பல் எரிபொருள் வழங்கல் தொழிற்பாடு	233,906,148	-
		2,897,079,423	2,439,493,091
	மொத்த வருமானம்	14,176,146,910	12,663,444,509
4	**ஏனைய தொழிபடுத்தல் வருமானம்**		
	அலுவலர் கடன் மற்றும் ஏனையவை மீதான வட்டி	352,767,469	315,980,353
	ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனை மீதான வருவாய்	3,594,938	51,245,219
	வாடகை வருமானம்	9,451,537	9,557,417
	வெளியீடுகள் கட்டணங்கள்	1,050,000	2,700,000
	ஆய்வுகூட பரிசோதணைக் கட்டணங்கள்	51,377,845	41,750,932
	தனியார் பவுசர் சாரதிகள்/மோட்டர்களுக்கான பயிற்சி	7,232,797	5,068,773
	கழிவு விற்பனை	7,964,028	17,768,012
	தீயணைப்பு கருவிகளை செம்மைபார்த்தல்	7,050,482	9,997,033
	ஒப்புவமை கட்டணங்கள்	7,435,089	6,216,158
	சில்லறை வருமானம்	5,725,684	18,869,344
	சுற்றுலா விடுதி வருமானம்	840,425	882,205
	மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு	3,306,150	3,165,029
		457,796,444	483,200,474
5.	**நிதி வருமானமும் செலவுகளும்**		
5.1	**நிதி வருமானம்**		
	மீள் கொள்வனவு முதலீடுகள் மீதான வட்டி	164,547,193	84,761,790
	நிலையான வைப்பு முதலீடுகள் மீதான வட்டி	24,893,612	5,608,006
		189,440,805	90,369,796
5.2	**நிதிச் செலவு**		
	வங்கிக் கடன் வட்டி	124,072,738	166,775,397
		124,072,738	166,775,397

		2017 ரூபா	2016 ரூபா
6.	**வரிக்கு முந்திய இலாபம்** ***அறவிடுதல்/வரவு வைத்தலுக்கு பின்னர் குறிக்கப்பட்டது***		
	நேரடிச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டவை		
	தனிப்பட்ட செலவு	2,403,087,576	2,329,533,369
	ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு	755,314,575	694,018,639
	நிருவாகச் செலவில் உள்ளடக்கப்பட்டவை		
	பணிப்பாளர்களின் வேதனாதிகள்	7,479,373	5,322,273
	பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள்	2,305,000	2,030,000
	ஆளணிச் செலவு	2,783,783,740	3,130,050,416
